கார்டூனாயணம்

பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய கேலிச்சித்திரங்களும் சித்திரத்தொகுப்புக்களும்

பதிப்பாசிரியர்கள்

எம். எஸ். எஸ். பாண்டியன்
வீ. எம். எஸ். சுபகுணராஜன்
டிராட்ஸ்கி மருது

கார்டூனாயணம்

பேரறிஞர் அண்ணாவைப் பற்றிய கேலிச்சித்திரங்களும் சித்திரத்தொகுப்புக்களும்

பதிப்பாசிரியர்கள்

எம்.எஸ்.எஸ்.பாண்டியன்
வீ.எம்.எஸ். சுபகுணராஜன்
டிராட்ஸ்கி மருது

கயல் கவின்

நன்றி

இத்தொகுப்பில் உள்ள கேலிச்சித்திரங்களையும் சித்திரத் தொகுப்புகளையும் சேகரிக்க உதவிய நூலகங்களும் அன்பு உள்ளங்களும்:

அண்ணா அறிவாலயப் பேராசிரியர் ஆய்வு நூலகத்தின் நூலகர் பெரியவர் சுந்தரராசன், பத்மநாபன், செந்தில், அய்யா நீலமேகம், பெரியார் ஆவணக்காப்பக நூலகர், பொன்னேரி இளந்திரையன் நூலகம், நாகை சுயமரியாதை நூலகம், சென்னைப் பல்கலைக்கழக நூலகம், கன்னிமாரா நூலகம், அண்ணல் தங்கோ குடும்பத்தினர், ஆழ்வார்குறிச்சி தி.மு.க. நூலகம், மெயில் முனுசாமி குடும்பத்தினர், நவசக்தி இதழ்களைத் தந்துதவிய தமிழக காங்கிரஸ் கமிட்டியின் செய்தித் தொடர்பாளர் பண்பாளர் கோபண்ணா உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி உரித்தாகுக.

எம்.எஸ்.எஸ்.பாண்டியன்
வீ.எம்.எஸ். சுபகுணராஜன்
டிராட்ஸ்கி மருது

தயாரிப்புக்குழு

பதிப்பாசிரியர்கள்	–	**எம்.எஸ்.எஸ்.பாண்டியன்** **வீ.எம்.எஸ். சுபகுணராஜன்** **ட்ராட்ஸ்கி மருது**
பதிப்பு ஆலோசனை	–	**பேரா.இரா. பாவேந்தன்** **ஓவியர் பாபு** **எழுத்தாளர் ஆ. சிவமுருகன்**
வடிவமைப்பும் அட்டை வடிவமைப்பும்	–	**ட்ராட்ஸ்கி மருது**
வடிவமைப்பு உதவி	–	**இராம், கருணாநிதி**
ஸ்கேனிங்	–	**காஞ்சனா, ஸாப்ட் டச், சென்னை**
ஒளியச்சு	–	**சுவடி, சென்னை**
அச்சாக்கம்	–	**எஸ்ஸார் பிரிண்டர்ஸ், சிவகாசி**

உள்ளடக்கம்...

- திராவிடச் சித்திரங்கள் – 7
- சித்திர அரசியல் – 15
- கேலிச்சித்திரங்களால் வாசிக்கப்பட்ட வரலாறு – 18
- கார்டூனாயணம் – 33
- பேரறிஞர் அண்ணா பற்றிய கேலிச்சித்திரங்களும் சித்திரத் தொகுப்புகளும் – 55

கார்டுனாயணம் • கேலிச்சித்திரங்களும் சித்திரத்தொகுப்புக்களும் • பதிப்பாசிரியர்கள்: எம்.எஸ்.எஸ்.பாண்டியன், வீ.எம்.எஸ். சுபகுணராஜன், டிராட்ஸ்கி மருது • முதல் பதிப்பு: அக்டோபர் 2009 • வெளியீடு: கயல்கவின் புக்ஸ், 16/25, இரண்டாம் கடல் போக்குச் சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை – 600 041. தொலைபேசி: 044–4202 0389. மின்னஞ்சல்: kayalkavin@gmail.com • நூல் வடிவமைப்பு: ட்ராட்ஸ்கி மருது, இராம், கருணாநிதி • அட்டை வடிவமைப்பு: ட்ராட்ஸ்கி மருது • அச்சாக்கம்: எஸ்ஸார் பிரிண்டர்ஸ், சிவகாசி.

வடிவம்: டெம்மி 1 x4 • தாள்: 18.6 கி. மேப்லித்தோ

• பிரதிகள்: 1200 • பக்கம்: 272

விலை: ரூ 500

திராவிடச் சித்திரங்கள்

டிராட்ஸ்கி மருது

ஒரு மாலைப்பொழுதில் நானும் நண்பர்கள் வீ.எம்.எஸ். சுபகுணராஜன், எம்.எஸ்.எஸ். பாண்டியன் ஆகியோரும் சந்தித்தபோது உருவானதுதான் 'கார்டூனாயணம்'. பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழாவின்போது, இவ்வாறான சித்திரத்தொகுப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்னும் முடிவை அப்போது எடுத்தோம். அந்தக் கனவு சற்றுத் தாமதமாக நிறைவேறியுள்ளது.

தி.மு. கழகத்திற்கும் ஓவியங்களுக்கும் இடையேயுள்ள தொடர்பு பற்றி ஆய்வுலகில் இன்னும் பேசப்படவில்லை. பிறப்பின் அடிப்படையில் அமைந்த இழிவை நீக்கவும், வகுப்புரிமை வேண்டியும், மொழி காக்கவும் போராடிய தூரிகைகளின் வரலாறுகள் மறக்கப்பட்டுவிட்டன. மறக்கப்பட்ட வரலாற்றை நனவுநிலைக்குத் திருப்ப, இந்தத் தொகுப்பு உதவக்கூடுமென்றால் அதைவிட மகிழ்ச்சி எனக்கு வேறு இல்லை. நவீன ஓவியங்களை வெகுசன மக்களிடம் எடுத்துச்செல்ல தி.மு.க. முயன்றது என்றும் தி.மு.க. மாநாடுகளில் நவீன ஓவியக் கண்காட்சிகள் நடத்தப்பட்டன என்றும் நான் கூறினால் சிற்றிதழ் வட்டாரங்களும் முற்போக்கு முகாம்களும் அதிர்ச்சியடையக் கூடும். தி.மு. கழகத்தின் இரண்டாவது மாநில மாநாடு திருச்சியில் நடைபெற்றபோது நவீன ஓவியக் கண்காட்சிக்கூடம் அமைக்கப் பெற்றிருந்தது. ஆர்.எம். கோபால் என்னும் ஓவியர் அந்தக் கூடத்தை அமைத்திருந்தார். 'புரட்சிகர அறிவு ஓவியங்கள்' என அந்த நவீன ஓவியங்களுக்குப் பெயர் சூட்டியிருந்தார். "திராவிடத்திற்கென்று தனிப் புகழைத் தேடித்தரும் நவீன ஓவியத்தைத் தோழர் ஆர்.எம். கோபால் வளர்த்து வருவது போற்றி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். தோழர் அவர்கள் ஆரம்பத்திலேயே உயர்ந்த படிக்குப் போய்விட்டார். அவரது ஓவியம் எல்லோராலும் அவ்வளவு எளிதில் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகக் காணப்பட்டாலும் அதில் ஆழ்ந்த கருத்தும் புரட்சி தன்மையும் செறிந்திருக்கக் காணலாம்" என்று அந்த ஓவியக் கண்காட்சிக்கு 'மன்றம்' இதழ் விமர்சனம் எழுதியது.

எழுத்துத்துறையிலும் மேடையிலும் சமூக, பண்பாட்டு மாற்றங்களை வலியுறுத்திய இயக்கம் ஓவியத் துறையையும் தன் ஆயுதமாக்க எடுத்த முயற்சிதான் இது. கவிதையில் 'பாரதிதாசன்' என்னும் ஒரு திராவிடத்தடம் அழுத்தமாகப் பதிவானதுபோல் ஓவியத்தில் இவ்வாறான ஒரு தடம் ஏன் பதிவாகவில்லை? ஆனால், திராவிட இயக்கத்தின் போராட்டக்களத்தில் தூரிகைகளும் தொடர்ந்து இயங்கி வந்தன. திராவிடர்களுக்கு என்று தனி ஓவியமரபு இருந்ததா? ஆரிய ஓவியமரபுக்கும் திராவிட ஓவியமரபுக்கும் என்ன வேறுபாடு என்றெல்லாம் திராவிட இயக்க ஏடுகள் விவாதித்தன. தமிழ் இதழ்கள் திராவிட ஓவியமரபைப்

பேணாமல் ஆரியமரபின் அடிப்படையில் ஓவியங்களை வரைகின்றன என்ற குற்றச்சாட்டுகூட அப்போது வைக்கப்பட்டது.

தி.மு. கழகத்தினரின் இந்த ஓவிய ஆர்வம் வியப்பளிக்கின்றது. தி.மு. கழகத்தின் உள்ளாக நடைபெற்றுவந்த இவ்வாறான ஓவிய முயற்சிகளின் தலைமையகம் என்று நாகை தி.மு. கழக அலுவலகத்தைக் கூறமுடியும். அக்கால நாகை தி.மு. கழக அலுவலகத்தில் ஓவியப்பகுதி, சித்திரப்பகுதி, புகைப்படப் பகுதி, நூலகம் முதலியன இயங்கிவந்தன. திராவிட இயக்கத் தலைவர்களின் படங்கள், வால்ட்விட்மன், இங்கர்சால், பெர்னாட்ஷா, சாக்ரடிஸ், பிளாட்டோ, அரிஸ்டாட்டில், ரூசோ, மாஜினி என எண்ணற்ற ஓவியங்கள் ஓவியப்பகுதியில் இருந்தனவாம். திராவிடர் அன்று, திராவிடர் இன்று, மாஜி கடவுள்கள், ஆரிய இனத்தின் வளர்ச்சி முதலிய தலைப்புகளில் வரையப்பட்ட விளக்க ஓவியங்களும் இடம்பெற்றிருந்தனவாம். மேலைநாடுகளில் மனித வாழ்க்கை, அவற்றின் நாகரிகம், திராவிடக் கலைகள், திராவிடர் இனவரலாறு, பல்வேறு நாடுகளின் நிலப்படங்கள் உள்ளிட்ட இன்ன பிறவும் சித்திரப்பகுதியில் (கோட்டுச் சித்திரங்கள்) இருந்துள்ளன. தி.மு.க. மாநாட்டுப் புகைப்படங்கள், பொதுக்குழு புகைப்படங்கள், தி.மு.க. தலைவர்களின் புகைப்படங்கள், தி.மு. கழகக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எனப் புகைப்படப்பகுதி அமைந்திருந்ததாம். நாகை தி.மு. கழகத்தின் இந்தப் பண்பாட்டுச் செயல்பாடுகள் இடையில் ஏன் அறுந்துவிட்டது என்பது சிந்தனைக்குரியது.



இவ்வாறு தனக்கென ஒரு ஓவியச் செயல்பாட்டை வகுத்துக்கொண்ட தி.மு. கழகத்தில் கேலிச்சித்திரங்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. காங்கிரஸ் அரசின் அடக்குமுறைகளை விமர்சிக்கும் பிரமாண்ட கேலிச்சித்திரங்களை மாட்டுவண்டிகளில் கட்டி, உடன்பிறப்புகள் ஊர்வலங்களில் வருவார்கள். இந்தக் கேலிச்சித்திரங்களில் பெரும்பாலன, திராவிட இயக்க இதழ்களில் வந்தவையாக இருக்கும்; அல்லது ஏதோவொரு தி.மு.க. தொண்டரின் சிந்தனையாகக் கூட இருக்கும். கழகக் கூட்டங்களின்போது இந்தக் கேலிச்சித்திரத் தட்டிகள்

தெருக்களின் இருபுறமும் வைக்கப்பட்டிருக்கும். தி.மு. கழகத்தின் இந்த எளிய பிரச்சாரச் செயல்பாட்டைப் பின்னாளில் காங்கிரஸ் தொண்டர்களும் மேற்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. 'முரசொலி', 1960ஆம் ஆண்டுக்கு முன்பு வாரஇதழாக வெளிவந்தபோது, பெரும்பாலும் கேலிச்சித்திரங்களை முகப்பில் தாங்கிவெளிவந்தது. முரசொலி மட்டுமன்று; மாலைமணி உள்ளிட்ட திராவிட இயக்க ஏடுகள் பல அரசியல் கேலிச்சித்திரங்களைப் பிரசுரித்து வந்தன. அரசியல் கருத்துகள் எளிதாக மக்களைச் சென்றடையும் வண்ணம் திராவிட இயக்க ஏடுகள் கேலிச்சித்திரங்களை வெளியிட்டன என்று கூறமுடியும். சுதேசமித்திரன், நவசக்தி முதலிய ஏடுகள் தி.மு. கழகக் கருத்தியலுக்கு எதிரான கேலிச்சித்திரங்களை வெளியிட்டபோது அவற்றை எதிர்த்துக் கழக ஏடுகள் விமர்சனங்களை எழுதின.

அதுபோன்று, திராவிட இயக்க ஏடுகள் வெளியிட்ட கேலிச்சித்திரங்கள் காங்கிரஸ்காரர்களை எரிச்சலடைய வைத்தன. "முன்பக்கத்தில் போடப்படுகின்ற கேலிச்சித்திரம் ஒவ்வொன்றும் அவர்களை (காங்கிரசுகாரர்களை) எரிமலையாக்குகின்றன. அருப்புக்கோட்டையிலே கருமாதி என்று கேலிச்சித்திரம் போட்டிருந்தோம். இதைக் கண்டு ஆத்திரப்படாத காங்கிரஸ்காரர்களே கிடையாது. பாண்டிச்சேரியிலே நாம் தோற்றபோது அவர்கள் நம்மைப் பார்த்துச் சொன்னதுதான் இது. அப்போது அவர்கள் அரசியல் நாகரிகத்தோடு நடந்து கொண்டிருந்தால் நாமும் இந்தக் கேலிச்சித்திரத்தை இப்போது போட்டிருக்கவே மாட்டோம். பலமில்லாத காங்கிரஸ் கட்சி கயிற்றில் தொங்குவதுபோல ஒரு கேலிச்சித்திரம் போட்டிருந்தோம். இது காங்கிரஸ்காரர்களுக்கு உச்சிமுதல் உள்ளங்கால்வரை எரிச்சலை ஊட்டி இருக்கிறது" என்று 1960களில் வெளிவந்த மாலைமணி இதழ், தன் கேலிச்சித்திரங்களின் செயல்பாடுகள் பற்றித் தலையங்கமே எழுதியிருந்தது. திராவிட இயக்க ஏடுகளிலே 'முரசொலி' இதழ்தான் கேலிச்சித்திரங்களுக்கும் சித்திரத் தொகுப்புக்களுக்கும் அதிக முக்கியத்துவம் தந்த இதழாகும். இங்கு மீள்பிரசுரம் செய்யப்பட்டிருக்கும் முரசொலியின் சித்திரத் தொகுப்புகளே இதற்கு எடுத்துக்காட்டு. முரசொலியின் கேலிச்சித்திரங்களையோ அல்லது சித்திரத்தொகுப்புகளையோ உற்றுநோக்கினால் சித்திரக்காரரும் இதழின் ஆசிரியரும் இணைந்து செயல்பட்டிருப்பது புலனாகும். இல்லையெனில் மந்திரவாதி கதைகளாகவே வெளிவந்த 'நாளிதழ் சித்திரக்கதைத் தொடர்கள்' முரசொலியில் தி.மு.க. வரலாறாக உருப்பெற்றிருக்காது. மூடநம்பிக்கைகளை ஊட்டும் "பரமபதசோபன படம்", புதிய பரமபதபடமாக வெளிவந்திருக்க முடியாது. முரசொலி சித்திரங்களில் பெரும்பாலன 'செல்லம்' வரைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

திராவிட இயக்க ஏடுகள் கேலிச்சித்திரங்களை வெளியிடுவது மட்டுமல்லாமல், மற்ற ஏடுகள் வெளியிடும் சித்திரங்களுக்குப் பதிலளிக்கும் பணியையும் செய்து வந்தன. 29.5.1966 நாளிடப்பட்ட விகடனில் கேலிச்சித்திரம் ஒன்று வெளியானது; காமராசரின் பிரம்மாண்டமான சிலை ஒன்று பீடத்தில் நிற்கின்றது; அதில் கயிற்றைக் கட்டி இராஜாஜி, அண்ணா, காயிதேமில்லத் முதலியோர் கடினப்பட்டு இழுப்பதாகவும், ஆனால் சிலையோ இம்மிகூட அசையாமல் கம்பீரமாக நிற்பதாகவும்

அந்தக் கேலிச்சித்திரம் வரையப்பட்டிருந்தது. இதற்கு முரசொலி பதிலளிக்கும் விதமாக "கேலிச்சித்திரம் வரைந்த விகடனே! காலம் வரைந்த சித்திரம் காண்! விகடனுக்குக் காணிக்கை" என்னும் தலைப்பில் சிறுகட்டுரை ஒன்றை *29.5.1966* அன்று படத்தோடு வெளியிட்டது.

"அசைக்க முடியாதாம் காமராசரின் காங்கிரசை! ஆனந்தவிகடன் ஒரு கேலிச்சித்திரம் தீட்டியுள்ளது: பாவம் — காங்கிரசின் காலடியில் வீழ்ந்துவிட்ட அந்த ஏடு வரலாறுகளை மறந்து காங்கிரசுக்கு வால்பிடிக்கும் ஏடாக மாறிவிட்டதற்கு அனுதாபப்படுகின்றோம். இதோ அருகில் காலம் வரைந்த சித்திரம் உள்ளது பாருங்கள்! இந்த மனிதர் 'என்குருமா!' இவர்தான் ஒரு காலத்தில் கானா நாட்டின் இரட்சகர் என்று பாராட்டப்பட்டார். ஆனால் வழிபட்ட பக்தனையே பலிகேட்ட தெய்வம் போல் இவர் தன் மக்களையே அடக்குமுறையில் தள்ளினார். நாட்டைத் தன் சுகபோகத்திற்குக் கருவியாகப் பயன்படுத்தினார். சர்வாதிகாரியாக மாறி வெறிக்கூத்தாடினார்; தான் மட்டுமே தலைவர் என்றார். தன்னுடைய கட்சி மட்டுமே கட்சி என்றார். முடிவு என்ன? இரட்சகன் என்று நம்பிய மக்களே ராட்சசன் ஒழிய மாட்டானா? என்று குமுறினார்கள். குமுறலின் பயனாய் என்குருமாவின் ஆட்சி கவிழ்ந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக இந்தத் தேசத்திற்கு ஏகக்கடவுள் நானே என்பது போல் கானா பாராளுமன்றத்திற்கு முன்னின்ற என்க்ருமாவின் சிலையை உடைத்துக் கீழே தள்ளினர். பெரும்சக்தி எனக்கு உண்டு என்று இறுமாந்திருந்த என்குருமாவுக்கு ஏற்பட்ட நிலையை, எதிர்க்கட்சிகளைக் கேலிசெய்து சித்திரம் வரைந்த விகடனே! பார்! காலம் வரைந்த இந்தச் சித்திரத்தைப் பார்த்தாவது விகடனுக்குக் கண் திறக்குமா?" இவ்வாறு முரசொலி அந்தக் கட்டுரையை முடித்திருந்தது. வீழ்ந்துபட்ட என்க்ருமாவின் சிலை மீது மக்கள் ஏறிமிதிக்கும் புகைப்படத்தை முரசொலி 'டைம்' ஏட்டிலிருந்து மீள்பிரசுரம் செய்திருந்தது. முரசொலி *29.5.1966* அன்று எழுப்பிய எதிர்ப்புக்கு *1967*இல் பதில் கிடைத்தது என்பது சுட்டத்தக்கது.

தன்னுடைய கருத்தியலை விமர்சித்த கேலிச்சித்திரங்களுக்கு மட்டும் முரசொலி பதிலளிக்கவில்லை; விளிம்புநிலை மக்களான சலவையாளர் சமூகத்தைக் கிண்டலடித்து *3.4.1966* நாளிடப்பட்ட ஆனந்த விகடன் இதழில் கேலிச்சித்திரம் ஒன்று வெளிவந்தது. இதை உடனடியாக வாபஸ்பெற வேண்டுமென்று முரசொலி முதல்பக்கத்தில் செய்தி வெளியிட்டது. முரசொலியின் கேலிச்சித்திரங்களில் சில அன்றைய காங்கிரஸ் ஆட்சியாளர்களுக்குக் கடும் எரிச்சலை ஏற்படுத்தின. அது எதுவரை சென்றது என்றால், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத்தலைவரும் தி.மு.க.வின் பொருளாளருமான கலைஞர் மு. கருணாநிதியைக் கைதுசெய்யுமளவுக்குச் சென்றது. *16.2.1965* அன்று கைதுசெய்யப்பட்ட கருணாநிதி பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டார். இதன்பின் சென்னை உயர் நீதிமன்றத்தில் அபிடவுட் ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த அபிடவுட் திராவிட இயக்க ஏடுகளால் வரையப்பட்ட கேலிச்சித்திரங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும். "முரசொலியில் வெளியான கார்ட்டூன்கள் முதலமைச்சரை (பக்தவத்சலத்தை) ஆத்திரமடைய செய்திருக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கின்றேன். *19.1.1965* முரசொலியில் வெளியான கார்ட்டூன்

தமிழ்த்தாயை முதலமைச்சர் பக்தவத்சலம் சுட எத்தனிப்பதாகச் சித்தரிக்கிறது. 29.1.1965 முரசொலி கார்ட்டூன் தமிழுக்காக இந்தித்திணிப்பை எதிர்த்து தியாகம் செய்துகொண்ட நால்வரது நரபலியில் முதலமைச்சர் பக்தவத்சலம் திருப்திப்படுவதாகச் சித்தரிக்கின்றது. 5.2.1965 முரசொலி கார்ட்டூன் முதலமைச்சர் பதவியை பக்தவத்சலம் கேலி செய்வதாகச் சித்தரிக்கின்றது. 3.2.1965 கார்ட்டூன் பக்தவத்சலத்தை ஜெயிலராகச் சித்தரிக்கின்றது. 7.2.1965 கார்ட்டூன் முதலமைச்சர் பக்தவத்சலம் பழைய இந்தி — மதுவையே பரிமாறுவதாகக் காட்டுகின்றது. 12.2.1965 கார்ட்டூன் முதலமைச்சர் பக்தவத்சலம் ஒரு போலீஸ்காரராக மக்களைச் சுடுவது போலவும் அதைப் பார்த்து ‘ஜாலியன்வாலாபாக்’ புகழ் ஜெனரல் டயரின் ஆவி புகழ்வதாகக் காட்டுகின்றது. இராணுவம் வரவழைக்கப்பட்டதை ஒட்டி வெளியான இன்னொரு கார்ட்டூன் முதலமைச்சரை ஒரு மேஜர் ஜெனரலாகக் காட்டுகின்றது” என்று அந்த அபிடவுட் விரிந்து செல்லும். திராவிட இயக்க ஏடான முரசொலியின் கேலிச்சித்திரங்கள் ஒரு அரசாங்கத்தையே கோபப்படவைத்தன என்றால் கேலிச்சித்திரத்தின் வீரியம் எந்தளவு பாயும் என்று இப்போது விளங்கியிருக்கும். இவ்வாறு திராவிட இயக்கத்தினரின் கேலிச்சித்திரங்கள் விவாதங்களுக்கும் எதிர்ப்புக்கும் ஏச்சுக்கும்பேச்சுக்கும் ஆளாகின.

பேரறிஞர் அண்ணா அவர்கள். கேலிச்சித்திரங்களின் இரசிகர். அவருக்கு ஓவியங்களின் மீதும் ஆர்வம் இருந்தது. கேலிச்சித்திரங்கள் பற்றி அவர் எழுதிய ‘கார்டூனாயணம்’ என்னும் கட்டுரை இத்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் ஆதரவு ஏடுகளாலும், பார்ப்பன ஏடுகளாலும் வரையப்பட்ட கேலிச்சித்திரங்களில் பெரும்பாலான தி.மு. கழக எதிர்ப்புச் சித்திரங்களே ஆகும். இத்தகைய எதிர்ப்புச் சித்திரங்களின் கிண்டலை தி.மு. கழகத்தினர் எவ்வாறு எடுத்துக்கொண்டனர்? இதற்கு அண்ணாவே பதில் தருகின்றார்:

“நானும், இராஜாஜி, காயிதேமில்லத் ஆகியோரும் ஒரு கழுதை மீது சவாரி செய்வதாக ‘விகடன்’ படம்போட்டுக் காட்டிற்று. நண்பர்கள் வருத்தப்பட்டார்கள். நான் சமாதானம் சொன்னேன். கழுதை மீது சவாரி செய்வதாகத்தானே படம்; கழுதையாகவே சித்தரிக்கவில்லையே என்று. இப்படி ஏதாவது ஒரு சமாதானம் சொல்லிவிட்டால் போதுமா என்று சலித்துக் கொண்டார்கள். விகடன் அதிபர் காங்கிரஸ்காரர்! ராஜ்யசபை உறுப்பினர். அவர் எதிர்க்கட்சிகளைக் கேலிப்படம் மூலம் கேவலப்படுத்துகின்றார். அது பண்பு அல்ல என்றாலும் அது அவர் தம்முடைய கட்சிக்காகச் செய்யும் சேவை என்று கருதிக் கௌ்ளக்கூடும். அவர் என்னிடம் இதைத்தான் எதிர்பார்க்கலாம் என்று கூறும்போது அவரிடம் வேறு எதிர்பார்க்க நமக்கு எது உரிமை? மலக்குழி என்று போர்டு போடப்பட்டுள்ள இடத்தில் நின்றுகொண்டு மல்லிகை மணம் வீசக் கூடாதா என்று கூறுவதும் எதிர்பார்ப்பதும் மிகப் பெரிய தவறு” என்று கூறினார். கேலிச்சித்திரங்கள் தொடர்பாக இப்படியொரு அரசியல் அறத்தை அண்ணா பின்பற்றினார். ஆனால் தமிழக காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான “நவசக்தி” அண்ணாவைத் தலையிழந்த முண்டமாகக் கேலிச்சித்திரம் வரைந்தது. காங்கிரஸ் கட்சியின் இந்தப் பண்பாட்டை எடுத்துக்கூறும் சித்திரங்கள் பல, இத்தொகுப்பில்

இடம்பெற்றுள்ளதை நீங்கள் காணலாம்.

தமிழ் இதழ்களில் வெளிவந்த கேலிச்சித்திரங்களை ஆவணப்படுத்த வேண்டும்; கேலிச்சித்திரங்களும் ஒரு ஆய்வாதாரமாகத் தமிழியல் ஆய்வில் இடம்பெற வேண்டும். அதற்கான தொடக்கமே இது.

முன்பு நான் கூறியவை வரலாறு; இனிமேல் கூறப்போவன என் சொந்த வாழ்க்கையிலிருந்து...

என்னுடைய பள்ளிநாட்களில் நேரடியாகக் கலந்துகொள்ளும் அளவிற்குத் தள்ளியது இந்திஎதிர்ப்புப் போராட்டம். நாங்கள் பூர்வீகமாக இருந்த கோரிப்பாளையத்தில் இயங்கிவரும் அமெரிக்கன் கல்லூரியின் பங்கு, அனைத்துக் கல்லூரிகளின் போராட்ட முன்னெடுப்பு என்றபின் தமிழகமே கொதித்தெழுந்தது அனைவரும் அறிந்ததுதான். காந்தியின் வார்தா ஆசிரமத்தில் இருந்துவிட்டுத் திரும்பியபின், இலங்கையிலிருந்து தலைமறைவு வாழ்விற்காக வந்த கொல்வின். ஆர்.டி. சில்வா, என்.எம். பெரரைரா ஆகியோரின் தொடர்பால் டிராட்ஸ்கிஸ்ட்டாக மாறிய என் தந்தையார் எம்.ஆர். மருதப்பன் இயல்பாகவே காங்கிரஸ் எதிர்ப்பாளர். அதனால் தமிழ்நாடு, ஆனந்தவிகடன் மற்றும் சில பத்திரிகைகளோடு முரசொலியும் தொடர்ந்து எங்களுக்குப் பார்க்கக் கிடைத்தது. கூடவே எங்களது கொட்டடத்தில் குடியிருந்த மேகநாதன், கோரிப்பாளையத்தில் இப்போது இருக்கிற தேவர்சிலைக்கு அருகில் குமரன்நாயர் வைத்திருந்த 'மீனாட்சி விலாஸ்' ஹோட்டலுக்கு அருகே பெட்டிக்கடை வைத்திருந்தார். அங்கு நான் சேமித்த காசை வைத்து 'கண்ணன்' பத்திரிகை வாங்கச் செல்வேன். மேகநாதன் கடைமுழுவதும் திராவிட இயக்கத் தலைவர்கள் நடத்தும் பத்திரிகைகள்தான் தொங்கும். பத்திரிகைகளுக்கு ஊடேதான் தலையைக் கொடுத்து அவரைப் பார்க்க முடியும். பெட்டிக்கடை உயரம்கூட அல்லாத என்னிடம், என் தந்தை கொடுத்துவிடச் சொன்னதாக பல பத்திரிகைகளை அவ்வப்போது கொடுத்து அனுப்புவார். என் தந்தையாரும் அப்பத்திரிகைகளில் வருகிற உலகச் செய்திகளையும் பெரும் சிந்தனையாளர்கள் பற்றிய கட்டுரைகளையும் காட்டி 'இதைப் படிடா' என்று எனக்கும் என் சகோதரர்களுக்கும் சொல்வார்.

என் தந்தையாருடைய சேகரிப்பில் 'திராவிடநாடு' இதழ்த் தொகுப்புக்கள் இருந்தன. திராவிடநாடு இதழ்த் தொகுப்பில் இருக்கிற புராணங்களைக் கேலிசெய்யும் சித்திரத்தொகுப்பையும் பாரதிதாசனின் 'குயில்' சேகரிப்பில் இருக்கிற கே. மாதவனின் ஓவியங்களையும் நான் அந்தச் சிறுவயதில் வெகுவாக இரசிப்பேன். அப்போது மதுரை எர்ஸ்கின் மருத்துவமனையின் முன்பு உள்ள குதிரைவண்டி லாயத்திற்கு அருகில் வரிசையாகப் பெட்டிக்கடைகள் இருக்கும். விதவிதமாகத் தமிழரின் வாழ்வை ஓவியமாக வரைந்த கே. மாதவனின் ஓவியப்படைப்புத் தாங்கிய பொங்கல் வாழ்த்துகளை ஒன்றுவிடாமல் ஓடி, ஓடிச் சேகரித்துவைத்து யாருக்கும் அனுப்பாமல் இரசித்துக்கொண்டே இருப்பேன்.

தெளிவான அரசியல் பின்னணி கொண்டிருந்த என் தந்தை, எங்களுக்கு அளித்த புத்தகங்கள், பார்க்கக் கொடுத்த உலக ஓவியங்கள், புகைப்படங்கள், பத்திரிகைகள் என்பனவோடு தந்தைப் பெரியாரைப் பற்றியும் அறிந்துகொண்டேன். உலகப் பொதுவுடைமை இயக்க வரலாறு,

திராவிட இயக்க வரலாறு தொடர்பான நூல்களும் ஓவியர் கே. மாதவன் அவருடைய சீடர் ஆர். நடராஜன், முரசொலி கேலிச்சித்திரக்காரர் செல்லம் ஆகியோருடைய படைப்புகளும் பரவலாகக் கிடைக்கிற வாரப்பத்திரிகை ஓவியங்களோடு எனக்கு உரிய வயதிலேயே கிட்டியது.

பண்டைக்காலம் தொட்டு உயரிய ஓவிய வரலாறு, தமிழ் ஓவிய வரலாறு. அதிலும் கடந்த 150 ஆண்டுகால வளர்ச்சி அற்புதமானது. காலனீய தொடர்பு நிலை ஓவியம், பின் அதன் பாதிப்பில் ராஜாரவிவர்மா, அதன் பாதிப்பில் பம்பாய் திரைப்படகர்த்தா தாதாசாகேப் பால்கே, பின் அவர் பார்வையின் பாதிப்பில் வெளிவந்த மராட்டிய சினிமா, மராட்டிய சினிமாவின் பாதிப்பில் தமிழக சினிமா, இதன் ஊடே தென்னிந்தியாவில் முதலில் தோன்றிய ஓவியக் கல்லூரி, அதில் பணியாற்றிய ராய் சவுத்திரி, தமிழ் நாடகத்தில் ஓவியர்களின் பங்கு, சென்னை ஓவியக் கல்லூரியிலிருந்து நாடகவழியில் சிவகாசி காலண்டர் ஓவியத்திற்குக் கொண்டையராஜு, திருவிதாங்கூர் ஓவியவழியிலிருந்து கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மூலம் தமிழ்த்திரை உலகிற்கும் பின் திராவிட இயக்க வெளிப்பாட்டிற்கும் கே. மாதவன், இதன் ஊடே காலண்டர் ஓவியப் பதிப்பு, பத்திரிகை பதிப்பு மூலம் ஒரு பத்திரிகை ஓவியப்பாணியாகத் தமிழகப் பத்திரிகையில் கோபுலு, மணியம் முதலியோர் இத்துடன் ஓவியக் கல்லூரி — சிற்பி தனபால், பாரதிதாசன், தோழர் ஜீவா, என். எஸ். கிருஷ்ணன் என்று வரலாறு நீண்டுகொண்டே செல்லும். ஓவியர் ஆதிமூலமும் அவரைத் தொடர்ந்து வரும் இன்றைய ஓவியர்களாகிய நாங்களும் இந்தக் கண்ணியில்தான் வருகின்றோம்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது அப்போதைய நிகழ்வுகளை அரசியல் கார்ட்டூன்களில் மிகத் திறமையாக வெளிப்படுத்தியவர் ஓவியர் ‘டேவிட் லோ’. அவருடைய பாணியின் பாதிப்பில் ஆர். கே. லட்சுமண் வந்தார். இன்று பெரும்பாலும் அப்பாணியிலேயே மாட்டிக்கொண்டு வேறு பரிட்சார்த்தமான ஸ்டைலுக்கு நகர்ந்துசெல்ல முடியாமல்தான் பெரும் பத்திரிகைகளின் கேலிச்சித்திரம் இன்றும் இருக்கிறது.

அறுபதுகளில் முரசொலியில் வந்த ஓவியர் செல்லத்தின் ஓவியங்கள் முக்கியமானவை. என் இளம்வயதில் அவற்றை என் தந்தை சிலாகிப்பார். பல நேரங்களில் அதில் இருக்கும் காங்கிரஸ்காரர்களுக்குப் பத்திரிகை வந்த மதியத்திற்குள் நையாண்டியாக வண்ணப் பென்சிலில் வண்ணம் தீட்டிச் சிரிப்பார். 1967ஆம் ஆண்டு தேர்தலுக்கு நான் வரைந்த சுவர்ஓவியங்களும் தட்டிகளும் எழுநூறுக்கும் அதிகமானவை; சிறுவயதில் நான் ‘ஒரு நட்சத்திரம்’ போலத்தான்; ஊர்ஊராக அழைத்துச் செல்வார்கள்; சரியாகக் கவனிப்பார்கள்; உடன் துணைக்குவரும் என் மாமா முருகேசனையும் சேர்த்துத்தான்; நிலக்கோட்டை, சத்திரப்பட்டி என்று பல ஊர்; இருபதுஅடிக்கு பதினைந்து அடி உயரம்; அப்படி வரைந்தே அந்த வயதில் என் கை திருந்தியதாக நினைப்பேன்; ஆனால், பணம் எதுவும் வாங்காமலேயே. “போய் வரை, உனக்கு எப்போது அப்படி பெரிய சுவர் கிடைக்கப் போகிறது” என்று என் தந்தையும் என்னை ஊக்குவிப்பார். தெருக்களின் சுவர்களில் நான் வரைந்த ஓவியங்களைப் பார்த்துவிட்டுப் பாராட்டுவார். காங்கிரசார் இரவுநேரங்களில் என்னை

மறித்து 'எங்களுக்கும் வரைந்து கொடு, காசு தருகிறோம்' என்பார்கள்; 'வீட்டில் திட்டுவார்கள்' என்று வேகமாகச் சொல்லி விட்டுச் சென்றுவிடுவேன். கோரிப்பாளையத்தில் தொடர்கண்காட்சி போல் என் படங்களைத் தெருக்களில் வரிசையாகக் கட்சிக்காரர்கள் காட்சிப்படுத்தினர். எனக்கு அவ்வளவு பெருமை அப்போது.

தேர்தல் வெற்றிக்குப்பின் என் பள்ளியிலேயே கட்சிக்காரர்களுக்கு விருந்து. மாவட்டச் செயலாளர் முத்து என்னைக் கட்டிக்கொண்டு, வருபவர்களிடம் என்னைப் பற்றி பெருமையாகச் சொன்னார். பிறகு தி.மு.க வெற்றிபெற்று ஆறுமாதம் கழித்து முதலமைச்சர் அண்ணா மதுரையில் அமைச்சர்களோடு அலங்காரவண்டியில் அழைத்து வரப்படுகிறார். அமெரிக்கன் கல்லூரி முன்பு இருக்கும் சாலையில் வரிசையாக கோரிப்பாளையம் தி.மு.க.வினரால் அமைக்கப்பட்டிருந்த எல்லா வளைவுகளின் மேலேயும் நான் வரைந்த அண்ணா படங்களே அலங்கரித்தன. அந்த வழியாகத்தான் அண்ணா வந்தார். பள்ளி முடிக்காத அந்த வயதில் எனக்குப் பெரிய பெருமைதான். இந்தி படிக்க வேண்டும்; தெரிந்துகொள்ள வேண்டும் என்று என்னையும் என் சகோதரர்களையும் இந்தி படிக்க அனுப்பியதோடு இந்தித்திணிப்பை எதிர்க்கவும் செய்தவர் என் தந்தை. அதோடு மட்டுமின்றி இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் என்னை இயங்கவும் அனுமதித்தார் அவர். அன்று திராவிட இயக்கப் பத்திரிக்கைகளில் வந்த சித்திரங்களும், செல்லத்தின் முரசொலி கேலிச்சித்திரங்களும், அப்போது எனக்குக் கிடைத்த ஐரோப்பிய ஓவியர்களின் ஓவியங்கள் 'How to draw and paint' புத்தகங்கள், காமிக்ஸ்கள், திரைப்படங்கள், Animation என்பனவற்றை எல்லாம் தாண்டி மிதக்கின்ற என்னைத் தரையில் நடக்கும்படி செய்தது என்றே சொல்லலாம்.

இதன் ஊடாக அன்று எனக்குக் கிடைக்க வேண்டிய பயன்பாடு, இச்சமூகத்திற்கும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே அவருடைய தெளிவான செயல்பாடுகளை முன் நிறுத்தி இயக்கமும் கேலிச்சித்திர ஊடகமும் கேலிச்சித்திரக்காரர்களும் அவரை ஒரு 'icon' போலப் பயன்படுத்தியிருப்பதாக ஓவியங்கள் பல உணர்ச்சிகளின் ஊடே சொல்கின்றது.

அரசியல் நையாண்டி, இயக்கத்தின் நோக்கம், இயக்கம் மக்களுக்குச் செய்தே ஆக வேண்டியது என்ற கனவு — இயக்கம் ஆரம்பித்து நடத்தப்படுகிற சமகாலத்திலேயே இவ்வூடகங்களை எழுத்தோடு சமமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற தெளிவு, பத்திரிகை நடத்துபவர், மற்றும் ஆசிரியர் குழுவின் யோசனை, ஓவியரின் பங்கு, பாணி ஓவியர்கள் உபயோகிக்கும் உடல்மொழி, மாற்றுக் கட்சியினரை, பாமரனை, பணக்காரனைக் காண்பிக்கிற தொனி, சித்திரக் கதையில் இயக்க வரலாறு, மாற்றுக்கட்சியினர் தங்கள் பத்திரிக்கைகளில் இவ்வியக்கத்தை அன்னாவின் உருவத்தைக் கொண்டே விமர்சிக்க முனைந்தது எனப் பன்முகங்களுடன் அக்காலகட்டத்தைக் காட்டும் கேலிச்சித்திரங்கள் அடங்கிய இக்கோர்வை இப்போதாவது வெளிவந்ததே என்று மகிழ்கின்றேன்.

சித்திர அரசியல்

முனைவர் எம்.எஸ்.எஸ். பாண்டியன்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரச்சார யுக்திகள் பல்வேறுபட்ட தளங்களை உள்ளடக்கியவை. தன் கொள்கைகளைப் பரந்துபட்ட மக்களிடம் எடுத்துச் செல்ல அக்கட்சி பத்திரிகைகள், நாடகங்கள், திரைப்படங்கள், மாநாடுகள் எனப் பல தளங்களைப் பயன்படுத்தியது வரலாற்று உண்மை. இவற்றில் ஒன்று கருத்துப்படங்கள்.

புராண இதிகாசங்களைக் கேள்விக்குள்ளாக்கி திராவிடர் கழகப் பத்திரிகைகள் வெளியிட்ட சித்திரக்கதைகளின் தொடர்ச்சியாகவே தி.மு.க வெளியிட்ட கருத்துப்படங்களை நாம் பார்க்க வேண்டியுள்ளது. இந்த வரலாற்றுத் தொடர்ச்சியைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது, எவ்வாறு கருத்துப் படங்கள் தி.மு.க பத்திரிகைகளில் வேறு பரிமாணங்களைப் பெற்றன என்பதையும் கோடிட்டுக்காட்ட வேண்டியுள்ளது.

ஒரு அரசியல் கட்சியாக உருவெடுத்த தி.மு.க, தமிழக மக்களுக்கு எவ்வாறான ஒரு எதிர்காலத்தைத் தங்களால் கொடுக்க முடியும் என்பதை மையப்படுத்தி இந்தக் கருத்துப்படங்களை 1967ஆம் ஆண்டுக்கு முன் வெளியிட்டுள்ளது. “காலம் மாறினால் இப்படித்தான் நடக்கும்” என்ற தலைப்பில் முரசொலி பத்திரிகை வெளியிட்டுள்ள சித்திரத்தொகுப்பு இதற்கு எடுத்துக்காட்டு. தி.மு.க வின் 1962 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையைச் சித்திரக்கதையாக முரசொலி வெளியிட்டுள்ளது இதற்கு மற்றும் ஓர் எடுத்துக்காட்டு.

தங்களால் கோடிட்டுக் காட்டப்பட்ட எதிர்காலத் தமிழ் மக்களுக்கு அளிப்பதற்காகத் தி.மு.க வினர் நடத்திய போராட்டங்களையும், ஏற்றுக் கொண்ட தியாகங்களையும் முன்னிலைப்படுத்திப் பல்வேறு கருத்துப்படங்கள் தி.மு.க ஏடுகளில் வெளியிடப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, 1963 ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலரில் ‘தீயணைக்கும் படை தி.மு.க: துவக்கம் 1949’ என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள சித்திரத்தொகுப்பு, தி.மு.க வைத் தமிழர்களின் பாதுகாப்புக் கவசமாக வர்ணிக்கிறது. மும்முனைப் போராட்டம், கல்லக்குடி போராட்டம், புதுக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போர், தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்டம் என தி.மு.க நடத்திய பல்வேறு போராட்டங்கள் சித்திரங்களின் வாயிலாக இதில் இடம்பெற்றுள்ளன.

தங்களின் கொள்கை மாற்றங்களை நியாயப்படுத்தவும் தி.மு.க கருத்துப் படங்களைப் பயன்படுத்தியுள்ளது. அரசியல் சட்டத்தின் பதினாறாவது

திருத்தத்தை அடுத்து தி.மு.க தனது திராவிடநாடு கோரிக்கையையும் பிரிவினைவாதத்தையும் கைவிட்டது. அந்தக் கட்சியின் வரலாற்றில் இது மிக முக்கியமான ஒரு கொள்கை மாற்றம். திராவிடநாடு கோரிக்கையைத் தி.மு.க கைவிட்டதை நையாண்டி செய்து, திராவிடநாட்டை ஒரு மூழ்கும் கப்பலாகவும், அண்ணாவும் அவரின் தம்பிகளும் அக்கப்பலை விட்டுவிட்டுத் தண்ணீரில் தத்தளிப்பவர்களாகவும் உருவகப்படுத்தி சுதேசமித்திரன் நாளிதழ் 24, அக்டோபர் 1963இல் ஒரு கருத்துப்படத்தை வெளியிட்டது. மாறாக, தி.மு.க பத்திரிகைகளில் தி.மு.க வின் கொள்கைமாற்றத்தை ஓர் அரசியல் சாதுரியத்தின் வெளிப்பாடாக உருவகப்படுத்தி கருத்துப்படங்கள் வெளியிடப்பட்டன. எடுத்துக்காட்டாக, பதினாறாவது சட்டதிருத்தத்தைத் தி.மு.க.வைச் சிக்கவைக்க கொண்டுவரப்பட்ட எலிப்பொறியாகவும் தி.மு.க அதனை உடைக்கும் ராஜதந்திர யானையாகவும், முரசொலியின் கருத்துப்படம் உருவகப்படுத்துகின்றது.

1967ஆம் ஆண்டு தி.மு.க தமிழகத்தில் ஆட்சியைப் பிடித்த பின் தி.மு.க ஏடுகளால் வெளியிடப்பட்ட கருத்துப்படங்கள் தி.மு.க ஆட்சியின் சாதனைகளைப் பறைசாற்றுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ‘அன்றும் இன்றும்’ என்ற தலைப்பில் 1968 ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலரில் வெளியிடப்பட்ட சித்திரத்தொகுப்பு தி.மு.க ஆட்சி கொண்டு வந்ததாகக் கூறப்படும் மாற்றங்களை முன்வைக்கிறது. மேலும் ஆட்சிக்கு வந்தபின், தி.மு.க.வினர் தங்கள் வரலாற்றை மறக்காதபடி, கட்சியின் கடந்தகால முக்கிய நிகழ்வுகளைச் சித்திரத்தொகுப்பாக முரசொலி 1968இல் வெளியிட்டுள்ளது.

தி.மு.க வினர் வெளியிட்ட கருத்துப் படங்களில் தி.மு.க என்னும் கட்சியின் பிரதான குறியீடாக அண்ணா நிறுத்தப்படுகின்றார். 1962 ஆம் ஆண்டு முரசொலி வெளியிட்ட அண்ணாவின் 54 வது பிறந்தநாள் சிறப்பிதழில் வெளிவந்த “அண்ணா பிறந்திராவிட்டால்” என்ற ஐந்து பக்க சித்திரத்தொகுப்பு “அவர் இல்லையேல் நாம் இல்லை” என்னும் சொற்களோடு முடிகிறது. மேலும் அண்ணா, காந்தியின் மறுவுருவமாக மீண்டும் மீண்டும் கருத்துப்படங்களில் சித்தரிக்கப்படுகின்றார். அவரது போராட்ட யுக்திகள், எளிமை போன்ற குணங்கள் காந்தியைச் சார்ந்ததாக இப்படங்கள் உருவகிக்கப்படுகின்றன. இக்கருத்துப் படங்கள் மூலம் அண்ணா ஒரு காந்தியவாதி என்னும் கருத்தாக்கம் உயிர் பெறுகிறது. இக்கருத்தாக்கம் தமிழகத்தின் பொதுப்புத்தியாக ஓரளவேனும் மாறியுள்ளதற்கான எடுத்துக்காட்டு, அவர் இறந்தபோது மாலைமுரசு (8.2.69) வெளியிட்ட ஒரு கருத்துப்படம். அக்கருத்துப்படம் விண்ணிலிருக்கும் காந்தி, மண்ணிலிருக்கும் அண்ணாவைத் தன்னோடு அழைத்துக் கொள்வதாக உருவகிக்கின்றது.

செல்லம் வரைந்த முரசொலி கருத்துப்படங்களின் குறியீட்டுக் கூறுகள் மிக முக்கியமானவை. அவரின் எளிமையான வரைகோடுகளின் ஊடே மிக முக்கியமான அரசியல் குறியீடுகள் பயணிக்கின்றன. செருப்பு, துண்டு போன்ற அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் அரசியல் குறியீடுகளாகப் பயணிக்கின்றன. செருப்பு, துண்டு போன்ற அன்றாடம் பயன்படுத்தும் பொருட்கள் அரசியல் குறியீடுகளாகச்

செழுமை பெறுகின்றன. எளியோர்கள் காலில் செருப்பு இல்லாதவர்களாகவும். மேட்டுக்குடியினர் செருப்பு அணிந்திருப்போர்களாகவும் பெரும்பாலும் சித்தரிக்கப்படுகின்றனர். அதேவேளையில், எளியோர்கள் கண்ணியமும் சுயமரியாதையும் உடையவர்களாகக் காட்டுவதற்கு செல்லம் அவர்கள் தலைப்பாகையைப் பயன்படுத்துகின்றார். இவரின் கருத்துப்படங்களில் எளியோரும் வறியோரும் துண்டை இடுப்பில் கட்டாதவர்களாகவும் அதைத் தலையில் கட்டியவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். நிலவுடைமைச் சமுக அமைப்பில் செருப்பணிவது, தலைப்பாகை அணிவது போன்றவை மேட்டுக்குடியினருக்கு மட்டுமே உரிமை உடையவை என்பதை நாம் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். மேலும், காந்தி குல்லாயைப் பயன்படுத்தி, செல்லம் காங்கிரஸ்காரர்களை வடஇந்திய லேவாதேவிக்காரர்கள் போல் சித்தரிக்கின்றார். இவ்வாறாக அவர்கள் தமிழகத்திற்கு அந்நியமானவர்களாக நிறுத்தப்படுகின்றனர்.

தி.மு.க விற்கு எதிராக வந்த கருத்துப்படங்களின் சில கூறுகளை நாம் நோக்குவது தேவை. தி.மு.க அரசியல் கட்சியாகப் பரிணமித்த பின்பே, ஏனைய பத்திரிகைகள் தி.மு.க பற்றிய கருத்துப்படங்களை வெளியிடத் தொடங்கின என்பது முக்கிய வரலாற்றுத் தகவல். ஆட்சி அதிகாரத்தை நோக்கி தி.மு.க நகர்வது அதன் எதிர்அணியினருக்கு ஒரு கலக்கத்தை ஏற்படுத்தியிருப்பது இதிலிருந்து தெளிவாகின்றது. “கோட்டைக்கா? கோடம்பாக்கத்துக்கா?” என்பன போன்ற தலைப்புகளுடன், டி. எஸ். சொக்கலிங்கம் நடத்திய நவசக்தி பத்திரிகையில் வெளிவந்த கருத்துப்படங்கள் தி.மு.கவை சினிமா உலகுடன் இணைத்து, அதன் அரசியலை மறுக்கிறது. மேலும் அண்ணா நடிகைகளின் படங்களுடன் அமர்ந்திருப்பது போல் சித்தரித்து, தி.மு.கவின் அரசியலைக் கொச்சைபடுத்துகின்றன.

காலவோட்டத்தில் நவசக்திகள் கரைந்துபோய், வரலாறு யார் பக்கம் நின்றது என்பதை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. அதே நேரத்தில் செல்லம் போன்ற சித்திரக்காரர்களுக்குத் தமிழகம் அளிக்க வேண்டிய அங்கீகாரத்தை அளிக்கத் தவறியது ஒரு முக்கிய வரலாற்றுப் பிழை.

கேலிச்சித்திரங்களால் வாசிக்கப்பட்ட வரலாறு

வீ.எம்.எஸ்.சுபகுணராஜன்

"தோலுரிப்புக்குப் பழகிவிடும் விலாங்கு மீன்களைப் போல கேலிச்சித்திரம் ஆக்கப்படுவதற்குப் பழகிவிடுகிறார்கள் அரசியல்வாதிகள்" என்பார் வின்ஸ்டன் சர்ச்சில். இரண்டாம் உலகப் போரில் தோல்வியின் விளிம்பிலிருந்து இங்கிலாந்தை மீட்டு, மாபெரும் வெற்றிக்கு இட்டுச் சென்ற வின்ஸ்டன் சர்ச்சில் போல கேலிச்சித்திரமாக்கப்பட்ட உலகத் தலைவர்கள் வெகுசிலரே, கார்ட்டூன் பற்றிய அவரது அவதானிப்பு கவனத்திற்குரியது. "மனித இயல்பின் ஒரு வினோதபாவத்தில் இவர்கள் அதை (கேலிச்சித்திரங்களை) விரும்பவும் பழகிவிடுகின்றனர். உண்மையை ஒத்துக்கொள்வதானால், கார்ட்டூன்கள் வருவது நின்றவுடன் உதாசீனப்பட்டதாகவும், புறக்கணிக்கப்பட்டதாகவும் உணருகிறார்கள்; எதனால் இது நேர்ந்தது என்ற தவிப்பும், வியப்பும் உருவாகின்றது. வயோதிகமும், பயனின்மையும் தம்மை ஆட்கொண்டுவிட்டதாக நினைக்கத் தொடங்கி விடுகின்றனர். முன்னைப்போல் நாம் கிழித்துச் சிதைக்கப்படுவதில்லையே! அந்த அற்புதமான நாட்கள் முடிந்துவிட்டன என்று மெல்ல முணுமுணுக்கின்றனர்". என்கின்றார் வின்ஸ்டன் சர்ச்சில். சர்ச்சில் ஒரு பத்திரிகையாளரும்கூட என்பது கவனத்திற்குரியது. அரசியல் கார்ட்டூன் பற்றி அரசியல்வாதிகளின் மனவோட்டங்களை இதைவிடத் தெளிவாக விளக்குவது கடினம் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அரசியல் வாழ்க்கையின் மிகமுக்கியமான அம்சமே கவனத்துக்குள்ளாவதுதான். கவனவெளியின் விளிம்பு தாண்டினால் அரசியல் வாழ்வு அஸ்தமனமாவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாகின்றது. புகழப்பட்டோ இகழப்பட்டோ, பாராட்டப்பட்டோ, பழிக்கப்பட்டோ 'கவனஒளி வட்டத்தில்' ஊடாடிக் கிடப்பது அரசியல் மனத்தின் ஆதர்சம்.

அரசியல் கார்ட்டூன்கள் பெரும்பாலும் இரு கூறுகளைக் கொண்டதாக உள்ளன. ஒன்று, ஒரு நபரை நையாண்டி செய்யும் கேலிச்சித்திரம்; மற்றொன்று ஒரு நிகழ்வு அல்லது சூழலை உருவாக்கி அதில் மறைபொருள் தோன்றும் குறியீடாக ஒரு நபரை நிலைநிறுத்துவதாகும். மேற்கத்திய கேலிச்சித்திரங்களின் தொடக்கம் லியர்னார்டோ டாவின்சியிலிருந்தே ஆரம்பிக்கின்றது என்பர். டாவின்சியின் உன்னத அழகின் கோட்பாட்டை முழுமையாக அறிந்துகொள்ள விழைந்த எத்தனிப்பின் விழைவான 'இயல்பு திரிந்த' ஓவியங்களே கேலிச்சித்திரங்களின் 'பிதா' என்கின்றனர். டாவின்சி

துவக்கி வைத்த இந்த 'இயல்பு — திரிபு' அவர் பின்வந்த ஓவியர்களால் வளர்த்தெடுக்கப்பட்டு அங்கதம் செறிந்த 'எதிர் ஓவியம்' (counter - art) ஆயின. இந்தப் புதிய வகைமாதிரியான ஓவியம் கவனத்தை ஈர்க்கின்ற உடற்கூறுகளை மிகைப்படுத்தி அதன் விளைவாகக் குணாம்சம் வெளிப்படும் அங்கதத்தை முன்வைத்தது. இவ்வகை கேலிச்சித்திரங்களுக்கு மாறுபட்ட செய்தித்தாள்களின் கார்ட்டூன்கள் அவற்றின் பிறப்பிடமாக ஜெர்மனியைக் கொண்டவை. சீர்திருத்தக் கிறித்துவத்தின் தொடக்க நாட்களில், அதன் பிதாமகர் மார்ட்டின் லூதர்கிங் அவர்களின் காட்சிருபப் பரப்புரைக்கு கார்ட்டூன்களே துணை நின்றன என்பர். சீர்திருத்தக் கிறித்துவத்தின் பரப்புரை சென்றடைய வேண்டிய மக்கள்திரளின் கல்வியறிவு மிகவும் உயர்ந்ததாகவோ அல்லது மிகவும் தாழ்ந்ததாகவோ இல்லை. எனவே வெகுசன மக்களை குறிப்பாக அடித்தள மக்களைச் சென்றடைய கருத்தோவியங்கள் கொண்ட அறிக்கைகளே உதவின. மரச்செதுக்குகளிலும் மற்றும் உலோகச் செதுக்குகளிலும் உருவான படங்களுடன் கூடிய விளக்கவுரைகளே வெகுமக்களின் புரிதலுக்கும் காரணமானயிவ. 'கிறிஸ்துவும் அந்தி கிறிஸ்துவும்' என்ற மரச்செதுக்கு ஓவியம் கிறிஸ்துவின் செயல்களையும் கிறிஸ்து சபையின் செயல்களையும் எதிரெதிர்படுத்தியது.

காலப்போக்கில் ஜெர்மானிய மரச்செதுக்கு ஓவியங்கள் இத்தாலிய எதிர் ஓவியமான கேலிச்சித்திரத்துடன் இரண்டறக் கலந்து பதினெட்டாம் நூற்றாண்டின் கார்ட்டூனிஸ்ட்டுகள் பயன்படுத்திய ஒருவகை மாதிரி உருவானது மிகத் தீவிரமான விஷயங்களை எடுத்துக்கொண்டு, அதனை அங்கதச் சுவையுடனும், அதே வேளையில் பார்ப்பவருக்கு அதன் விஷய கனம் புலப்படும் வண்ணமும் வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பான வடிவமானது கார்ட்டூன். மேற்கத்திய கலாச்சாரம் அதன் மதஅடிப்படைகளை விட்டு, அகழ்ந்துவிட சமூகத்தின் பிற வாழ்வியல் கூறுகள் கவனத்திற்குள்ளாகின. விவாதிக்கவும், விசாரணைக்குட்படுத்தவும், கேலிக்குள்ளாக்கவுமான புதிய விவாதப் பொருள்கள் உருவாகி கேலிச்சித்திரங்களுக்கான களம் விரிவடைந்தது.

இந்திய கார்ட்டூன் வரலாறு, தவிர்க்கவியலாமல், அரசியலமைப்பு உட்பட்ட இன்ன பிற விஷயங்களைப் போலவே, இங்கிலாந்தின் அடியொற்றியே நடை பயின்றுள்ளது. இந்தியாவிற்கான பத்திரிக்கைகளே ஆங்கிலேயர்களுடையது என்னும்போது இந்த முன்மாதிரி ஒன்றும் விரும்பத்தகாதது அல்ல என்றே கொள்ள வேண்டும். இந்திய மேல்தட்டு மக்களுக்கு அறிமுகமானதே ஆங்கிலப் பத்திரிகையின் வாயிலான கார்ட்டூன்கள்தான். ஆனால் பட்டறிவு இருந்தும், படிப்பறிவு, அதிலும் குறிப்பாக ஆங்கில அறிவு அறுதியாகப் பெறாத வெகுமக்களைச் சென்றடையும் எளிதான வழியானது ஆங்கிலேயரின் கைச்சரக்கான கார்ட்டூன்கள்தாம். வெகுமக்களைச் சென்றடைய தலைப்பட்ட அனைத்துத் தரப்பினரும் கையிலெடுத்ததுப் பத்திரிகைகளைத்தான்.

கார்ட்டூன்கள் தொகுக்கப்படுவதென்பது புதிதல்ல 'உலகக் கார்ட்டூன்களில் ஹிட்லர் மை x உண்மை' (Hitler in the worlds car-

toons / facts versus INK) என்ற ஹிட்லருக்கு எதிராக வரையப்பட்ட கார்ட்டூன் களெல்லாம் தொகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் நோக்கம் ஹிட்லருக்கு எதிரான கார்டூன் களின் பொய்மை வெளிப்படுத்துவது என்பதுதான். கார்ட்டூனிஸ்டுகளுக்கு எதிராக கார்டூன்களை முன்வைப்பது என்பதுதான் அதன் கோஷம். ஏறத்தாழ எழுபத்தொன்று கார்ட்டூன்களைக் கொண்ட 175 பக்கத் தொகுப்பில் யூதர் பிரச்சினை குறித்த கார்ட்டூன்கள் ஏழு மட்டுமே. ஜெர்மானியர் களுக்காக 1932ஆம் ஆண்டு உருவான தொகுப்பு, ஹிட்லரின் முகமுடியைத் துளைத்து உண்மை சொருபத்தை வெளிநாட்டு ஊடகங்கள் வெளிச்ச மாக்குகின்றன என்ற அச்சத்தின் வெளிப்பாடோ என எண்ணத் தோன்றுகின்றது.

ஹிட்லர் உள்ளிட்ட ஜெர்மானியர்களின் அச்சம் அடிப்படையற்ற தன்று. ஜெர்மானியப் பரப்புரைத் துறை அமைச்சரான கோயபல்ஸ், இங்கிலாந்தின் 'ஈவ்னிங் ஸ்டாண்டர்டு' பத்திரிகையின் கார்ட்டூனிஸ்ட் 'டேவிட்லோ'வின் கார்ட்டூன்கள் குறித்துக் கடும் சினம் கொண்டு, அவரின் கார்டூன்களால் ஜெர்மனி, இங்கிலாந்து நட்புறவில் விரிசல் விழுந்துவிடும் என்று எச்சரித்ததும் நடந்தது. நட்புறவு விரிசல்கண்டு போர் மூண்டபோது ஜெர்மனியின் கொல்லப்பட வேண்டியோர் பட்டியலில் இடம் பிடித்தவர் டேவிட் லோ எனலாம்.

கார்ட்டூன்களால் ஜெர்மானியரை மட்டுமல்ல, இங்கிலாந்தின் மிகச் சிறந்த பிரதமராக விளங்கிய வின்ஸ்டன் சர்ச்சிலையே பல நேரங்களில் வெறுப்புற வைத்தவர் டேவிட் லோ. கார்ட்டூன் வரலாறு குறித்த எந்தத் தரவும் டேவிட் லோவைத் தவிர்த்ததாக இருக்க எள்ளளவும் வாய்ப்பில்லை. தொழிலாளர் கட்சியின் செயல் திட்டமான இந்திய சுயராஜ்ய திட்டத்திற்கு ஆதரவளித்த டோரி கட்சியின் தலைவர் பால்ட்வினை எதிர்த்த சர்ச்சிலின் நிலைப்பாடு டேவிட் லோவின் கார்ட்டூன்களில் கடுமையான விமர்சனத்திற்குள்ளானது. பால்ட்வின் அவர்களின் நிழல் அரசிலிருந்து விலகிய சர்ச்சில் அரசியலில் பின் தள்ளப்பட்டார். வினோதமாக டேவிட் லோ பணிபுரிந்த 'ஈவ்னிங் ஸ்டாண்டர்டு' பத்திரிகையிலேயே பணிபுரியும் நிலை வந்தது. ஒரு புறம் சர்ச்சில், ஹிட்லரையும் முசோலினியையும் அவரவர் நாடுகளின் மீட்பர்களாக முன்வைத்தபோது மறுபுறம் அதே பத்திரிகையில் அவர்கள்மீது கடும் விமர்சனத்தை கார்ட்டூன்களில் முன்வைத்தார் டேவிட்லோ; விளைவு ஜெர்மனியிலும், இத்தாலியிலும் பத்திரிகை தடைசெய்யப்பட்டது. காலம் மாறி சர்ச்சில் இங்கிலாந்தின் அரசியலில் ஏறுமுகம் கண்டு வெற்றிபெற்று இரண்டாம் உலகப் போரின் தளபதியானபோது டேவிட் லோவின் முழு ஆதரவு கிடைத்தது.

ஆனால் அதைத் தொடர்ந்த தேர்தலின்போது 'ஈவ்னிங் ஸ்டாண்டர்டு' பத்திரிகை அதிபரான பிவர்ஃபுருக் அவர்களே சர்ச்சிலின் கள விளம்பரத் துறை அமைச்சரானபோதும், டோரி கட்சியின் செயல் திட்டங்களில், சர்ச்சிலின் முடிவுகளின் மீதான விமர்சனங்களைக் கறாராக முன்வைத்தார் லோ. தேர்தலில் பிவர்ஃபுருக்கும், சர்ச்சிலும், டோரி கட்சியும் தோற்றனர். ஆனால் 'ஈவ்னிங் ஸ்டாண்டர்டு' பத்திரிகையின் ஆஸ்தான கார்ட்டூனிஸ்ட் டேவிட் லோவேதான்.

காலங்கள் மாறினாலும் இது போன்ற முன் மாதிரிகள் இன்றும் காண்பதற்கு அரிதானதுதான்.

இன்றைய கார்ட்டூனிஸ்ட்கள் பெரும்பாலும் பத்திரிகை முதலாளியின் கொள்கை முடிவுகளையொட்டியோ, அவரின் செயல் திட்டங்களுக்குச் சாதகமாகவோ, பத்திரிகையின் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டும், தனக்கான கொள்கை கோட்பாடுகளற்ற, வரையும் பென்சிலின் நீட்சியாகவே செயல்படுவதுதான் சாத்தியம். இன்றைய பத்திரிகை ஆசிரியர்களும் கார்ட்டூனிஸ்ட்களை அடியாட்களைப் போலச் செயல்பட வேண்டும் என்றே எண்ணுகின்றனர். தங்களுக்கும், ஏன் தங்கள் பத்திரிகை வாசகர்களுக்கே மாற்றான கருத்துகளைக்கூட முன்வைக்கும் 'காண்புல ஓவிய எழுத்தாளனை' வேண்டுவதில்லை.

தமிழ்ச் சூழலிலும் கார்ட்டூன் தொகுப்புகள் வந்துள்ளன. பிராமணரல்லாதோர் இயக்கத்தின் 'ஜஸ்டிஸ்' மற்றும் வரதராஜுலு நாயுடு அவர்களின் 'தமிழ்நாடு' பத்திரிகைகளின் கார்ட்டூன்கள் தொகுக்கப்பட்டதற்கான குறிப்புகள் உள்ளன. மிகச் சமீபமாக பாரதியின் 'இந்தியா' கார்ட்டூன் திரு. ஆ.இரா. வேங்கடாசலபதி அவர்களால் தொகுக்கப்பட்டுள்ளது.

"1850ஆம் ஆண்டு முதல் தில்லியிலிருந்து வெளியான 'தில்லி ஸ்கெட்ச் புக்' (Delhi Spetch Book) தான் இந்தியாவில் முதன்முதலாகக் கருத்துப் படங்களை வெளியிட்டது" என்கிறார் ஆ.இரா. வேங்கடாசலபதி. தொடர்ந்து அவரே, "கருத்துப்படங்களை முதலில் வெளியிட்ட இந்திய மொழி இதழ் எதுவென அறிய முடியவில்லை. பம்பாயிலிருந்து வெளியான 'இந்தி பன்ச்' (The Hindi Punch) இதில் முன்னோ டியாக இருந்திருக்கலாம்" என்கின்றார்.

ஆனால் தமிழ்ச் சூழலில் கார்ட்டூன்கள் பாரதியின் 'இந்தியா' இதழிலிருந்துதான் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் என்பது உறுதி. அதைப் பாரதியே உறுதிசெய்து "தமிழ்நாட்டு வர்த்தமானப் பத்திரிகைகளிலே நமது பத்திரிகையொன்று தான் விகட சித்திரங்கள் பதிப்பித்து வருவதென்ற விஷயம் நேயர்களுக்குத்தெரியும்" என்கிறார்.

பாரதியின் 'இந்தியா'வைத் தொடர்ந்து பிற வர்த்தமான பத்திரிகைகளும் சித்திரப்படம் என்ற கருத்துப்படம் வெளியிட்டிருக்க வேண்டுமென்பது திண்ணம். தேசியத்துக்காக, 'ஸ்வராஜ்யத்துக்காக அதிலும் குறிப்பாக மிதவாதிகளுக்கெதிரான வாதங்களை வைத்த பாரதியைத் தொடர்ந்து, பிராமணரல்லாதோர் இயக்கமான ஜஸ்டிஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ நாளேடான "ஜஸ்டிஸ்" இதழிலும் கார்ட்டூன்கள் இடம்பெற்றிருந்தன. திரு. இராமசாமிமுதலியார் அவர்கள் பதிப்பித்த ஜஸ்டிஸ் தலையங்கங்களின் தொகுப்பில் காணக் கிடைக்கும் கார்ட்டூன்கள், பாரதியின் 'இந்தியா' கார்ட்டூன்களிலிருந்து வெகுவாக வரைதிறன் வளர்ந்திருப்பது காணமுடிக்கின்றது.

சுயராஜ்ய கட்சியின் ஆதரவில் நடந்த, சுயேச்சை ஆட்சியின் (Independent ministry) தலைமையேற்ற டாக்டர் சுப்பராயன் அவர்களைக் கேலிச்சித்திரமாக்குகிறது ஜஸ்டிஸ் இதழ். அதிலும் குறிப்பாக சுயராஜ்ய கட்சியின் குரலுக்கு ஆடும் அரசாகச் சித்தரிக்கும் 'His Masters voice'

கார்ட்டூனும் 'ஏக போக உரிமையும் பிராமண ஆசியும்' என்ற கார்ட்டூனும் இன்றைய சூழலுக்கும் பொருந்தும் தன்மை வாய்ந்தவை. இதுதவிர வரதராஜுலு நாயுடு அவர்களின் 'தமிழ்நாடு' பத்திரிகையின் கார்ட்டூன்களும் தொகுக்கப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது.

அண்ணா நூற்றாண்டு நினைவாக அவரைப் பற்றிய நூலொன்று வெளிக்கொண்டு வரலாமென்ற எண்ணம் இருந்தபோது, அண்ணா பற்றிய கார்ட்டூன்களையும் சித்திரத்தொகுப்புகளையும் தொகுக்கலாம் என ஆலோசனை சொன்னது தம்பி விஜயவேலன்தான். சொன்னது மட்டுமல்லாமல் பழைய பத்திரிகைகளைத் தேடி அவற்றைத் தொகுக்கும் பணியில் பெரும் பங்கு செய்ததும் விஜயவேலன்தான். இதுவரை தமிழில் பத்திரிகைகளின் கார்ட்டூன்கள் அல்லது கார்ட்டூனிஸ்ட்களின் கார்ட்டூன்கள் தொகுப்புகளாக வந்துள்ளன. ஒரு ஆளுமை சார்ந்து, அதிலும் குறிப்பாகச் சென்ற நூற்றாண்டின் தமிழக அரசியல் வரலாற்றின் போக்குகளைக் கட்டமைத்த, நிர்ணயித்த ஆளுமைகளில் மிக முக்கியமானவராகக் கருதப்பட்ட பேரறிஞர் அண்ணா அவர்கள் குறித்த கார்ட்டூன்களைத் தொகுப்பது மிக முக்கியமான பணியாகும்.

இந்தத் தொகுப்பு சென்ற நூற்றாண்டின் ஒரு பகுதியின் வரலாற்றை, குறிப்பாக நாற்பதுகள் தொடக்கம் அறுபதுகள் வரையிலுமான வரலாற்றை, கார்ட்டூன்களாகத் தொகுத்ததாக ஆனது உப விளைவு. வரலாற்றை கார்ட்டூன்களின் மூலமாக, அவை பிரதிபலித்த வண்ணம் பார்த்துத் தொகுத்ததென்பது மிக அற்புதமான அனுபவமானது. நேற்றை நாளில், 'நமது இன்றை' நிர்ணயித்த மனிதர்கள் கார்ட்டூன்களாகவும், சித்திரக் கதைமாந்தர்களாகவும் உறைந்திருந்ததைக் கண்டபோது, வரலாற்றைப் புதிய பரிமாணத்தில், அதுவும் காண்புலக் காட்சிகளாய், கண்டதான உணர்வு அனுபவமானது. நேற்றைய 'இன்றில்' அவர்கள் முன்வைத்த கருத்தாக்கங்கள், அவதானிப்புகள், சாடல்கள், சவால்கள், காலம் எதிர்பார்த்தபடியேயும், எதிர்மறையாகவும் முகிழ்ந்து வரலாறானது நிதர்சனம் காலத்தினூடாக நிலைப்பாடுகள் இறுகி உறுதியடைந்ததும், பிறிதொன்றாகப் பரிமாணமானதும், வழுவிழந்து முனகலாகி மக்கிப்போனதும் கண்முன் விரியும் காட்சிப் புலமாயின. 'இந்திய தேசீயம்' அதன் பால பாடங்களைக் கற்ற வேளையில் தொடங்கும் தொகுப்பு, அதற்கு மாற்றான 'திராவிடம்' குறித்த அறைகூவலை, உள்ளச் சுத்தியோடும் ஆழ்ந்த நம்பிக்கையோடும், முன்வைத்ததைப் பதிவாக்குகிறது. திராவிடர் கழகத்திலிருந்து விலகி திராவிட முன்னேற்றக் கழகம் உருவானபோதே ஒரு மடைமாற்றம் நிகழ்ந்தது மறுக்க முடியாததுதான்.

இந்திய விடுதலையை நிராகரித்த பெரியாரிலிருந்து அண்ணா மாறுபாடு கண்டபோதே அது நேர்ந்துவிட்டது. இந்திய விடுதலையைக் கருத்தியலாக அங்கீகரித்ததோடல்லாமல் தேர்தல் அரசியலில் தீவிர பங்கு பெற்ற காலம் 'திராவிடம்' அதன் அடிப்படைகள் மாறி வடக்கு x தெற்கு, இந்தி x தமிழ் என்பதானது. ஆரியம் x திராவிடம் அதன் அடிப்படையான 'தனிநாடு' என்னும் கோரிக்கை வலுவிழந்தபோது, புதிய கருத்தாக்கங்களான வளர்ச்சியில் பங்கு, மொழி முன்னுரிமை என்பதாக மாறிப் போனது. கவனத்திற்குரிய மற்றொரு விஷயம்

ஐம்பதுகள்வரையிலான 'திராவிடம்' என்ற முனைப்பு சென்னை ராஜதானியான தென் மாநிலங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தபோதும் அதன் தீவிரச் செயல்தளம் 'மெட்ராஸ்' என்னும் சென்னையை மையமாகக் கொண்டிருந்தது. ஐம்பதுகளில் உருவான மொழிவாரி மாநிலங்கள் திராவிடத்தின் அடிப்படையையே அசைத்துவிட்டது உண்மை தான். 'திராவிடம்' என்ற கருத்தாக்கம் உருவான வேளையில் அதன் செயல் தலைவர்களாக இருந்த டி.எம். நாயர், பிட்டி தியாகராயர், நடேசனார் முதலியோர் அதன் நிலவியல் எல்லைகளின் அடையாளங்களோடு நின்று திராவிடத்தைப் பருப்பொருளாக்கினர். நாடு விடுதலையடையும் முன்பே ஜஸ்டிஸ் கட்சி திராவிடர் கழகமானபோதே அதன் நில எல்லை சுருங்கி இன்றைய தமிழகம், தமிழர்கள் வாழும் இந்தியாவின் பிற நகரங்கள் என்பதானது.

அடிப்படையாகவே திராவிடம் தமிழ் எல்லைகள்தாண்டி திராவிடத்தின் பிற பிரதேசங்களான ஆந்திரம், கேரளம் மற்றும் கர்நாடகம் ஆகிய பகுதிகளில் கருத்தியலாகவே செல்வாக்குப் பெறவில்லை. தமிழ் நிலப்பகுதியின் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, அடித்தள மக்களின் இயக்கமாகிப் போனது திராவிட முன்னேற்றக் கழகம். இந்துத்துவ எதிர்ப்பு, மத மறுப்பு, பெண்விடுதலை எனச் செயல் திட்டம் கொண்டிருந்த பெரியார் சிந்தனைகளே, அண்டை மாநிலங்களில் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டிய அளவில் தாக்கமேற்படுத்தவில்லை என்பதுதான் கவனத்திற்குரியது.

அண்ணா கார்ட்டூன்களை திராவிட இயக்கம் சார்ந்த பத்திரிகை களிலிருந்து தொகுத்தபோதுதான் எதிர்தரப்புக் கார்ட்டூன்களையும் வைத்தால்தான் அது முழுமையடையும் என்று தோன்றியது. எதிர்தரப்புக் கார்ட்டூன்கள் தேடும் வேலையில்தான் ஒரு புதிய வெளிச்சம் எதிர்பட்டது. முப்பதுகள் தொடங்கி அரசியல் தளத்தில் செயல்பட்டு வந்த அண்ணா அவர்கள் மாற்றுக் கட்சியினரின் கவனம் பெற ஏறத்தாழ இருபது ஆண்டு காலத்திற்கு மேலாகிவிட்டது என்ற தகவல்தான் அது. சமூக இயக்கமாகச் செயல்பட்ட திராவிடர் கழகத்தின் தலைவர்களில் ஒருவராக, பெரியாரின் தளபதியாக, நீதிக்கட்சி மற்றும் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளராகச் செயல்பட்ட 'பேரறிஞர் அண்ணா' அவர்கள் தேர்தல் அரசியல் களம் காணும்வரை 'வர்த்தமானப்' பத்திரிகைகளின் கவனம் பெறவில்லை என்பது வியப்புதான். உதாசீனம் பிராமணீயத்தின் கொடிய பண்புகளில் தலையானது. பொது வெளியில் பெரும் சலனங்களை உருவாக்கி, சனாதனிகளின் மத்தியில் அதிர்வலைகளை உண்டாக்கிய ஆளுமைக்கு 'கவனவெளி' மறுக்கப்படுகிறது. இதோடு முடிந்துவிடவில்லை விஷமம். திராவிட முன்னேற்றக் கழகம் கண்டு, *1957*ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பதினைந்து சட்டமன்றத் தொகுதிகளைக் கைப்பற்றிய கட்சியாக மாறிய பின்னும் கவன மறுப்புத் தொடர்கிறது. அறுபது தொடக்கம் ராஜாஜியின் சுதந்திராக் கட்சியுடன் கூட்டணி கண்டதும்தான் வெளிச்ச ரேகை பரவுகிறது. ஆனாலும் பிராமணீயத்தின் கொடிய உருவரைவு அதன் கோர முகத்தைக் காட்டத் தவறவில்லை.

தமிழ் நிலப் பகுதி முழுவதிலும் பெரும் ஆக்கமும் ஊக்கமும் கொண்டு, மாற்றங்களைக் கொண்டு வரவல்ல சக்தியாகக் களம் கண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகமும் அதன் உருவ வடிவான அண்ணாவும், ராஜாஜியின் நிழலில் ஒண்டிக்கொண்டிருக்கும் ஒரு நோஞ்சானாகவே சித்தரிக்கப்பட்டுள்ளதை வேறு என்னவென்பது.

அதிலும் குறிப்பாக 1959ஆம் ஆண்டு 'மெட்ராஸ் கார்ப்பரேஷன்' தேர்தலில் வெற்றி கண்டு, இஸ்லாமிய இயக்கங்களின் துணையோடு மாநகராட்சியைப் பிடித்த தி.மு.க., ஒரு இடத்தில்கூட வெல்ல முடியாத சுதந்திராக் கட்சியின் 'அக்ராசனர்' ராஜாஜி அவர்களின் பின்னால்தான். அதைத் தொடர்ந்த சில காலங்களில் கரைந்து காணாமல் போகப் போகும் இயக்கமாக இருந்த சுதந்திரா கட்சி தலைமையில் தி.மு.க செயல்பட்டதாகப் பதிவுசெய்கின்றன 'நவசக்தி'யும், மெயிலும். கார்ட்டூன்களைக் கொண்டு வரலாற்றை வாசித்தால் விபரீதம் வெளிச்சமாகிறது. காமராஜரும், ராஜாஜியும் எதிரெதிர் அரசியல் சக்திகளாகவும், ராஜாஜியின் 'கை பாணமாக' அண்ணாவும் சித்தரிக்கப்பட்டுள்ளனர். பெரும் அரசியல் சக்தியாக உருவெடுத்துவரும் அண்ணாவையும் அவர் கண்ட இயக்கத்தையும் அவர்களுக்குரிய இடத்தில் வைத்துப் பதிவுசெய்யத் தவறியது தற்செயலானது என்று ஏற்க இயலவில்லை. மக்கள் மனநிலையைக் கணிக்கத் தவறிய குற்றமாகவும் கொள்ள முடியாது. 1962 பொதுத் தேர்தலில் ஐம்பது சட்டமன்றத் தொகுதிகளும், ஐந்து பாராளுமன்றத் தொகுதிகளும் கைவசமான பின்பும் சித்தரிப்பு அதே வடிவில் தொடர்கிறது. இன்றளவும் சாமர்த்திய சந்தர்ப்பவாதங்களால் தங்கள் ரகசியத் திட்டங்களை அரங்கேற்றிப் பொது வெளியில் உலவ விடும் பிராமணீயம் அன்றைக்கு அவ்வாறு செயல்பட்டதில் ஆச்சர்யமொன்றுமில்லை.

தொகுக்கப்பட்ட கார்ட்டூன்களையும், சித்திரத் தொகுப்புகளையும் காலமுறை வரிசையில் அமைப்பதா அல்லது தொகுப்பை சார்பு, எதிர்ப்பு என்று நிலை நிறுத்துவதா என்ற கேள்வி எழுந்தது. வரலாறாகப் பார்க்க காலமுறை வரிசைப்படுத்துவதுதான் சரியாக இருக்கும் என முடிவுசெய்யப்பட்டது. இந்த அடுக்குமுறை ஆதரவு கார்ட்டூன்களையும் அதே காலகட்டத்தில், அதே நிகழ்வுகள் தொடர்பான எதிர் கார்ட்டூன்களும் அருகருகே அமைத்து, ஒரு நிகழ்வின் இரு பார்வைகளும் அப்பார்வைகளின் கோணங்களையும் ஒரு சேரப் பார்க்கும் வாய்ப்பாகியது. 1962 தேர்தலையொட்டி நவசக்தி கார்ட்டூன், நடுங்கும் நோஞ்சான் அண்ணாவைக் குத்துச்சண்டை களம் இறக்குகின்றார் ராஜாஜி என்று சித்தரித்தால், எதிர்நிலையில் முரசொலி வீறுகொண்டு நிற்கும் அண்ணாவிற்கு எதிராக காமராஜர் அதிகாரம், பணபலம் என்ற கட்டாரிகளை ஒளித்துக்கொண்டு குத்துச்சண்டை களமிறங்குவதாகச் சித்தரிக்கிறது. இதில் கவனத்திற்குரிய விஷயம் தேர்தல் களம் தொடர்ந்து குத்துச் சண்டை மைதானமாகவே சித்தரிக்கப்படுகிறது. சமபலம் அல்லது உடல் எடை கொண்டவர்கள் மட்டுமே பங்கு பெறும் வரைமுறை கொண்ட குத்துச்சண்டை அரசியல் களத்தின் அடையாளமாகும்போது வலியவர்களுக்கும், எளியவர்களுக்குமான யுத்தமாகவும், பராக்கிரமசாலிகளுக்கும்

பலவீனமானவர்களுக்குமான யுத்தமாகவும் சித்தரிக்கப்பட்டது. அந்நாட்களில் குஸ்தி எனப்பட்ட மல்யுத்தங்களே ஊர் ஊராகச் சென்று காட்சிகளாக நிகழ்த்தப்பட்டன. ஒவ்வொரு ஊரிலும் குஸ்தி பயில்வான்கள் பிரபலமானவர்களாய் இருந்தனர். மல்யுத்தம் அல்லது குஸ்தி மக்களிடையே பிரபலமான விஷயமாயிருக்க அரசியல் கார்ட்டூன்கள் ஏன் குத்துச் சண்டைக் களத்தைத் தேர்வுசெய்தது என்பது புதிர்தான். குஸ்தியில் எதிராளிகள் ஒருவரையொருவர் பொருதி பலப் பிரயோகம் செய்து சாய்த்தல் நிகழ, குத்துச் சண்டையில் எதிராளியைக் குறி பார்த்துத் தாக்கும் உபாயம் அவசியத் தேவையாய் இருந்தது. இந்தத் தாக்குவது, விலகுவது, மீண்டும் தாக்குவது, பம்முவது போன்ற குத்துச் சண்டை செயல்முறைகள் அரசியல் நடவடிக்கையுடன் ஒத்துப் போனதாகக் கொள்வது சாத்தியம்.

முரசொலி முதலான கழக ஏடுகளில் வெளியான கார்ட்டூன்களில் நம்மை உடனடியாக ஈர்க்கும் குணாம்சம், அவை பெரும்பாலும் கழகத்தின் செயல்திட்டங்களை, கொள்கை முடிவுகளைக் கட்சித் தொண்டனுக்கும், கழக ஆதரவாளர்கள், அனுதாபிகள் ஆகியோரைச் சென்றடைவதற்கானது என்பதுதான். அதிலும் குறிப்பாக எதிர்வரும் போராட்டங்களுக்கான அழைப்பை முன்வைப்பது, நிகழ்வு குறித்த விமர்சனங்களை எதிர்கொள்வதாகத்தான் உள்ளன. கழக நடவடிக்கைகளை அணுக்கமாக அறிந்தவர்கள் அவர்களின் 'நாள்' குறித்த முக்கியத்துவத்தை அறிவார்கள். இன்றளவும் அண்ணா பிறந்தநாளை ஒட்டி நடைபெறும் முப்பெரும் விழாக்கள் அப்படி உருவானதே. குறிப்பாகச் சொல்வதானால் 'எழுச்சி நாள் போன்றவை சேலம் உருக்காலை மற்றும் தூத்துக்குடி துறைமுகம் முதலான கோரிக்கைகளை முன்வைத்து நடந்த போராட்டத் தேதியான 'ஜூலை 23'ஐக் குறித்தது. பெரும்பான்மையான ஏடுகள் வார ஏடுகளாக இருந்தமையால் நிகழ்வுகளின் தொகுப்பாக, அதாவது இதுவரை நிகழ்ந்தவைகளை வரிசைப்படுத்திப் பட்டியலிட்டு கழக மேடைப் பேச்சாளர்களுக்கான குறிப்பேடுகளாகவும் இவை விளங்கின. கழகம் பேச்சாளர்களின் குழுமமாகவே இருந்தது என்பது மனங்கொள்ளத் தக்கது.

கழக ஏடுகளின் கார்ட்டூன்களில் கவனத்தை ஈர்க்கும் மற்றொரு அம்சம் 'தமிழன்னை' தொடர்பானது. கடவுள் மறுப்பாளர்களான கழகத்தார் தொடர்ந்து அவர்களுக்கு ஆசி வழங்கும் பேருருவாகத் தமிழன்னையை உருவகித்திருப்பதுதான் கவன ஈர்ப்புக்கான காரணி. போராட்டம் தொடர்பாக சிறைவாசம் முடிந்து வெளிவந்தால், போர்க்களம் போன்ற தேர்தல் களம் கண்டால், ஆட்சியாளர்களின் அடக்குமுறை நசுக்கும் வேளையில், வெற்றி வீரர்களாகப் பவனி வரும் வேளையில் என அனைத்துச் சமயங்களிலும் 'தமிழன்னை'யின் அருளாசி அவர்களுக்குத் துணையாகிறது. 'தமிழன்னை'யின் உரு தேவதைக்கான அல்லது பெண் தெய்வங்களுக்கான வடிவில் உருவாகியிருப்பது சந்தர்ப்பவசமானதன்று. கடவுள் மறுப்பாளர்கள் தங்களுக்கான மாற்றைத் தமிழன்னை வடிவில் கொண்டனர் என்றே கருத வேண்டியுள்ளது. தமிழன்னை 'தெய்வாம்சம்' பொருந்திய

பேருருவாகிப் பின்னர் கோவில் கண்டதும் கழகத்தார் 'கைங்கர்யத்'தால்தான்.

காங்கிரஸ் பேரியக்கத்திற்கெதிரான அரசியல் செயல் தளம் கண்ட திராவிட முன்னேற்றக் கழகம் அதன் தலைவரான பேரறிஞர் அண்ணா அவர்களை காந்தியின் சீடராக, அவர் வழி நடப்பவராக, காந்தியாரின் ஆசிக்குரியவராகச் சித்தரிக்கும் பண்பு மற்றொரு கவனத்திற்குரிய அம்சம் எனலாம். இந்திய சுதந்திரத்திற்குப் பாடுபட்ட காந்தியார் போல திராவிட நாடு விடுதலையடைய அண்ணா உழைக்கிறார் என்பதில் தொடங்குகிறது. இந்த ஒப்பீடு. காந்தியை வெள்ளையன் தேசத் துரோகி என்றான் அன்று; அண்ணாவைத் தேசத் துரோகி என்கின்றது காங்கிரஸ் இன்று, என்கின்றது கார்ட்டூன். சிறையிலடைக்கப்பட்ட அண்ணா காந்தியாரைப் போல இராட்டையில் நூல் நூற்கிறார். மதுவிலக்கு கொள்கையில் உறுதியாக நின்று காந்தியச் சுடர் ஏற்கிறார் அண்ணா. காந்தியாரின் எளிமையைப் பின்பற்றி 'தென்னாட்டு காந்தி'யாகிறார் பேரறிஞர் அண்ணா. பொதுவாகவே அதிரடியான அரசியல் செயல்பாடுகளில் நம்பிக்கையில்லாத அண்ணா அவர்கள், அவரது 'உத்வேகம்' கொண்ட தம்பிகளுக்குச் சாந்த சொரூபியாய், அஹிம்சையின் ரூபமாய்த் தெரிந்ததில் வியப்பில்லை. ஆனால் காந்தியார் வாழ்ந்த காலத்திலேயே அவருக்கெதிரான நிலைப்பாடுடைய பெரியாரின் சீடராகச் செயல்பட்டவர் பின்னாளில் காந்தியின் அடியொற்றியவராக நிலைநிறுத்தப்பட்டது ஆச்சர்யமானதுதான். காந்தியுடனான இணைவு இறுதிவரை தொடர்ந்தது என்பதுதான் உண்மை. அண்ணா மரணமடைந்தபோதும் மேலுலகிலிருந்து (உறுதியாக சொர்க்கமாக இருக்க வாய்ப்பில்லை) காந்தியார் இரு கரம் நீட்டி "வா மகனே!" என அழைப்பதாக கார்ட்டூன் வெளியிட்டது 'மாலை முரசு'.

திராவிட முன்னேற்றக் கழகம் சார்பான ஏடுகளில் வந்த கார்ட்டூன்கள் பெரும்பான்மையான நேரங்களில் கேலிச்சித்திரமாக இல்லாமல் கருத்துப் படங்களாகவே இருந்தன. அதன் காரணமாகவே பலவேளைகளில் கார்ட்டூன்கள் அவற்றின் இலக்கணம் பிறழ்ந்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கார்ட்டூனின் முக்கிய அம்சமான, உடல் கூற்றின் ஒரு பகுதியின் மாறுபாட்டை மிகைப்படுத்தி, அதன் வழி அந்நபரின் செயல்களையும், அவரின் கொள்கைகளையும் கேலிசெய்வது, விமர்சிப்பது என்பதான செயல்பாடு கழக ஏடுகளில் காணக் கிடைப்பது அரிது. அநேகமான நேரங்களில் அண்ணா சராசரிக்கும் அதிகமான உயரத்துடன் சித்தரிக்கப்பட்டுள்ளார். இங்கு தனிநபரின் ஆளுமை பின் தள்ளப்பட்டு இயக்கரீதியான ஆகிருதியாக மாறி அதற்குரிய கம்பீரமும் ஆளுமையும் பெறுவதாகிறது.

தொகுப்பின் மிக பலமான பகுதி, கழக ஏடுகளின் சித்திரத் தொகுப்புக்கள்தான். அதிலும் குறிப்பாக 'முரசொலி' இதழில் வந்த சித்திரத்தொகுப்புக்கள் சமகால இயக்க வரலாறைக் கட்சியின் சகல தரப்பினரும் அறியும் வண்ணம் தொகுத்து ஒரு பெரும் பணியைச் செய்திருக்கிறது. தேர்தல் அறிக்கைகளை முன்வைத்துத் தேர்தலைச் சந்திக்கும் வழிமுறையைத் தொடக்கத்திலேயே கைக்கொண்டவர்கள்

தி.மு.க வினர் என்பது வரலாறு. இதன் வழி தொட்டுத்தான் சில தேசியக் கட்சிகளே தேர்தல் அறிக்கை வெளியிடும் நடைமுறையைத் தொடர்ந்தன என்பர். தேர்தல் அறிக்கையையே கார்ட்டூனாக, சித்திரத் தொடராக வெளியிட்ட ஒரே கட்சி திராவிட முன்னேற்றக் கழகமாகத்தான் இருத்தல் வேண்டும். 1962ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முன் முரசொலி பத்திரிகை பொங்கல் மலரில் தேர்தல் அறிக்கையைக் கருத்துப் படங்களாக வெளியிட்டிருந்தது. அதில் குறிப்பாக சென்னையில் சுங்கத் தீர்வையற்ற துறைமுகம், நெய்வேலி சுரங்கத்திட்டம், சேலம் இரும்புத் தொழிற்சாலை, அணுஉலைக் கூடம் என்பன போன்ற செயல் திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன. பின்னர் ஆட்சிப் பொறுப்பேற்றதும் செயல் வடிவம் கண்ட பேருந்துகளை தேசியமயமாக்குதல், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம், தரிசு நிலங்களை நிலமில்லா விவசாயிகளுக்கு அளிக்கும் திட்டம் ஆகியனவும் அத்தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன. பின்னர் இதையே கட்சியும் அதன் அதிகாரப்பூர்வ அறிக்கையாக வெளியிட்டதாக அறிகின்றோம். 1963ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலரின் சித்திரத் தொகுப்பு 'தீயணைக்கும் படை தி.மு.க, என்ற தலைப்பில் அதுவரை கழகம் கண்ட போரட்டக் களங்களைப் பட்டியலிட்டது. 1964ஆம் ஆண்டு முரசொலி பொங்கல் மலர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கப்படத்துடன் 'எது கொள்கையில்லா கட்சி' எனத் தலைப்பிட்டு வெளியிட்டுள்ளது. இந்தத் தொடர்கள் கட்சியின் கடைமட்டத் தொண்டனுக்குச் சக மனிதனிடம் விவாவதிக்கும் விஷயமானது. கருத்துப் படங்களின் முக்கியப் பகுதிகள் வாசக மன்றங்களின் கரும்பலகையில் உள்ளூர் ஓவியர்களால் வரையப்பட்டன. கருத்துப் பரவலுக்கான எளிய சாதனமாயின கார்ட்டூன்கள்.

திராவிடத்தின் எதிர்நிலையில் தேசியம் பேசிய காங்கிரஸ் பேரியக்க ஏடுகளைப் பொறுத்தவரை அவை பெருமளவில் பாதுகாக்கப்படாமல் காண்பதற்கு அரிதானவையாக ஆகி இருந்தன. தேடல் முயற்சியின் விளைவாய்க் கிடைத்தவை சொற்பமானவையே. எனினும் எதிர் தரப்பின் சித்தரிப்பின் அவசியம் கருதிக் கிடைத்தவற்றில் பெரும்பாலானவற்றைப் பயன்படுத்திக்கொண்டோம். இவ்வாறு கிடைத்ததில் சுதேசமித்திரன், நவசக்தி மற்றும் தி மெயில் என்ற ஆங்கில நாளேடுகள் அடங்கும். ஏற்கனவே தொகுத்துக் கொண்டபடி திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அரசியல் களம் கண்டு 1957 பொதுத் தேர்தலில் பதினைந்து சட்டமன்றத் தொகுதியையும் இரண்டு பாராளுமன்றத் தொகுதியையும் வென்ற பிறகே தினசரிகளின் கவனம் இவர்கள் பால் திரும்பியது என்றே தோன்றுகிறது. காணக் கிடைத்தவற்றில் சுதேசமித்திரன் இதழ்கள் 1955ஆம் ஆண்டு முதல் இருந்தபோதிலும், அவற்றில் கார்ட்டூனாகப் பரிமளிக்க, 1961ஆம் ஆண்டுவரை, அண்ணாவால் முடியவில்லை. பொதுவெளியில் செய்தி இதழாக வலம் வந்த நீண்ட பாரம்பரியம் கொண்ட சுதேசமித்திரன் நிலைப்பாடு ஆச்சர்யமானதில்லை. அநேக சந்தர்ப்பங்களில் தேசியவாதிகள், உருவாகி வரும் ஒரு பெரும் கருத்தியலை, பாரா முகம் காட்டியே மறுத்துவிட முயன்றது தெரிகிறது. சுதேசமித்திரனில் இடம்பெறும் முதல் சந்தர்ப்பத்திலேயும் அண்ணா, “மாபெரும் மக்கள் சக்தியான!” ராஜாஜியின் கைப்பாவையாக,

அவருக்கும் காமராஜருக்குமான 'மஹாயுத்தத்தில்' கரசேவை புரியும் அடிப்பொடியாகவே சித்தரிக்கப்பட்டுள்ளார். இந்த போக்கு சுதேசமித்திரனுக்கு மட்டுமானதன்று, நவசக்தி, தி மெயில் ஆகியவை ராஜாஜியின் 'விசுவரூபத்துக்கு'ப் பின்னால் மறைந்து நிற்கும் 'வாமன' அவதாரமாகவே அண்ணா சித்தரிக்கப்பட்டுள்ளார். இயக்க பலமோ தொண்டர் பலமோ அற்ற ராஜாஜி முதன்மைப்படுத்தப்பட்டது அவர் அன்றுவரை பெற்றிருந்த அரசியல் பொறுப்புகளினால் மட்டுமல்ல என்றே தோன்றுகிறது. தி.மு.கவை ஒரு அரசியல் சக்தியாக அங்கீகரிக்க மறுக்கும் மனத்தின் வெளிப்பாடே.

பண்பாளர் டி.எஸ். சொக்கலிங்கம் அவர்களின் சீரிய தலைமையின் கீழ், அவரது ஆசிரியப் பணியின் செம்மையில் வந்துள்ள கார்ட்டூன்கள் காலத்துக்கும் அவருக்குப் 'பண்பாளர்', அரசியல் நாகரிகத்தின் உச்சம் என்ற அடைகளை உரியதாக்கும் இதயனின் கார்ட்டூன்கள் நாலாந்தர மேடைப் பேச்சாளனின் வன்மையும் செம்மையும் கொண்டவை. அண்ணாவின் அரையில் பெண்கள் படங்களைச் செருகியும், அவரது படுக்கையின் மீது பெண் படங்களைப் பரப்பியும் செய்திருக்கும் விமர்சனப் பாங்கு தேசியவாதிகளை அவர்தம் பண்பு நலன்களை வெளிச்சமாக்குகின்றன. கூத்தாடிகள், கொள்கையற்றவர், ஒழுக்கமற்றவர்கள் என்பதைத் தாண்டி எழவில்லை கார்ட்டூன். கார்ட்டூன்களின் தரம் கண்டு தவிர்க்கலாமா என்ற எண்ணம்கூடச் சற்று நேரம் மின்னி மறைந்தது. ஆனாலும் அவர் தம் நாகரீகம் வெளிச்சம் படட்டும் என்றே தொகுப்பில் சேர்க்கப்பட்டது. அன்றைய நாகரீக தேசிய அறிவுஜீவி பொதுப்புத்தியில், ஏன் இன்றளவும்கூட, திராவிடம் பேசியவர்கள் குறித்த இளப்பமான எண்ணத்தின் வெளிப்பாடே இவையெல்லாம். அழுக்கு, ஒழுக்கமின்மை, புனிதமற்றது என்பவற்றோடு அடையாளப்படுத்தப்பட்ட திராவிடத்தைத் தூய்மை, அறம் சார்ந்தது, புனிதமானது என்ற தேசியத்திற்கு எதிராக முன்வைத்த பார்ப்பன மற்றும் பார்ப்பனரல்லாத சைவ வெள்ளாளர் உள்ளிட்ட மேல்சாதி சக்திகளின் தரங்கூடிய செயல் திட்டமேயாகும். பின் நவீனத்துவப் பின்புலத்தில் நேற்றைய தரச் சான்றுகள் ஓரங்கட்டப்பட்டு அனைத்தும் 'கட்டவிழ்ந்து', காலாவதியாகிப் போன புனிதத்தைக் கைவிட்டு இன்று 'வெகு மக்கள் கலாச்சாரம்' எனப் புளகாங்கிதம் அடைபவரும் அவர்தாம். தொன்னூறுகளின் மத்தியில் மதுரையில் பேரா. சிவத்தம்பி, பேரா. மார்க்ஸ், பேரா. தமிழவன், பேரா. தொ. பரமசிவன் முதலியோர் பங்கேற்ற 'திராவிடக் கருத்தியலும் அதன் பொருத்தப்பாடும்' என்ற தலைப்பில் எங்களால் நடத்தப்பட்ட மூன்று நாள் கருத்தரங்கு, இந்த மடை மாற்றத்தை அறிவித்த, அடையாளப்படுத்திய நிகழ்வு ஆகும்.

'நவசக்தி'யின் அரசியல் நாகரீகம் அளவற்றதாகவே இருந்ததாகப்படுகின்றது. இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலமான *25.10.63* நாளிடப்பட்ட கார்ட்டூன் அண்ணாவை தலையில்லா முண்டமாகச் சித்தரிக்கின்றது. கருத்துப்படம், 'இந்த முண்டமா போராட்டம் நடத்தப் போகுது' என்கின்றது. இதன் உச்சமாக அண்ணா முதல்வராகப் பதவி ஏற்ற பின்பு உடல் நலக்குறைவு ஏற்பட்டுப்

புற்றுநோய் சிகிச்சைக்காக அமெரிக்கப் பயணம் மேற்கொண்டபோது, 24.7.68ஆம் தேதியிட்ட நவசக்தி, "நவீனக் கடவுள்கள்?" என்ற தலைப்பிட்டு ஒரு கார்ட்டூன் வெளியிட்டுள்ளது. படத்தில் அண்ணாவின் உருவப்படத்திற்கு மாலையணிவிக்கப்பட்டிருக்க ராஜாஜி, காயிதே மில்லத், ம.பொ. சி முதலானோர் வணங்கி நிற்கின்றனர். இதற்குப் பின் ஐந்து மாதங்களில் அண்ணா மரணமடைந்தார். மரணமடைவதற்கு முன்பே மாலையிட்டு மரியாதை செய்த, நவசக்தியின் அரசியல் நாகரிகம் மெய்சிலிர்க்க வைக்கிறது. அப்போது நவசக்தியின் கௌரவ ஆசிரியர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள். உள்ளச் சுத்தியோடு பதிவுசெய்வதானால் 'இவ்வளவு தரமான!' கார்ட்டூன்கள் ஒன்றுகூடத் திராவிடப் பத்திரிகைகளில் காணக் கிடைக்கவில்லை. திராவிட இயக்க கார்ட்டூன்களில் காமராஜரை அவரது உரோமக் கட்டமைத்த உடற்கூற்றை மிகைப்படுத்தி வரையப்பட்ட கார்ட்டூன்களும் பக்தவத்சலம் அவர்களின் முக அமைப்பை விகாரமாக்கி வரையப்பட்ட கார்ட்டூன்களும் அனுமதிக்கப்பட்ட கார்ட்டூன் வரையறைகளுக்கு உட்பட்டனவே. அதேவிதமான, அதே வடிவமைப்பிலான கார்ட்டூன்கள் அண்ணாவைச் சித்தரித்தும் வரையப்பட்டுள்ளன என்பது கவனத்திற்குரியது.

தொகுக்கப்பட்ட கார்ட்டூன்களில் 'தி மெயில்' பத்திரிகையின் கார்ட்டூன்கள் பெரும்பாலும் கார்ட்டூன் வரையறைகளுக்குட்பட்டு நேர்த்தியாக வரையப்பட்டுள்ளன. ஆதரவு கார்ட்டூன்களும், எதிர் கார்ட்டூன்களும் அண்ணாவை கார்ட்டூனுக்கான கோணத்தில் பார்க்கத் தவறிவிட, 'தி மெயில்' மட்டுமே அவரது 'உருவத்தை' அடையாளப்படுத்தி கார்ட்டூன்கள் வெளியிட்டுள்ளது. ஆங்கிலப் பத்திரிகை என்றபோதிலும் அதன் கவனம் அண்ணாவின் மீது விழக் காரணம் பாராளுமன்றப் பிரவேசமே எனலாம். ஆனாலும் மெயிலும் ராஜாஜியை முன்னிலைப்படுத்தியே அரசியல் போக்கைப் பதிவுசெய்துள்ளது. மொழிப் பிரச்சினை குறித்த கார்ட்டூன்கள் தேசியவாதத்தின் சார்பு நிலையிலிருந்தே வரையப் பெற்றுள்ளன. கவனத்திற்குரிய மற்றொரு அம்சம் தேசியவாதிகளைப் போலவே, காலம் செல்லப் போகும் வழியைக் கணிக்கத் தவறிய சார்புநிலையே மிஞ்சி நிற்கிறது.

அங்கதம் சீராக்கும் அறுவை சிகிச்சை என்பர். கார்ட்டூன் கோடாரியால் கத்தரிக்கப்பட்ட அறுவை சிகிச்சை. விளைவுகள், கார்ட்டூன் முன்வைத்த இரக்கமற்ற உருவப்படிவம் போன்றே கொடூரமாக இருக்கக்கூடும், ஆத்திரமூட்டுவதற்காக மட்டுமே வரையப்படும் கார்ட்டூன்கள் அர்த்தமற்றவை என்கிறார் டைம்ஸ் பத்திரிகையின் கார்ட்டூனிஸ்ட் பிட்டர் ஃப்ருக்ஸ். அதே வேளையில் ஆதரவாக மட்டுமே வரையப்படும் கார்ட்டூன்கள் வெறும் பரப்புரையாக மட்டுமே நீர்த்துவிடும் அபாயம் உள்ளது. ஒரு வினோத பாவத்தில் கார்ட்டூனிஸ்ட்கள் இதழியல் துறையின் முரசங்கள் எனலாம். இதழில் வரும் பத்தியாளரின் பத்தியளவுக்குச் சித்திரக்காரரின் கார்ட்டூன்கள் தீவிரமான செயல் தளத்தில் இயங்குவதாகக் கருதப்படுவதில்லை. வெறும் கேலிச் சித்திரங்களாக மட்டுமே பரிசீலிக்கப்படுகின்றன. சித்திரக்காரன் விஷயங் களை அணுகுமுறையும், அது குறித்த அவனது அவதானிப்பும் ஒரு

பத்தியாளரின் பார்வையிலிருந்து முற்றிலும் மாறுபாடானது. அவதானித் தவற்றைச் சித்திரமாக்கும்போதும் ஒரு வரையறைகளுக்குள்ளேயே செயல்பட வேண்டியதாகின்றது. குறிப்பாக மதம் குறித்த கார்ட்டூன்கள் பல வேளைகளில் கடுமையான எதிர்விளைவுகளை உண்டாக்கிச் சித்திரக்காரனை முடக்கிப் போட்ட தருணங்கள் பல உண்டு.

தமிழ்ச் சூழலில் கார்ட்டூன்கள் கடும் எதிர்ப்புகளையும் விளைவுகளையும் உருவாக்கிய சந்தர்ப்பங்கள் ஒரு சில மட்டுமே. அண்ணா இந்திய அரசியல் சூழலில், தேசியப் பத்திரிகைகளில் வெளிவந்த கார்ட்டூன்களை உதாரணமாக்கி தேசியவாதிகளுக்கெதிரான விமர்சனங்களை முன்வைக்க ‘கார்டூனாயணம்’ எழுதினார். தங்கள் விமர்சனங்களை எவ்வாறு தேசியப் பத்திரிகைகள் முன்வைக்கின்றன என்கிறார் அண்ணா. நடுநிலையாளர்களான, தேசியத்தின் ஆதரவாளர்களாகப் பத்திரிகைகளின், பத்திரிகையாளரின் கார்ட்டூனை முன்னிறுத்தி அவரது பாணியிலேயே விமர்சனக்கணை தொடுத்திருக்கிறார்.

ஆனால் எதிர்நிலையிலோ காமராஜர் போன்றோர் கார்டூன் பிழைப்பதற்காக செய்யப்படும் செயலாக மட்டுமே பார்த்தனர்.[4] அதைத் தாண்டிய செயல் தளம் அவர்கள் அறியாததல்ல. ‘நவசக்தியின் நாகரிக கார்ட்டூன்கள் காமராஜர் கண்ணில் படவில்லை என எண்ண வாய்ப்பில்லை. தேசியவாதிகளின் கார்ட்டூன்கள் அன்றைய அவர்களின் மனநிலையின் வெளிப்பாடே. ஆட்சி கைமாறும்வரை கழகத்தினரைக் கூத்தாடிகளாக, பிரிவினைவாதிகளாக, கொள்கையற்றவர்களாகவே பார்த்தது காங்கிரஸ். மொழி, மாநில உரிமைகள் போன்ற அடிப்படைப் பிரச்சினைகளில்கூட தேசியத்திற்கு எதிரான வட்டார விருப்பங்களைக் கணக்கிலெடுத்துக்கொள்ளத் தவறியது காங்கிரஸ். திராவிட இயக்கத்தினர் கார்ட்டூன்களின் வீச்சை வெகுவாக உணர்ந்திருந்தனர் என்றே தோன்றுகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது பாளையங்கோட்டையில் சிறை வைக்கப்பட்டார் கலைஞர்; சென்னை உயர்நீதிமன்றத்தில் அவர்தரப்பு வாதமாக முன்வைத்த அபிடவுட்டில் அன்றைய முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களை முரசொலியில் வரையப்பட்ட கார்ட்டூன்கள் கடுமையாக விமர்சித்ததால், தான் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

தொகுப்பிலுள்ள கார்ட்டூன்களில் பெரும்பாலானவை ஏறத்தாழப் பத்தாண்டுகளுக்குட்பட்டவையே. 1935 வாக்கிலேயே தீவிர அரசியல் களம் கண்டு ஜஸ்டிஸ் கட்சியின் கடைசிப் பொதுச்செயலாளராய், திராவிடர் கழகத்தின் முதல் பொதுச்செயலாளராய், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அமைப்புப் பொதுச் செயலாளராய் நீண்ட காலம் செயல்பட்டவரின் கார்ட்டூன் வரலாற்றுப் பதிவு சொற்பமானதே. மிட்டா மிராசுகளும் ஜமீன்களும் நிறைந்திருந்த ஜஸ்டிஸ் கட்சி, பெரியார், அண்ணா ஆகியோரின் செயல் தளமானதும், பார்ப்பனர்களோடு அதிகாரப் போட்டியில் அரசியல் களம் கண்ட மேல் சாதியினர் கரைந்து தேசியத்தில் ஐக்கியமாயினர். மிஞ்சி விடப்பட்ட மக்கள் திரளைப் புறக்கணிப்பின் மூலமாக மறுத்துவிட முனைந்தது பிராமண மற்றும் மேல்சாதி கூட்டணி. வெகுமக்கள் வெளியில் உலவிய பெரும்

வணிகப் பத்திரிகைகளின் பாராமுகம் ஆச்சர்யத்திற்குரியதன்று. அப்பத்திரிகையின் வாசக வெளிக்கு அப்பால் இருந்தது தமிழ்ப் பெரும் சமூகம்.

எப்படியாயினும், கார்ட்டூன்களை, சித்திரத்தொகுப்புக்களைப் பரப்புரைச் சாதனங்களாக திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், அவை வெறும் கேலிச்சித்திரங்கள், அதனைத் தாண்டிய செயல் தளம் அதற்கில்லை என்ற நிலைப்பாட்டில் காங்கிரசும் இருந்தது தொகுப்பில் தெளிவாகின்றது. கார்ட்டூன்கள் தோன்றிய ஐரோப்பியச் சூழலைப் போன்ற எதிர்வினைகளை இங்கு காண இயலவில்லை என்றாலும், கார்ட்டூன் பற்றிய வாதங்களும் எதிர்வாதங்களும் நிகழ்ந்துள்ளன.

“இன்று அரசியல் விமர்சனத்தில் கார்ட்டூன்கள் பொருத்தமற்றவையாகிவிட்டன. நுகர்வுக் கலாச்சாரத்தில் திளைக்கும் மக்கள் அரசியல் குறித்த அக்கறையற்றவர்களாகிவிட்டனர். அரசியல்வாதி திருடனாயிருப்பதில் யாருக்கும் கவலையில்லை. மனக் கொந்தளிப்பற்ற சூழலில் சித்திரக்காரனுக்கான பிராணவாயு எங்கிருந்து கிடைக்கும்” என்கிறார் இந்தியா டுடேயின் இணையாசிரியர் ரவிசங்கர். அரசியலற்றுப்போன பொதுவெளி குறித்த அவரது அக்கறை கவனத்திற்குரியது. ஆனால் நுகர்வுக் கலாச்சாரத்தின் வெளிச்ச ரேகைகள் பதிவாகாத வெகு மக்கள் வெளியொன்று விரிந்துபரந்து கிடப்பதுதான் உண்மையென்று படுகிறது. உலகமயமாக்கலின் போக்கில் தேச எல்லைகள் அர்த்தமற்றவையாகி, யார் பிடிக்கும் சிக்காத நுட்பமாகப் பொருளாதாரச் சித்துகள் நடக்கும் நாளில், நேற்றைய நம்பிக்கைகள் கண்முன்னே சிதைந்து வரும் சூழலில், அடிமுடி காண முடியாத அவதாரங்களாய் அரங்கேறும் நிகழ்வுகளைத் தொகுத்து, வகைப்படுத்தி, பரிசீலித்து, பரிட்சித்து, விடை கண்டு புதிய கருத்தாக்கங்களை முன்வைக்கும் சிந்தனையாளனின் இடம் இன்னும் காலியாக இருப்பதாகவே தோன்றுகிறது.

கார்டூனாயணம்

சி.என். அண்ணாத்துரை

பதவிப்பித்தம் கொண்டலையும் ஒரு சில அரசியல்வாதிகள், பொதுமக்களின் ஆதரவைப்பெற முடியாத பேர்வழிகள் ஏதாவது குறை கூறிக்கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள், காங்கிரசாட்சியில் இது சொத்தை, இது சொள்ளை, இது ஓட்டை, இது உடைசல் என்று பேசிக்கொண்டு திரிகிறார்கள். பொறுப்புள்ளவர்கள், கருத்துத் தெளிவுள்ளவர்கள் யாரும் காங்கிரசாட்சியைக் கண்டிப்பதில்லை; மாறாக ஆதரிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள். வாழ்த்துகிறார்கள்—என்று கூறித் தம்மைத் தாமே தட்டிக் கொடுத்துக்கொள்வதிலே இன்றைய காங்கிரஸ் ஆட்சியினர் வல்லவர்கள்.

அவர்கள் இதுபோலக் கூறக்கேட்டு, சிலரேனும், கழகமோ பிற கட்சிகளோ வேண்டுமென்றே குறைபேசித் திரிவதாக எண்ணிக்கொள்ளக்கூடும் என்பதால் காங்கிரசாட்சியைக் கண்டிக்கவும், அந்த ஆட்சியின் நடவடிக்கைகளிலே உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டவும், எதிர்க்கட்சியினர் மட்டுமின்றி, வேறு எவரெவர் முனைகின்றனர் என்பதனை எடுத்துக்காட்ட நேரிடுகிறது.

காங்கிரசிலே முன்பு மிக உயர்ந்த இடமும் பொறுப்பான பதவிகளும் வகித்திருந்தவர்கள், இன்றைய காங்கிரஸ் ஆட்சியைக் கண்டிக்கின்றனர்.

பொருளாதாரப் பேரறிஞர்கள், பல்கலைக் கழகத்தவர், நிர்வாகத் துறை நிபுணர்கள், கண்டிக்கின்றனர்.

இதழ்களிலே அவ்வப்போது ஆட்சியின் போக்கைக் கண்டித்துக் கட்டுரைகளும் தலையங்கங்களும் கேலிச்சித்திரங்களும் (Cartoon) வெளியிடப்படுகின்றன.

இவர்களைப் பதவி கிடைக்காததாலே ஏமாற்றமும் எரிச்சலும் கொண்டவாகளென்றோ, பதவி ஆசைகொண்டு அலைபவர்கள் என்றோ, துணிந்த பேர்வழிகளும் கூறிட முடியாது.

எந்தப் பதவியைப் பெற வேண்டுமென்று எண்ணியிருந்திடினும் பெறக்கக்கூடிய நிலையினர்; ஜெயப்பிரகாஷ் நாராயணன் என்பதை மறுத்திடமாட்டார்கள்.

ஆச்சார்ய வினோபாவுக்கு நாற்காலிப் பைத்தியம் வந்துவிட்டது என்று கூறிடமாட்டார்கள்—எத்தனை ஆணவம் பிடித்த ஆளவந்தாராக இருப்பினும்.

இதழாசிரியர்கள், பதவியில் இடம்பிடிக்க வேண்டுமென்பதற்காகவே எதைஎதையோ எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்று ஆளவந்தார்கள் கூறின் ஏமாளிகூட அதனை நம்பமாட்டான். இதழாசிரியர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் தேசியப் போராட்டம் பற்றி எழுச்சி மிகக் கொண்டவர்கள். காங்கிரஸ் கட்சி இந்தப் போராட்டத்தை நடத்திற்று என்பதாலே அந்த அமைப்பினிடம் மட்டற்ற மரியாதை கொண்டவர்கள். பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் தலைவர்களுக்குப் புகழொளி தேடித் தருவதை தேசீயத் தொண்டு என்று கருதுபவர்.

அத்தகையோராலேயே, காங்கிரசாட்சியின் போக்கு மோசமாகிக்கொண்டு போவதைத் தாங்கிக்கொள்ள முடிவதில்லை; குமுறுகின்றனர்; குற்றம் குறைகளைச் சுட்டிக்காட்டினால், ஆட்சி தன்னைத்தானே திருத்திக்கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் எழுதுகின்றனர்.

எதிர்க்கட்சியினரின் கண்டனத்தை—ஏமாற்றத்தின் விளைவு என்றும், நிபுணர்களின் கண்டனத்தை அனுபவமற்றோரின் அபத்தம் என்றும் கூறிடும் காங்கிரஸ் ஆட்சியினர், இதழாசிரியர்களின் கண்டனத்துக்கு என்ன கூறுகின்றனர்? துச்சமென்று கருதுகின்றனர்! இவர்களுக்கு என்ன தெரியும் என்று கேட்கின்றனர்!

இந்தியாவின் பிரதம மந்திரி இந்திரா காந்தி அம்மையாரே, இதழ்களை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிவிட்டார்கள் என்றால், இடம் பிடித்தவர்கள், இலாபந்தேடிகள் என்னதான் பேசமாட்டார்கள்!

இதழ்களின் போக்கை இந்திரா காந்தி அவர்கள் கண்டித்தது கண்டு மனம் நொந்து, அகில இந்தியப் பத்திரிகையாளர் சங்கமே, தன் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறது.

சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்த காமராஜர், பத்திரிகைகளின் போக்கை அங்கு கண்டித்துப் பேசியதுடன், பத்திரிகைகளின் தயவினால் காங்கிரஸ் தேர்தல்களில் வெற்றிபெறவில்லை என்றே பேசிவிட்டார். இதனால் மனம் வெதும்பிய “டைம்ஸ் ஆப் இந்தியா” எனும் நாள் இதழ்கூட, இது அடுக்குமா என்று கேட்டிருக்கிறது. இன்றுவரை காமராஜர் சமாதானமோ விளக்கமோ தரவில்லை.

எதிர்க்கட்சிகளைத் துச்சமென்று எண்ணுவது போலத்தான், இதழ்களைப் பற்றியும் ஆளவந்தார்கள் எண்ணுகின்றனர்; மதிப்பளிக்க மறுக்கின்றனர்.

இதழ் பலவற்றில், காங்கிரசாட்சியின் கேடுபாடுகள், எழுதப்படின், பொதுமக்களின் மனதிலே காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி பரவுமே, அது நல்லதல்லவே, ஆபத்தாகிவிடக் கூடுமே என்ற கவலைகூடக் காங்கிரஸ் ஆட்சியினருக்கு எழவில்லை. எவராலும் அசைக்க முடியாத விதமாகத் தமது நிலைமை கெட்டிப்படுத்தப்பட்டுவிட்டிருக்கிறது என்று நம்புகிறார்கள்.

இதழ்களோ, ஆளந்தார்கள் மதிப்பளிப்பினும் தரமறுத்திடினும், மக்களுக்கு உண்மையைக் கூறிட வேண்டும் என்ற கடமை

உணர்ச்சியுடன் நடந்திட முற்படுகின்றன; கேடான செயலில் ஆளவந்தார்கள் ஈடுபடும்போது, கண்டனம் தெரிவிப்பதன் மூலம், ஆட்சியின் போக்கைத் தடுத்திடலாம், திருத்தவும் செய்யலாம் என்று நம்புகின்றன.

இன்றுவரையில், இதழ்கள் தெரிவித்துள்ள கருத்தினை மதித்து காங்கிரசாட்சியினர் தமது போக்கை மாற்றிக்கொள்ளவில்லை.

நாட்டு மக்களின் மனதை அறிந்து அதனை ஆட்சியினருக்கு எடுத்துக்கூறும் கடமை இதழ்களுக்கு. அந்தக் கடமை உணர்ச்சியை இதழ்கள் நிறைவேற்றும்போது, கடுங்கோபம் காட்டுகின்றனர் காங்கிரசாட்சியினர்.

தலையங்கம், கட்டுரை ஆகிய வடிவத்தில் தமது கண்டனத்தை அமைத்துத் தருவதுடன், நிலைமையை நன்கு விளக்கிட, இதழ்கள், கார்ட்டூன்—கேலிச்சித்திரம்—வெளியிட்டு வருகின்றன.

கார்ட்டூன்கள், எடுப்பாக அமைந்து, காண்போருக்குக் காங்கிரசாட்சி எப்படிப்பட்டது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

16 ஸ்ரீ மாச உங்களிடம் சர்வாதிகாரம் இருந்தும், மக்கள் ஏழ்மையில் உழல்வதேன்!



இத்தனை ஆண்டுகளாக ஈடு எதிர்ப்பற்ற முறையில் அதிகாரம் செலுத்தி வரும்போது, ஏன் காங்கிரசாட்சியினால் மக்களின் ஏழ்மையைப் போக்க முடியவில்லை என்று நாம் கேட்கும்போது ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறது. ஆனால் நமக்குத் தோன்றுவது போலவே இதழ்களுக்கும் தோன்றுகின்றன.

இதழ்கள் கொண்டுள்ள கருத்தை விளக்கிடவும், காங்கிரசாட்சியின் போக்கைக் கண்டிக்கவும், 'தேசிய பாரம்பரியத்துக்கும்' காங்கிரஸ் பக்திக்கும் நிதானத்துக்கும் பெயர் பெற்றுள்ள 'சுதேசமித்திரன்' வெளியிட்ட கார்ட்டூன் இது.

இன்றைய காங்கிரசாட்சி, மகாத்மா விரும்பிய முறையிலே ஆட்சி செய்யவில்லை: ஏழைகளுக்கு இதம் தந்திட முடியவில்லை என்ற கருத்துப்பட உள்ளதாகும் இந்தக் கார்ட்டூன்.

இதனைக் கண்ணுற்ற பல்லாயிரவர், இன்றைய காங்கிரசாட்சி, மகாத்மாவின் வழியிலே நடந்திடவில்லை; ஏழைகளுக்கு நல்வாழ்வு அளித்திடவில்லை என்ற கருத்தினை எப்படிப் பெறாமல் போக முடியும்? ஏழை எளியோரை இந்த ஆட்சி ஏமாற்றிவிட்டது என்று எதிர்க்கட்சியினர் பேசும்போது இது கட்சி மாச்சரியத்தின் விளைவு என்று எண்ணிக் கொள்ளக் கூடத்தோன்றும். 'மித்திரன்' கட்சிமாச்சரியம் கொண்டா இந்த கார்ட்டூனை வெளியிட்டிருக்கும்! இந்த இதழே—வெகு நிதானமாக ஆனால் ஆழ்ந்த முறையிலே பிரச்சினைகளைக் கவனிக்கும் பொறுப்புமிக்க மித்திரனே இன்றைய காங்கிரசாட்சி ஏழையின் இன்னலைப் போக்கத் தவறிவிட்டது என்று இடித்துரைக்க முற்படுகிறது என்றால் நிலைமை மோசமாகிவிட்டது என்றுதானே பொருள்!

காங்கிரசையா குறைகூறுவது என்று எவரும் கொதித்தெழ முடியாத வகையில் மித்திரன் வெளியிட்டுள்ள கார்ட்டூனில் காங்கிரசை, மகாத்மாவே கண்டிப்பதாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. எத்தனையோ சங்கடங்கள், தொல்லைகள், தடைகள் அதனால்தான் எம்மாலே ஏழைகளுக்குப் போதுமான அளவு இதம் செய்திட முடியவில்லை என்று காங்கிரசாட்சியினர் சமாதானம் கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது. கார்ட்டூனில் காணப்படும் காந்தியார் கேட்கிறார் திட்டவட்டமாக. 16 வருடங்களாக உங்களிடம் சர்வாதிகாரம் இருந்தும் மக்கள் ஏழ்மையில் உழல்வதேன்? என்று.

நீண்ட காலமாக ஆட்சி நடத்துகிறீர்கள். எவருடைய குறுக்கீடும் இல்லாத முறையில் எல்லா அதிகாரமும் பெற்றிருக்கிறீர்கள். இருந்தும் மக்கள் ஏழ்மையில் உழல்கிறார்கள், ஏன்? இந்தக் கேள்வியைக் கார்ட்டூன் மூலம் எழுப்புகிறது இதழ்.

எதிர்க்கட்சிகள் இதே கேள்வியை எழுப்பும்போது, மக்கள் கவனிப்பதைவிடக் கூர்மையாகவே, 'இதழ்' எழுப்பும்போது கவனிப்பர்.

ஆளவந்தார்கள், இவ்விதமான கேள்விகளை எதிர்க்கட்சிகள் எழுப்பும்போது கொதிப் படையும் அளவு, இதழ்கள் கார்ட்டூன் போட்டுக் காட்டும்போது கொதிப்படைவ தில்லை; காரணம் எதிர்க்கட்சிகள் காங்கிரசாட்சியைக் கண்டிப்பதுடன், 'ஓட்டுக் கேட்கவும் செய்கின்றன; இதழ்கள் அப்படிக் கேட்பதில்லை. அதிலே ஒரு திருப்தி, ஒரு மகிழ்ச்சி காங்கிரசாட்சியினருக்கு.

ஆனால் பொதுமக்கள் காங்கிரசாட்சியிடம் கொண்டுள்ள 'பக்தி' இதழ்கள் வெளியிடும் இவ்விதமான கார்ட்டூன்கள் மூலம், மெள்ள மெள்ளத் துளைக்கப்படுகிறது. இது எதிர்க்கட்சிகளின் நேரடியான கண்டனத்தைவிட வலிவான தாக்குதல், என்பதை நுண்ணறிவினரே உணர்வர்.

மித்திரனே கேட்கிறதே! படமே போட்டுக் காட்டுகிறதே! என்று பல்லாயிரவர் பேசிடச் செய்கிறது கார்ட்டூன்—அந்தப் பேச்சு வலுவடைய வலுவடைய, பரவப் பரவ, நிச்சயமாகக் காங்கிரசுக்கு மக்களிடம் உள்ள பிடி தளரத்தான் செய்யும்; தளர்ந்துவிட்டிருக்கிறது.

'இந்தி' ஆட்சிமொழி ஆக்கப்படுவதை எதிர்க்கட்சிகள் பல எதிர்க்கின்றன; நமது கழகம். 'இந்தி' ஆதிக்க ஒழிப்புக்காக அறப்போர் நடாத்திற்று. காங்கிரசாட்சியினர் பிடிவாதத்தை விடமறுக்கின்றனர். காரணம் அவர்கள் இதர மொழியினரைத் துச்சமென்று கருதுகின்றனர். அவர்களின் உணர்ச்சியைக் கவனிக்க மறுக்கின்றனர்.

இந்தி வெறியர்கள்—இந்தி ஆதிக்கக்காரர்கள்— இந்தி ஏகாதிபத்தியம்—என்று கூறப்படுவதைக் கூட, எதிர்க்கட்சிகள், குறிப்பாக தி.மு, கழகம் கக்கிடும் பகை உணர்ச்சி என்று பொதுமக்களிடம் காங்கிரசாட்சி கூறிவருகிறது.

மற்ற மொழியினர், உரிமை இழந்திடுவர், வாழ்வு இழந்திடுவர், இந்தி ஆட்சிமொழி யாக்கப்பட்டு விட்டால் என்று நாம் கூறும்போது, 'வீணான பீதி' என்று பேசுவது ஆட்சியினருக்கு வாடிக்கையாகிப் போய்விட்டது.

இந்த 'கார்ட்டூன்', மித்திரன் இதழில் காணப்படுவது. இதர மொழியினர் என்ன பாடுபடுவர் இந்தி, ஆதிக்கம் பெற்றால் என்பதை இதைவிடத் தெளிவாகவும் மனதிலே கைக்கும் விதமாகவும், எந்த எதிர்க் கட்சிக்காரரும் பேசவோ எழுதவோ முடியாது. இந்த கார்ட்டூனைப் பார்த்த பிறகும், இந்தி ஆதிக்கத்தால் பிற மொழியாளர் நசுக்கப்படுவர், காலின் கீழ் போட்டுத் துவைக்கப்படுவர் என்ற உண்மையினை எவரேனும் உணர்ந்திட மறுத்திடின். அவர்களைக் காங்கிரஸ் சந்தையிலே விலைபோன சரக்கு! என்று கூறி விடலாம்.

ஹிந்தி வெறியர்கள் வ்ருப்பப்படி நடந்தால் இப்படியொரு நிலைதான் ஏற்படக்கூடுமென மற்ற மொழியினர் அஞ்சுவதில் ஆச்சரியமென்ன?

'கார்ட்டூன்—மிகத் தெளிவான முறையில் இந்தி வெறியர் வெற்றிபெற்றால், பிற மொழியினருக்கு ஏற்படக்கூடிய நிலையைக் காட்டுகிறது.

கழகம், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திடும்போது, "இதெல்லாம் ஓட்டு வேட்டைக்கு" என்று வெகு எளிதாகப் பேசித் தமது ஏமாளித்தனத்தைக் காட்டிக்கொள்கிறார்களே காங்கிரஸ் வட்டாரத்திலே சிலர், அவர்களே கூட, மித்திரன் இந்த கார்ட்டூன் வெளியிட்டிருப்பது, 'ஓட்டு வேட்டை'க்காக என்று கூற முற்படமாட்டார்கள்! ஏமாளிகள்கூட, தமக்கென்று ஒரு எல்லையை ஏற்படுத்திக்கொள்வார்கள் அல்லவா?

காங்கிரசிடம் பல்வேறு காரணங்களுக்காக—(நியாயமான காரணங்கள்)—பற்று கொண்டுள்ளவர்களுக்கு, இந்தி ஆதிக்கத்தைப் பற்றி கழகமோ வேறு எதிர்க்கட்சிகளோ கண்டனம் தெரிவிக்கும்போது, எரிச்சலாகவே இருக்கும்; நம்முடைய காங்கிரசா இப்படிச் செய்யும் என்று கேட்பர். ஆனால் அவர்களேகூட, நிலைமையை 'மித்திரன்' கார்ட்டூன் மூலம் படம்பிடித்துக் காட்டும்போது, எப்படி உண்மையை உணராமல் இருக்க முடியும்? இதுவரையில் நாம், கழகம் கட்சி மாச்சரியத்தாலும் ஓட்டு வேட்டைக்காகவும், காங்கிரசாட்சி மீது பழி கூறித் திரிகிறது என்று எண்ணிக்கொண்டிருந்தோம்: இப்போது 'மித்திரனே' கண்டிக்கிறதே; படமே போட்டுக் காட்டுகிறதே; வீண் பழி சுமத்துவதையா அந்த இதழ் தன் தொழிலாகக் கொள்ளும்! இருக்க முடியாதே. உண்மையைத்தான் இதழ் எடுத்துக் காட்டியிருக்கிறது. நாம்தான் இதுவரையில், காங்கிரசிடம் உள்ள 'பக்தி' காரணமாக, உண்மையை உணராமலிருந்து வந்தோம்; கார்ட்டூன் நமது கண்களைத்

திறந்துவைத்தது என்றுதான் எண்ணம் கொள்வர். எதிர்க் கட்சியின் பேச்சைக் கேட்கக்கூட விருப்பம் காட்ட மறுத்துவந்த வட்டாரத்திலேயே, இவ்விதமான கார்ட்டூன்கள் மனமாற்றத்தை ஏற்படுத்துவன; ஏற்படுத்தி விட்டுள்ளன.

காங்கிரசாட்சியின் விளைவாக மக்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிவிட்டிருக்கிறது என்று எதிர்க்கட்சி கூறும்போது, புள்ளிவிவரத்தைத் தயாரித்துக் கொட்டிக் காட்டுவதன் மூலமும் புருவத்தை நெறித்துக் காட்டுவதன் மூலமும் காங்கிரசாட்சித் தலைவர்கள் பதில் அளிக்கின்றனர்.

Peaceful co-existence

இந்த கார்ட்டூன், 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழுடையது. வேறு ஓர் பிரச்சனையை விளக்க இது வெளியிடப்பட்டுள்ளது என்றாலும், நாட்டு நிலைமை, ஆட்சித் திறமை எப்படி இருக்கிறது என்பதை, இதனைவிடத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்ட முடியாது. இளைத்துக் கிடக்கும் உருவங்களைக் காணும் எவருக்கும் மனம் பதறாமல் இருக்க முடியாது மனிதனையும் மாட்டையும் இந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டவர்களை, எனது கட்சியினர் என்று கூறிக்கொள்ளக்கூட உண்மையான காங்கிரசார் கூறுவர்? காங்கிரசாட்சியிலே தேனும் பாலும் கலந்து ஓடும் என்று நம்பிக்கொண்டிருந்தவர்கள் கண்ணில் 'எலும்புக் கூடுகள்' தெரிகின்றன என்றால், இதயத்தில் ஈட்டி பாய்வது போன்ற நிலையினராவர்.

இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வந்திடவா பாடுபட்டு சுயராஜ்யம் பெற்றோம் என்று பதறுவர். நமது கட்சியினரை, நல்லவர் என்றும் வல்லவர் என்றும் நம்பிக் கிடந்தோமே, ஆட்சியின் கோளாறுகளை எதிர்க்கட்சியினர் எடுத்துக்காட்டியபோதெல்லாம் எரிந்து விழுந்தோமே, 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழ், எதிர்க்கட்சி இதழ் அல்லவே! கட்சிக் கண்ணோட்டம் கொள்வதல்லவே! மகாத்மாவின் திருமகளும் தேவதாஸ் காந்தியை ஆசிரியராகக் கொண்டிருந்த ஏடாயிற்றே! நாட்டு நிலைமையை அந்த இதழ் படம்போட்டுக் காட்டுகிறதே பார்க்கவே பரிதாபமாக, பயங்கரமாக இருக்கிறதே என்று எண்ணிடாத நேர்மையாளர் இருந்திட முடியாது.



இந்தக் கார்ட்டூன், ஸ்டேட்ஸ்மன்' நாளிதழில் வெளிவந்தது. எலும்புக்கூடுகள் பேசிக்கொள் கின்றன! உனக்கு என்ன வியாதி? டாக்டர் என்ன சொல்லுகிறார் என்று ஒரு எலும்புக்கூடு கேட் கிறது? மற்றோர் எலும்புக்கூடு சொல்லும் பதில்.

வாங்கும் சக்தி குறைந்துவிட்டது

பண்ட நடமாட்டம் பரவலாக்கப்படுவதிலே குறைபாடு

மாற்றப்பட முடியாத உணவுப் பழக்கம். இவை காரணம், இந்த நிலைக்கு என்று கூறுகிறது எலும்புக்கூடு! இந்துஸ்தான் டைம்ஸ் கார்ட்டூன் எலும்புக்கூடுகளைக் காட்டுகிறது; ஸ்டேஸ்மன் எலும்புக்கூடு ஆகிவிட்டவர்களைப் பேசவைத்திருக்கிறது. காண்போர் என்ன எண்ணுவர்? ஓட்டு வேட்டைக்காகவா இந்த இதழ்கள் இவ்விதம் படம்போடுகின்றன இல்லையே! நாட்டு நிலைமையை எடுத்துரைப்பது இதழ்கள் மேற்கொண்டாக வேண்டிய ‘அறம்’ என்பதாலே. நாட்டிலே, காங்கிரசாட்சியினால் உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை, மக்கள் பஞ்சத்தால் தாக்கப்பட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சிகள் கூறும்போது கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. இந்தப் படங்களைப் பார்க்கும்போது? எதிர்க்கட்சிகளின் பேச்சைக் கேட்பதே ‘தேசியப்பாவம்’ என்று எண்ணிக்கொண்டுள்ளவர்களும்கூட அல்லவா, இந்த கார்ட்டூன்களைக் கண்டதும் வெட்கத்தால் தலைகுனிந்து கொள்வர், வேதனையால் துடிப்பர்.

நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து வைத்துள்ளவர்களை மறுபடியும் அரியாசனம் அமரவிடுவது அக்ரமம், அநீதி என்று அவர்களுக்கே அவர்களின் உள்ளம் கூறிடாதா! கட்சிக் கட்டுப்பாடு களையும் உடைத்தெறிந்து கொண்டு உள்ளத்துக்குள் உண்மையைப் புகுத்த வல்லன இந்தப் படங்கள்.

ஏழை மீதுள்ள சுமை



‘மித்திரன்’ கார்ட்டூன் மாடாக உழைத்து. ஓடாகிப்போன ஏழை படும்பாட்டை எடுத்துக் காட்டுவது. வாழ்க்கைச் செலவு பெருத்துப்போகிறது: அதனை இழுத்துச் செல்லும்போது, பளு அழுத்துகிறது.

ஏழை எளியோர்களைக் காத்திடவே காங்கிரசாட்சி உளது; அந்த நோக்கத்துடனேயே பணியாற்றி வருகிறது என்று பறைசாற்றுகின்றனர்; பண்பாடுகின்றனர்.

இல்லையே, ஏழைக்கு அடுக்கடுக்காக இன்னல் வந்து தாக்குகிறதே; வாழ்க்கைச் செலவு ஏறிப்போய் அவன் தாங்க முடியாமல் தவிக்கிறானே; தற்கொலைகள் பெருகிவிட்டனவே என்று எதிர்க்கட்சிகள் கூறும்போது, கோபத்தால் துடிக்கின்றனர் கோலேந்திகள்.

இந்தப் படம் காணும்போது? இது எதிர்க்கட்சி தயாரித்த படமா? எதிர்க்கட்சி நடத்தும் இதழிலே வெளிவந்ததா? இல்லையே “மித்திரன்” வெளியிட்ட படம்! ஏழையின் நிலைமையை விளக்கும் படம்! இந்த நிலைமைக்கு ஏழையைக் கொண்டுவந்துவிட்டவர்கள், மீண்டும் ஆட்சிக்கு வந்திட வேண்டும் என்று கேட்பது எந்த நியாயத்தின் மீது! இந்த

எண்ணத்தைத் தந்திடும் விதமாக அல்லவா, படம் அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சியைத் தாக்கிடலாம்; அவர்தம் பேச்சினைக் கேட்காதே என்று கட்டளை பிறப்பித்திடலாம். ஆனால் இப்படிப்பட்ட படங்களையுமா மக்கள் பார்த்திடாமல் இருக்கச் செய்யப்போகிறார்கள்? பார்த்திடுவோர், இந்த ஆட்சியை வாழ்த்தியா வரவேற்பார்கள்.

நாட்டை எந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டு இவர்கள் தேர்தல்களம் செல்லுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் இந்த கார்ட்டூன், 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் வெளிவந்தது. இரத்தம் ஒழுகும் வாயுடன் புலி அவர்களைத் தொடர்ந்து வருகிறது; ஆளவந்தார்களை.

நிலைமைகளைக் கூறிடும் பதங்களையே அமைத்து புலி வடிவம் கொடுத்துவிட்டிருக்கிறார். கார்ட்டூன் ஓவியர்.

கலவரங்கள்

பொருளாதார நெருக்கடி

பற்றாக்குறை

பஞ்சம்

மாணவர் கிளர்ச்சி

இவைகள் நாட்டிலே இன்று இதற்கான பதங்களையே புலி வடிவமாக்கிவிட்டிருக்கிறார் ஓவியக்காரர்.

இந்தப் பயங்கரம், இவர்கள் உண்டாக்கியது. இந்தப் பயங்கரம் இவர்களைப் பின்தொடருகிறது. இதனை அறியாமல், 'தலைவர்கள்' தேர்தல் களம் செல்லுகிறார்கள்.

"திரும்பிப் பார்க்காதீர்கள் ஒரு பயங்கர மிருகம் நம்மைப் பின்தொடர்ந்து வருகிறது" என்று ஒரு தலைவர் மற்றவர்களுக்குக் கூறுகிறார். நிலைமையைக் காட்ட மிருகம் கவலை, கலக்கம், பீதி கொண்ட முகத்துடன் தலைவர்கள்.

நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டவர்கள், தேர்தல் களம் செல்லுகிறார்களே இது என்ன விந்தை என்று கேட்க இந்தப் படம்.

இதனை எதிர்க்கட்சி காட்டிடும்போது கடுங்கோபம் கொண்டிடும் பொதுமக்களிலே ஒரு பகுதியினர்கூட: இந்தப் படம் இதழில் வெளிவரக் காணும்போது, துக்கமும் வெட்கமும் கொள்வரன்றி கோபம் ஏன் கொள்ளப் போகிறார்கள்! கோபம் ஒரு வேளை பிறந்திடினும் எதிர்க்கட்சிகளின் மீது இருக்க முடியாது, இவ்வளவு கோணலாட்சி நடத்துபவர்களுக்கு நாம் கொடி தூக்கிகளாகிக் கிடக்கிறோமே என்பதை எண்ணி, தம்மீதே கோபித்துக்கொள்ளக்கூடும். நாலு பேர் எதிரே தலைநிமிர்ந்து நிற்க ஒட்டாத விதமாக ஆட்சியை அலங்கோலமாக நடத்திக் கொண்டுள்ளனரே என்று காங்கிரஸ் கட்சியின் மீது கோபம் வரக்கூடும்.



ஆனந்த கீதமல்லவா பாடுகிறார்கள் அமைச்சர்கள்: அவ்வப்போது பஞ்சம் வாழ பட்டினிச் சாவு ஏற்படாது—என்றெல்லாம்.

உண்மை நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நாட்டினருக்குக் காட்டிட வெளிவந்துள்ள படம் இது; மித்திரனில்.

கழுகுகள் ஒருபுறம் வட்டமிடுகின்றன. கீழே வீழ்ந்துள்ள பிணங்களையும் குற்றுயிராக உள்ளோர்களையும் கொத்தி... மற்றோர் அமைச்சர்கள், விளம்பரப் பலகையைப் பொதுமக்களுக்குக் காட்டுகின்றனர். ஆனந்தம் ஆனந்தம் என்று பாடுகிறது பலகை.

'பொதுஜனம்' நாட்டிலே என்ன நடக்கிறது என்பதை அறியாமல், இந்த அமைச்சர்கள் விளம்பரப் பலகையைக் காட்டி உண்மையை மறைக்க முனைகிறார்களே என்று எண்ணி' திரும்பிப் பாருங்கள் என்று வட்டமிடும் கழுகுகளைக் காட்டுகிறார். அமைச்சர்களின் போக்கை இதனைவிடக் கடுமையாகக் கண்டித்திட முடியாது. நாட்டுநிலைமையை விளக்கிட, இதனைவிட வேறோர் சித்திரம் தந்திட முடியாது. தந்தது மித்திரன். அரசியல் காழ்ப்பா காரணம்? அற்பனும் கூறிட அஞ்சுவான்.



பதுக்கலை ஒழிப்போம் பஞ்சத்தைத் துடைப்போம். அது ஆளவந்தார்களின் பரணி பாடியபடி உள்ளனர்; ஆனால் பதுக்கலை ஒழித்திட முடியவில்லை. அதனை விளக்கிட 'மெயில்' இதழ் வெளியிட்ட கார்ட்டூன் இது. ஒருபுறம் உற்பத்தியாளர்! மற்றோர் முனையில் வியாபாரி! நடுவிலே அமைச்சர்! அவர் நிலைமை சித்திரிக்கப்பட்டிருக்கிற விதத்தைப் பார்த்தால் அவரே சிரிப்பார். இவர்களிடம் 'பந்தாக' ஆகிறது தானியப்பதுக்கல்!! இந்த 'விளையாட்டு' ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, பட்டினி கிடந்திடும் மக்கள், பாத்திரத்துடன் மற்றோர் புறம் நின்றுகொண்டிருக்கிறார்கள், உணவு கொடும் என்று கேட்டபடி.

பதுக்கலை ஒழிக்க முடியவில்லை! பஞ்சத்தையும் பற்றாக்குறையையும் போக்க முடியவில்லை! இதனைத் தடுத்திடத்தக்க திறத்துடன் காங்கிரசாட்சி நடத்தப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறும்போது, வீண் கண்டனம்!— என்று அலட்சியம் காட்டிப் பேசுபவர்களும், மெயில் தரும் நிலைமை விளக்கப் படத்தைக் கண்டால், தமது போக்கை ஒரளவுக்காகிலும் மாற்றிக்கொண்டுதானே தீர வேண்டும்.



'மெயில்' இதழ், அறிவகம்—அன்பகம் ஆகிய இடமிருந்தா வெளி வருகிறது!

இந்த கார்ட்டூன், மித்திரனில் வெளிவந்தது! பட்டினி கிடந்திடும் மக்களுக்கு, அமைச்சர்கள் தந்திடும் பதில் எவ்வளவு பொறுப்பற்றதாக உளது என்பதனை எடுத்துக்காட்டுகிறது.

வருங்காலத் திட்டம்! பசித்த வயிறுக்கு அதுதான் சமாதானமாகத் தர முடிகிறது. திட்ட அமைச்சர் அசோக்மேத்தாவினால்.

விதைகள் முளைக்கட்டும், உமது பசி போக்கப்படும் என்கிறார்! அதுவரையில்; பீகார்! வேறென்ன!

இத்தனைப் பொறுப்பற்ற தன்மையுடன் நடந்துகொள்பவர்களையா மீண்டும் ஆட்சியில் அமர்த்துவது என்ற எண்ணத்தைக் கிளறத் தவறுமா, இந்தக் கார்ட்டூன்.



பஞ்சம் மிரட்டிக் கொண்டுள்ள நிலைமையிலே தான், ஆளுங்கட்சியான காங்கிரஸ் கட்சி. தனது கமிட்டிக் கூட்டத்தை நடத்திற்று, அதுபோல ஆங்கில இதழில் வெளிவந்த படம் இது.

பஞ்சமா! வீண்பீதி! யார் சொன்னது பஞ்சம்



இருப்பதாக! வீண்புரளி! —என்று ஆளுங்கட்சியினர் பேசுகின்றனர்—உரத்த குரலில்! ஆனால் பஞ்சமோ, சூரியனை விழுங்கிடும் கிரஹணம்போல இருக்கிறது என்று படம் காட்டுகிறது.

'மண்டை ஓடு' — பஞ்சத்தை விளக்கப் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. எந்த எதிர்க்கட்சியும் இது போலப் பேசிடின், காங்கிரசின் பூசாரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது! ஆனால் கட்சிக்காக நடத்தப்படாத, பொது இதழில் இந்தப் படம் வெளிவந்திருப்பதால், அவர்களும் தமது ஆத்திரத்தைக் கொட்ட முடிவதில்லை; எதிர்க்கட்சிகள் எதையாவது குறை கூறிக்கொண்டுதான் இருக்கும் என்ற அலட்சியப் போக்கு கொண்டுள்ளவர்களையும் ஓரளவு சிந்திக்கச் செய்திடும்.

விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது காங்கிரசாட்சி என்பது எதிர்க்கட்சிகள் 'இட்டுக்கட்டுவது என்று இடிமுழக்கம் செய்கின்றனர் காங்கிரசின் பேச்சாளர்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அமைச்சர்கள் பேசுகின்றனர். விலைகள் கட்டுப்படுத்தப் பட்டுவிட்டதெனச் சில அமைச்சர்கள் பொய்யை மெய்போலாக்கிக் காட்டு கின்றனர். இன்னும் சில அமைச்சர்களோ, விலை ஏற்றம் வளர்ச்சியின் அறிகுறி என்று தெம்மாங்கே பாடுகின்றனர்.

கட்டவிழ்ந்துவிட்டது, கந்துகமதக்கரிக்கு!



மேலே உள்ள இரண்டு 'மித்திரன்' கார்ட்டூன்களும், விலைவாசிப் பிரச்சினை இந்த ஆட்சியினரால் எந்த நிலைமைக்குத் துரத்தப்பட்டிருக்கிறது என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

உற்பத்தியாளர்—வியாபாரி—உபயோகிப்போர் ஆகிய மூன்று தரத்தாருக்கும் இடையிலே, பொது நன்மையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொடர்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய பொறுப்பு ஒரு நல்லரசுக்கு உண்டு.

இந்த ஒரு துறையில் எந்த அளவு வெற்றியை ஒரு அரசு பெறுகிறதோ அந்த அளவுக்குத்தான் ஆளுந்தகுதி பெற்றதாகப் பொருள்படும்.

இந்தத் தொடர்பைச் சரியான முறையிலே அமைத்திட காங்கிரஸ் அரசால் முடியவில்லை. அதற்குத் தேவையான திறமையைப் பெற்றுக்

கொள்ளவில்லை; அதனால்தான் விலைவாசிப் பிரச்சினை நாளுக்கு நாள், சிக்கல் நிறைந்ததாகி ஆபத்தான கட்டத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

அடிப்படைப் பிரச்சினை இது, இதிலே வெற்றிபெறத் தவறிவிட்ட ஒருகாரணம் போதும்; மீண்டும் காங்கிரஸ் கட்சி அரசாளக் கூடாது என்பதற்கு.

எதிர்க்கட்சிகள் இதுபற்றிக் கூறிடும் பேச்சு அவ்வளவும், காங்கிரஸ் ஆட்சியினருக்கு, ஏதோ கட்சி மாச்சரியப் பேச்சுபோலவே தென்படுகிறது. மித்திரன் காட்டிடும் படம் பற்றியும் காங்கிரசாட்சி அதே போக்கைக் கொள்ள முடியாது. இதழின் கருத்தை ஆட்சி அலட்சியப்படுத்திடினும் பொதுமக்கள், அலட்சியப்படுத்தமாட்டார்கள்.

Holding The Price Line



'பாரத்ஜோதி' என்ற இதழில், விலைவாசியைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியால் விளைந்துள்ள நிலை பற்றி வெளிவந்துள்ள கார்ட்டூன், வெறும் வேடிக்கைக்காக உள்ளதாகத் தென்படவில்லை; மக்கள் எவ்வளவு இடுக்கண்ணுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

விலைகளைக் கட்டுப்படுத்துவோம் என்று ஆட்சியாளர் கெம்பிரமாகப் பேசுவதைக் கேட்ட மக்கள் பெருமிதம் கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். உத்திரவு பிறப்பித்தால் போதும், விலைவாசி அஞ்சி கட்டுக்கடங்கிவிடும் என்ற நினைப்புடன் ஆட்சியாளர்கள் உள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டி, அரசு ஆணை பிறப்பித்து அல்ல, தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமே விலைகளைக் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்க்கட்சிகள் வாதாடும்போது காங்கிரசாட்சியினர் கோபம்கொள்கின்றனர்.

'அலையை என் ஆணையால் அடக்கிடுவேன்' என்று கூறி கடலோரம் தன் அரியாசனத்தைக் கொண்டுபோய் போடச்சொல்லி அதன்மீது அமர்ந்துகொண்டு. 'அலையே அடங்கு!' என்று ஆணை பிறப்பித்தானாம் கன்யூட் என்ற பிரிட்டிஷ் மன்னன். அவன் கேலிக்குரியவனானான்!! அந்த நிலைக்கு ஒப்பாக இருக்கிறது. ஆணை பிறப்பித்து விலையை அடக்குவோம் என்று காங்கிரஸ் ஆட்சியினர் பேசுவது என்ற



விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தேவைப்படும் நட வடிக்கைகளை எடுக்கவேண்டுமானால், பெரிய முதலாளி

கருத்துப்பட 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஒரு கேலிச்சித்திரம் வெளியிட்டிருக்கிறது. அது இது.

விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தேவைப் படும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டு மானால் பெரிய முதலாளிகள், பதுக்கல்காரர்கள் ஆகியோரிடம் பகைத்துக்கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும். அவ்விதமான துணிவு வரவேண்டுமானால், தேர்தல் நடைபெற்ற அவர்களிடம் கை நீட்டாதிருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சி அதற்குத் தயாராக இல்லை.

கம்பெனிகள் தேர்தல் நன்கொடை தருவது தடுக்கப்பட வேண்டும் என்பதற்கான சட்டம்போட காங்கிரஸ் அரசு (எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியும்) மறுத்துவிட்டது.

கம்பெனிகளிடமிருந்து கொழுத்த தொகையைக் காங்கிரஸ் கட்சி தேர்தல் நன்கொடையாகப் பெற்ற விவரமே வெளிவந்திருக்கிறது.

இந்நிலையில், விலைகளைக் கட்டுப்படுத்தும் முறைகளை விட்டுவிட்டு, மக்களை மயக்கவும், கண் துடைக்கவும், 'சூப்பர் மார்க்கட்' அமைப்பது போன்ற விளம்பர வேலைப்பாடுகளிலே காங்கிரஸ் அரசு ஈடுபடுவதை எதிர்க்கட்சிகள் கண்டிக்கும்போது, பதவி கிடைக்கவில்லையே என்ற எரிச்சல் காரணமாக இது, என்று கதைக்கிறார்கள்.

காங்கிரஸ் சர்க்காரின் அந்தப் போக்கையுப் கண்டித்து, அது போன்றே, இன்று ஒரு 'சூப்பா மார்க்கட்' ஆகிவிட்டது என்று கேலிசெய்து வாங்கிட ஆள் வருமா, வருமா என்று முன் வாயிற்படியிலே இந்திராகாந்தி அவர்களும், அடுத்த வாயிற்படியில் அமைச்சர்கள் சுப்பிரமணியமும் அசோக்மேத்தாவுப் ஆவலுடன் காத்துக் கிடப்பதாகவும் அங்கு இந்திராகாந்தியின் வாக்குறுதிகள், அசோக்மேத்தாவின் திட்டங்கள் என்ற சரக்குகள் மலிவான விலைக்கு கிடைக்கும் என்று பலகைகள் தொங்குவதாகவுப் கேலிசெய்து 'இந்துஸ்தான் டைம்ஸ்' கார்ட்டூன் வெளியிட்டிருக்கிறது. அது, இது.

"What line are we selling today, boss ?"

இவ்வளவு குறைகளும் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தீர்க்கப்பட்டுவிடும் என்று பேசுவதிலே காங்கிரஸ் ஆட்சியினர் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின் கதி என்ன? அவைகளால் யார் பயன் பெற்றனர் என்று நாம் கேட்கிறோம். உடனே கோபம் கொள்கின்றனர் ஆளவந்தார். நாலாவது ஐந்தாண்டுத் திட்டமும், தெளிவாக இல்லை, தேவையை உணர்ந்து தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை. மனம்போன போக்கிலே எழுதப்பட்டதாகத் தெரிகிறது என்றெல்லாம் கூறும்போது, பேதைகளே! திட்டத்தையா கேலி பேசுகிறீர்கள் என்று முழக்கமிடுகின்றனர்.



ஐந்தாண்டுத் திட்டம் எவ்வளவு தெளிவற்றதாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள கார்ட்டூன், இதோ.

'அசோக்மேத்தா — திட்ட அமைச்சர் அல்லவா! அவர் திட்டத்தைக்காட்டி விளக்குவதாகப் படம் அமைந்திருக்கிறது. திட்டம் எப்படி இருக்கிறது? கோடுகள் — சுற்றிச் சுற்றி! ஒரு விளக்கமற்று! பார்த்ததும், ஏதோகோணல் கோணலாகக் கோடுகளைப் போட்டிருப்பது போலத்தான் தோன்றுகிறது.

விளக்கமற்று இருக்கிறது திட்டம் என்பதனை இந்தக் கேலிப்படம் எடுத்துக்காட்டுகிறது.

அதே இதழில், நாலாவது திட்டம் மக்களின் தேவையைச் சரியாகக் கணக்கெடுக்காமல், அளவு பார்க்காமல் தைக்கப்பட்ட சட்டைபோல இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் முறையில் கார்ட்டூன் வெளியிடப் பட்டிருக்கிறது.



"But won't you be fattened enough in the next ten years!"

சட்டை தைத்துக் கொண்டு வந்த தையற்காரராக அசோக்மேத்தா காட்சி தருகிறார். யாருக்காகச் சட்டை தைக்கப்பட்டதோ, அந்த ஆள் இளைத்த உருவத்தினன்! சட்டையோ மிகப்பெரிது! அவனையே மறைத்துவிடக்கூடிய அளவு பெரியது. அவன் திகைக்கிறான் இத்தனைப் பெரிய சட்டையா என்று. அமைச்சர் சொல்கிறார் — அளவு பார்க்காமல் சட்டை தைத்தவர் — இருந்தால் என்ன! அடுத்த பத்து வருஷத்தில் பெருத்துவிடமாட்டாயா! இந்தச் சட்டை அப்போது சரியாக இருக்கும்! — என்று. அந்த இலட்சணத்தில் விவரம்புரியாமல், திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்று இதழ் கேலிசெய்கிறது, திட்டம் தீட்டிடும் காங்கிரசாட்சியினர்.



'இந்து' பத்திரிகை காங்கிரசின் தலைவர்கள் இருமினாலும், தும்மினாலும், டாக்டருடன் ஓடிச்சென்று சிகிச்சை செய்திடும் நண்பனாக இருந்து வருகிறது. அந்த இதழினாலேயே தாங்கிக்கொள்ள முடியவில்லை, நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டுள்ள விதம். கேலிச்சித்திரம் வெளியிட்டிருக்கிறது.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய விவரம் பொறித்த பலகையைக் காட்டி, ஆசிரியர் பாணியில் இந்திராகாந்தி அவர்கள், விளக்கம் அளிக்கிறார்கள். அசோக்மேத்தாவும், அமைச்சர் சசீன்சவுத்திரியும் உடன் நிற்கிறார்கள். கடுமையான வரிப்பளுவு, பணவீக்கம், போன்றவைகளைத் தோளில் தூக்கிக்கொண்டு 'சாமான்யனுடைய விருப்பம்' என்ற உருவில் காமராஜர் வந்து நின்று இந்திரா அவர்களைக் கேட்கிறார், "அம்மா! இதிலே எனக்கு உள்ள இடம் எது?" — என்று.

இதனைவிடக் கடுமைமிக்க கண்டனம் எதிர்க்கட்சி எதனிடமிருந்தும் வரவில்லை என்று கூறலாம். நாலாவது திட்டம், சாதாரண மக்களுடைய நலனைக் கருதிப் போடப்படவில்லை; அவன் ஏற்கனவே பல்வேறு பாரத்தைச் சுமந்து தத்தளிக்கிறான். அவனுக்கு இதம் செய்வதாகத் திட்டம் அமையவில்லை என்பதனை இந்தப் படத்தின் மூலம் விளக்கி 'இந்து' இடித்துரைக்கிறது, 'இந்து' இதழ் இடம் பிடிக்கும் வேலையிலேயா இருக்கிறது? எதிர்க்கட்சியா நடத்துகிறது இல்லையே! ஆளுங்கட்சியை ஏத்தி ஏத்தித் தொழுது நிற்கிறது. எனினும் மக்களுக்கு உண்மையை எடுத்துக்கூறத் தவறிய குற்றம் சுமக்க வேண்டி ஏற்பட்டுவிடுமே என்ற எண்ணத்தால் இந்தப் படத்தை வெளியிட்டிருக்கிறது.

ரூபாயின் மதிப்பைக் குறைத்தது மானக்கேடான செயல் என்று எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவிக்கின்றன. அந்தப் பிரச்சினை பற்றி ஆளுங்கட்சி பேசுவது எவ்வளவு கேலிக்கூத்தாக இருக்கிறது என்பதை விளக்க.

"இந்துஸ்தான் டைம்ஸ்" இந்த கார்ட்டூனை வெளியிட்டிருக்கிறது, ஆளுங்கட்சியினரின் பேச்சைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள் திகைக்கின்றனர்; இது என்ன "கோஷ்டி கானமா" — அல்லது அமளி ஆலாபனையா! என்று. மிக முக்கியமான பிரச்சினை, நாட்டுப் பொருளாதாரத்துடன் மிகத் தொடர்புகொண்ட பிரச்சினை, நாணய மதிப்புக் குறைப்பு; இத்தகைய பிரச்சினை யிலேகூட ஆளுங்கட்சிக்குள் ஒருமித்த கருத்து இல்லை! ஊருக்கெல்லாம் ஒருமைப்பாடு வேண்டுமென்று வலியுறுத்தும் ஆளுங்கட்சியில், ஒருமித்த கருத்து இல்லை ஆளாளுக்கு ஒரு ஆலாபனையாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது இந்த கார்ட்டூன்.

நாணய மதிப்புக் குறைப்பே கேடானது; அதிலும், அதைத் தொடர்ந்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால், நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்று எதிர்க்கட்சியினரும், பொருளா தார நிபுணர்களும் கூறுகின்றனர். அவர்கள்மீது

ஆத்திரம் உமிழ்கின்றனர் ஆளவந்தார்கள். தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதாக எக்காள மிடுகின்றனர். ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது? இதே ஒரு படம்! — அதே இதழில் வெளிவந்தது.

நாணய மதிப்பைக் குறைத்த பிறகு உள்ள பொருளாதார நிலைமையை, கட்டுக்கடங்க மறுக்கும் ஒரு குதிரையாகக் காட்டி, அதனை ஒரு கொட்டிலில் போட்டுப் பூட்டி வைத்திருந்தனர் என்றும் எடுத்துக்காட்டி, கொட்டிலில் பூட்டு போடப்பட்டதே தவிர, கதவு போதுமான அளவு இல்லாததையும் காட்டி, குதிரை கொட்டிலை விட்டு வெளியே ஓடிவிட்டதைக் காட்டி குதிரை பறிபோன பிறகு கொட்டிலைப் பார்வையிடும் புத்திசாலிகளாக, அசோக்மேத்தாவையும் சசீன் சவுத்ரியையும் சித்திரித்துக் காட்டி, காங்கிரசாட்சியின் போக்குக்குப் பலத்த அடி கொடுத்திருக்கிறது இதழ்! ஏன்? எதிர்க்கட்சி என்பதாலா? இல்லை! நாட்டுக்கு உண்மையை எடுத்துக் கூறியாக வேண்டும் என்ற பொறுப்பினை உணருவதால்.

அதே இதழில் இது. பணவீக்கம் வெறிநாயாகவும், அதைக் கட்டுப்படுத்த போடப்பட்டுள்ள கயிறாக விலைவாசியையும் சித்தரித்துக் காட்டி, விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தவறியதால்; காங்கிரசாட்சியைக் கீழே தள்ளிவிடும் அளவுக்குத் துள்ளி, பணவீக்கம் எனும் வெறிநாய், மக்களைக் கடிக்க ஓடுவது போலவும், ஆட்சியாளர், 'கவலைப்படாதே! நான் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்' என்று கூறுவது போலவும், படம் தரப்பட்டிருக்கிறது.



Don't worry, I'm holding the price-line

பணவீக்கத்தால் மக்கள் தாக்கப்படுகிறார்கள், அதைத் தடுத்திடும் ஆற்றலை அரசு இழந்துவிட்டது என்பது கார்ட்டூனின் கருத்து. ஆற்றலை இழந்துவிட்ட அரசு மீண்டும் அரசாள என்ன உரிமை இருக்கிறது? என்ற கேள்வியை எவர் மனதிலும் எழுப்பிவிடக்கூடியவிதமான படம்! எதிர்க்கட்சி தீட்டியது அல்ல!

இந்நிலையில், பெரிய மோசடிகளைத் துணிந்து செய்துகொண்டு வருகின்றனர், முதலாளிகள். அவர்களை அடக்கிட காங்கிரஸ் அரசு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கை போதுமானதாக இல்லை. 'ராட்சத' சுறா மீன் — கப்பலையே கவிழ்க்கத்தக்கதான பெரிய சுறா மீனைப் பிடிக்க சாதாரணக் கயிற்றை வீசுவது எப்படியோ அப்படி இருக்கிறது, மோசடி செய்திடும் முதலாளிகளை அடக்கிட காங்கிரஸ் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை.

ஜெயந்தி கப்பல் கம்பெனி என்ற அமைப்பின் மூலம் சர்க்கரை மோசடி செய்யத் துணிந்த டாக்டர் தேஜாமீது நடவடிக்கை எடுக்க இந்த காங்கிரஸ் அரசு தவறிவிட்டது. பெரியதோர் மோசடி நடந்திருக்கிறது என்றாலும், பழமொழி சொல்லுவார்களே,

கடப்பாறையை விழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம் சாப்பிடுவது போல என்று, அதுபோல தேஜா பற்றிய நடவடிக்கை இருக்கிறது என்பதைக் காட்ட வெளியிடப்பட்ட கார்ட்டூன், இங்கு தரப்படுகிறது.



இந்த கார்ட்டூன் கல்கத்தா ‘அமிர்த பஜார் பத்திரிகா’வில் வெளிவந்ததாகும், கயிறு வீசுபவர், அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார்!

உள்நாட்டிலே நிலைமை இவ்விதம் இருக்கிறது. உருப்படியான முறையிலே எந்தப் பிரச்சினையையும் தீர்த்துவைக்க இயலவில்லை. பற்றாக்குறை வளருகிறது. பஞ்சம் மிரட்டுகிறது. பிணம் விழுகிறது. கழுகு வட்டமிடுகிறது! இவைகளைக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்து, அதிலே வெற்றி காண முயற்சிக்காததால் உலகுக்கு உபதேசங்களை வழங்கிக்கொண்டு இருக்கிறது. இந்தப் போக்கை எதிர்க்கட்சிகள் கண்டிக்கும்போது, நல்லது செய்தால் கூடவா கண்டிக்க வேண்டும்? உலக சமாதானம் வேண்டும்! ஒரு நாடு மற்றோர் நாட்டைத் தாக்கக் கூடாது என்று காங்கிரசாட்சி கூறுகிறது, தவறா? அமெரிக்கா தவறு செய்திடும்போது கண்டிப்பது குற்றமா? போர் நிறுத்தம் காண திட்டம் கண்டறிந்து கூறுவது தவறா? — என்று அடுக்கிக்கொண்டு போகின்றனர் ஆட்சியாளரின் அரவணைப்பிலே சுகம் காண்பவர்கள்.

எதிர்க்கட்சிகள் கேட்பதெல்லாம் நமது வார்த்தைக்கு, யோசனைக்கு, திட்டத்துக்கு, உலக நாடுகளிலே மதிப்பு ஏற்படத்தக்க விதமாக நாம் நடந்துகொள்கிறோமா என்பதுதான்.

THE RESPONSE

நமது யோசனைகளை ஏற்றுக்கொள்ளவும், அதற்கு மதிப்பளிக்கவும், எந்த நாடாவது தயாராக இருக்கிறதா என்பதுதான்.

வியட்நாம் பிரச்சினை பற்றி, இந்திரா காந்தி அவர்கள் ஒரு யோசனை கூறினார்கள்.

அந்த யோசனையை அமெரிக்காவும் ஏற்கவில்லை, வியட்நாமும் அதற்கு மதிப்பளிக்கவில்லை.

போதாது என்று, அம்மையார் அவர்கள் தமது திட்டத்தை எடுத்துக்கொண்டு சோவியத் ரஷியா சென்றார்கள். அங்கு சென்று திட்டத்தை சோவியத் தலைவரிடம் நீட்டியபோது, அவர் காட்டிய மரியாதையை மிக நாசூக்காக ‘இந்துஸ்தான் டைம்ஸ்’ படம் போட்டுக் காட்டிற்று.

அம்மையார் தந்திடும் திட்டத்தை, மெத்த நன்றி! என்று கூறி, சோவியத் தலைவர் ஏற்றுக்கொள்கிறார்! எதிலே? குப்பைக் கூடையில்!! கவனித்தால், கேலிபுரிகிறதல்லவா?

தேவையில்லாத விஷயங்களைக் கவனிப்பது நிலைமையை உணராமல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது. செல்லுமா என்பதறியாமல் செலுத்துவது போன்றவை, ஒரு அரசு பக்குவம் பெறவில்லை என்பதை எடுத்துக்காட்டுவனவாக விடுகின்றன.

உலக நாடுகள் பலவற்றிலே, நம் நாட்டுப் பஞ்சம், கடன் தொல்லை, குழப்பம் ஆகியவை பற்றிய பேச்சு மிகுந்திருக்கும் நேரம். எல்லா நாடுகளிடமும் உணவும் பொருளும், கடனாகவும் மானியமாகவும் நாம் கேட்டுப் பெறும் நிலைமை. இந்த நிலைமையில், சர்வதேசப் பிரச்சினைகளிலே தலையிட்டாக வேண்டும், பல நாடுகளைக் கூட்டி மாநாடு நடத்த வேண்டும், திட்டங்களைத் தயாரித்துத் திக்கெட்டும் அனுப்ப வேண்டும், நடுநிலைமைக் கொள்கைக்காக நாடு பலவற்றை இணைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வத்தை அடக்கிக்கொள்ள வேண்டாமா? காணோமே!



அமெரிக்காவிடம் கடனுக்கு மேல் கடனாக வாங்கியபடி இருப்பதால், பிரதம மந்திரி அம்மையாரின் நிலைமையே எப்படி ஆகிவிட்டிருக்கிறது என்பதை 'அமிர்த பஜார் பத்திரிகா' விளக்கி இருக்கிறது இந்த கார்ட்டூன் மூலம்.

கடன் மூட்டைக்குள்ளே அம்மையார் போட்டடைக்கப்பட்டு விட்டுள்ளார்கள். கை மட்டுமே வெளியே தெரிகிறது! அந்தக் கரத்திலே ஒரு அறிவிப்புப் பலகை. கடன்களை எல்லாம் ஒழித்துக் கட்ட அதிகக் கடன் கேட்கிறோம் — என்று அதிலே எழுதப்பட்டிருக்கிறது நிலைமை இது! எதிர்க்கட்சிகள், காங்கிரசாட்சி, நாட்டைக் கடன்கார நாடாக்கிவிட்டது என்று கூறும்போது எவ்வளவு ஆத்திரம் வருகிறது பிரதமமந்திரியாரை, மூட்டைகட்டிவிட்டிருக்கிறது கேலிப் படத்தில்!! என்ன செய்வார்கள்? ஓ! ஓ! எதிர்க்கட்சியின் எதிர்ப்பு என்று இதற்குக் கூற முடியுமா!!

இன்றைய அமைச்சர்களைப் பற்றிய மதிப்பீடு எப்படி இருக்கிறது என்பதை விளக்கிட 'டைம்ஸ் ஆப் இந்தியா' வெளியிட்ட படங்கள் இவை. நாட்டை ஆளும் தகுதி எமக்கன்றி வேறு எவருக்கு உண்டு என்று கேட்டு மார்தட்டுகின்றனர்; இங்கு இதழ் தரும் குட்டுகளைப் பார்த்தால், பரிதாபமாகக்கூட இருக்கிறது.

"You can come out sir, there is no firing — those are Diwali crackers!"

வெடிச்சத்தம் கேட்டு அமைச்சர் மிரண்டுபோய் மேஜைக்கு அடியிலே ஒளிந்து கொள் கிறாராம்! உயர் அதிகாரி சத்தத்திற்கான காரணத்தைக் கண்டறிந்த பிறகு, அமைச்சரை வெளியே வரச் சொல்லுகிறார்! "ஐயா! தாங்கள் வெளியே வரலாம்!

துப்பாக்கிச் சூடு ஒன்றும் இல்லை. கேட்ட சத்தம் தீபாவளி பட்டாசுச்சத்தம் வேறொன்றுமில்லை" — என்று அமைச்சருக்குத் தைரியம் கூறுகிறார்! அத்தனை அஞ்சா நெஞ்சம் அமைச்சருக்கு!!

பட்ட மரம்! அதன் கீழ் பஞ்சத்தால் அடிபட்ட மக்கள்! அதிகாரியும் பணியாளும் புடைசூழ. அமைச்சர் வந்திருக் கிறார் மக்களைக் காண. இந்த ஆண்டு கொஞ்சம் கஷ்டமான ஆண்டு" என்று, விளக்கம் தந்து மக்களின் விசாரத்தைப் போக்கப் பேசுகிறார் அமைச்சர். "இல்லை ஐயா! இந்த ஆண்டு கெட்ட ஆண்டு அல்ல. நல்ல ஆண்டு! இந்த ஆண்டுதான், முதன்முதலாக மந்திரிகள் இந்தப் பக்கம் விஜயம் செய்திருக்கிறார்கள்" என்று பேசுகிறான்; ஏழை! பேச்சா அது? இடித்துக் காட்டு கிறான். தேர்தல் நேரமாகப் பார்த்துத் தானே இந்தத் திரு வாளர்கள் தலை காட்டுவார்கள் என்பதனை.



அமைச்சர் சொற்பொழிவு ஆற்றுகிறார்! சொற்பொழிவைப் படிக்கிறார். கேட்போர் கேலிச் சிரிப்பொலி எழுப்புகின்றனர். கோபம் அமைச்சருக்கு! என் பேச்சையா கேலி செய்கிறீர்கள் என்று கேட்டாரா? இல்லை! என்னைக் கேலி செய்து சிரிக்காதீர்கள்; இந்தப் பிரசங்கத்தை எழுதிக்கொடுத்தாரே, அதோ அந்த ஆசாமி அவரைக் கிண்டல் செய்யுங்கள்!" என்று கூறி, அதிகாரியைச் சுட்டிக்காட்டுகிறார். அத்தனை அறிவுத்தீட்சணியம்! சொந்தச் சிந்தனை! பேசுபவர் அமைச்சர்; பேச்சு தயாரிப்பவர் அதிகாரி!! இது ஆட்சியின் நிலைமை!!



He's the luckiest among us — there have been no charges at all against him except that he is incompetent and inefficient.

நாலு மந்திரிமார் கூடி பேசுகின்றனர். அதிலே ஒரு அமைச்சரைக் காட்டி மற்றொருவர் சொல்லுகிறார், 'நம்மிலேயே இவர்தான் மிகுந்த அதிர்ஷ்டசாலி! இவர்மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை; திறமையற்றவர் என்பது தவிர! திறமைக் குறைவு என்ற குற்றம்

சாட்டப்பட்டவர்தான், எல்லோரைக் காட்டிலும் அதிர்ஷ்டக்காரர் என்றால், மற்ற மந்திரிகள் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் இருந்திருக்கக்கூடும் என்பதை யூகித்துக்கொள்ளலாம் அல்லவா! அவ்வளவு ஒழுங்கானவர்கள் இன்றைய அமைச்சர்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது, கேலிப்படம்.



முன்னதைவிட மோசமானது இந்தப் படம் காட்டிடும் நிலைமை. இது 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழில் உள்ளது.

அக்டோபர் 2! புனிதமான நாள்! மதுவிலக்கு அமுலாகும் நன்னாள்! மகாத்மாவின் திரு உருவப் படத்தின் முன்பு நிற்கிறார் ஒரு காங்கிரஸ் தலைவர்! ஒயிலாக நிற்பதாக எண்ணம்! ஆனால், பாவம் தள்ளாடும் நிலையிலே இருக்கிறார்! கையிலே டிரான்சிஸ்டர் ரேடியோ! ஜேபியில்? கீதை அல்ல! பெண் படம் போட்ட காம இச்சையைத் தூண்டும் இதழ். மேஜை மீது? நியூயார்க்! பாரிஸ்! ரோம்! இங்கெல்லாம் அவர் போய் வந்தவர் என்பதைக் காட்டும் தோல் பை! பக்கத்தில்? வெளியே சொல்லாதீர்கள் வெட்கக்கேடு! விஸ்கி பாட்டில்!!

அமெரிக்க நாட்டு நிருபரொருவர் பஞ்சம் தலை விரித்தாடும் பீகார் பகுதி சென்றபோது காங்கிரசின் தலைவர்கள் சிலர் மதுபானம் அருந்திக்கொண்டு மந்தகாசமாகக் கிடந்தனர் என்று எழுதினாராம்! இந்திரா காந்தியாரிடம் நிருபர்கள் கேட்டதற்கு, நேரடியான பதில் கிடைக்கவில்லை! அவ்விதம் செய்தவர்கள் காங்கிரஸ்காரராக இருக்க முடியாது என்றுகூடச் சமாதானம் கூறவில்லை, அப்படி எழுதினவர் உண்மையையே எழுதுபவரா! — என்று ஒரு புதிர்போட்டு அனுப்பிவிட்டார்கள்.

THE EMPTY BOWL

காந்தியார் படத்தின் முன்பு நிற்கும் காங்கிரஸ்காரர் ஒருவருடைய நிலைமையைப் படம் போட்டுக் காட்டியிருப்பது அமெரிக்க இதழ் அல்ல!

சுவற்றிலே தொங்கவிடப்பட்டிருப்பது என்ன? குடி மிகப் பெரிய கேடு! காந்தியாரின் மணி மொழி! மேஜை மீது! விஸ்கி பாட்டில்! தலைசுற்றும் — அவருக்கு அல்ல பழக்கப்பட்டவராகவும் துணிந்த பேர்வழியாகவும் அவர் இருப்பார் — நமக்கு — இப்படிப்பட்ட நிலையில் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் இருக்கின்றனரே என்று! இருக்க முடியுமா என்றுகூடச் சந்தேகம் தோன்றும். ஆனால் இருக்கிறார்கள் என்பதால்தான் இந்துஸ்தான் டைம்ஸ் இந்தப் படம் போட்டுக் காட்டுகிறது.

நாட்டு நிலைமை இந்த இலட்சணத்தில் இருக்கிறது. பேச்சோ, பொறி பறப்பதாக! படுத்துக் கொண்டே ஜெயிப்போம் என்பதாக! எதைக்காட்டி? எடுத்துக்காட்டப் பட்டுள்ள இந்தப் படங்களைக்

காட்டியா? இந்தப் படங்கள் காட்டிடும் நிலைமைகளைக் காட்டியா? இதோ ஓர் காட்சி! படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று பேசுகிறாரே அமைச்சர் சுப்பிரமணியம் அவர் தெரியும் காட்சி. கப்பரையும் கையுமாக நிற்கிறார்!

ஐயோ! பசி — அவர் கெஞ்சுகிறார்! யார் எதிரே நின்றுகொண்டு அமெரிக்கக் குடி அரசுத் தலைவர் எதிரில் தலையைச் சொரிந்துகொண்டு கவலைப்படுகிறார். அமெரிக்கத் தலைவர்! ஏன்? பெரிய கொப்பரையிலிருந்து எடுத்தெடுத்து சுப்பிரமணியத்தின் கப்பரையை நிரப்புகிறார் — பலதடவை! போதவில்லை போதவில்லை! பசி! பசி! — என்றே அமைச்சர் கேட்டபடி இருக்கிறார். ஏன்? கப்பரையைக் கவனித்தால் காரணம் புரியும். அடியிலே ஓட்டை! ஊற்றுவது கீழே போய்விடுகிறது! ஓட்டைக் கப்பரையிலே எவ்வளவு ஊற்றினால்தான் என்ன பலன் என்று அமெரிக்கத் தலைவர் திகைக்கிறார்.

"Not me—ask that Sahib first!"

அமெரிக்க உதவி மேலும் மேலும் கிடைத்தாலும் ஒழுங்கான நிர்வாகம் இல்லாததாலே, உருப்படியாகவில்லை என்ற பாடத்தைக் காட்டுகிறது, படம்!

இந்த மாபெரும் சாதனை இருக்கிறதே ஓட்டைக் கப்பரையை ஏந்திக்கொண்டு. "ஐயா! பசி!" என்று கேட்டிடும், மகத்தான சாதனை இதற்காகப் பாராட்டித்தான் மக்கள் ஓட்டு அளிக்க வேண்டும் என்று அமைச்சர் எதிர்பார்த்து படுத்துக்கொண்டே ஜெயிப்போம் என்று பேசுகிறார்போலும்!

போகவிலாஸ் ஓட்டல் வாசற்படி! உள்ளே இருந்து வருகிறார். அமெரிக்க அதிபர் ஜான்சனும் சோவியத் தலைவர் கோசிஜினும்! கந்தல் உடை! நீட்டிய கரம்! பரிதாப நிலையுடன்! ஐயா! காசு! — கேட்டபடி நிற்பது யார்? படுத்துக் கொண்டே ஜெயிப்பேன் என்று பேசுகிறாரே, அமைச்சர் — அவரேதான்! என்ன பதில் கிடைக்கிறது? ஜான்சன், கோசிஜினைக் காட்டிக் கூறுகிறார் "முதலில் அதோ அந்த ஐயாவைக் கேள்" — என்று கோசிஜின் ஜான்சனைக் காட்டி, இந்த ஐயாவை முதலிலே கேள்!" என்கிறார்.

நாட்டு நிலைமை இன்று இது. இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டுவந்து விட்டுவிட்டவர்கள்தான். நாடாளும் தகுதி எமக்கன்றி வேறு எவருக்கு உண்டு என்று கேட்கின்றனர்.

இவர்களின் தகுதி திறமைப் பற்றி. எதிர்க்கட்சி ஏடுகள் அல்ல. காங்கிரசுக்கு ஆதரவு தேடிடும் ஏடுகளே. கொடுத்திடும் நற்சான்றுகளிலே சிலவற்றைத்தான் இங்கு தர முடிந்திருக்கிறது.

நானும், ராஜாஜி, காயிதேமில்லத் ஆகியவர்களும் ஒரு கழுதை மீது சவாரி செய்வதாக, 'விகடன்' படம் போட்டுக் காட்டிற்று. நண்பர்கள் வருத்தப்பட்டார்கள்! நான் சமாதானம் சொன்னேன்

— கழுதை மீது சவாரி செய்வதாகத்தானே படம்! கழுதையாக சித்திரிக்கவில்லையே! — என்று. இப்படி ஏதாவது ஒரு சமாதானம் சொல்லிவிட்டால் போதுமா என்று சலித்துக்கொண்டார்கள்.

விகடன் அதிபர், காங்கிரஸ்காரர்! ராஜ்யசபை உறுப்பினர். அவர் எதிர்க்கட்சிகளைக் கேலிப்படம் மூலம் கேவலப்படுத்துகிறார், பண்பு அல்ல என்றாலும், அது அவர் தம்முடைய கட்சிக்காகச் செய்திடும் 'சேவை' என்று கருதிக்கொள்ளக்கூடும். அவர், என்னிடம் இதைத்தான் எதிர்பார்க்கலாம் என்று கூறும்போது, அவரிடம் வேறு எதிர்பார்க்க நமக்கு எது உரிமை? மலக்குழி என்று போர்டு போடப்பட்டுள்ள இடத்திலே நின்றுகொண்டு, மல்லிகை மணம் வீசக் கூடாதா என்று கூறுவதும் எதிர்பார்ப்பதும் மிகப் பெரிய தவறு, மதியீனம் அல்லவா!

காங்கிரசுக்கு சேவை செய்வதாக எண்ணிக்கொண்டு நம்மைக் கேலி செய்திடுவது இருக்கட்டும், நாட்டுக்காக மக்களுக்காக உண்மையை உரைத்திடத்தான் வேண்டும் என்ற நோக்கத்துடன் காங்கிரசாட்சியின் கோணல்கள் பற்றி. 'தேசிய' இதழ்கள் வெளியிட்டுள்ள கேலிச்சித்திரங்களைப் போட்டிருப்பதற்கு என்ன செய்வது என்று கேட்டுவிட்டு. அந்த கார்ட்டூன்களில் சிலவற்றை இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

— காஞ்சி

பொங்கல் மலர்

பேரறிஞர் அண்ணா பற்றிய
கேலிச்சித்திரங்களும் சித்திரத்தொகுப்புக்களும்

படம் - 1

- திருவிளக்கு
அண்ணா மலர் 1966

புகழ்பெற்ற கேலிச்சித்திரக்காரரான 'சங்கர்ஸ் வீக்லி' வாரஇதழின் ஆசிரியர் கே. சங்கர் பிள்ளை வரைந்த சித்திரம் இது. முன்னாள் அமைச்சர் க. இராசாராம் நடத்திய "திருவிளக்கு" இதழின் அண்ணா மலருக்காக சங்கர் பிள்ளை வரைந்து அனுப்பினார் என்பது குறிப்பிடத்தக்கது.

படம் - 2

- முரசொலி
14.4.1948

முரசொலியின் பதிமூன்றாவது இதழின் முகப்பு இது. முதல் பன்னிரெண்டு இதழ்களின் அட்டையில் சுயமரியாதை இயக்க வீரர்களின் படங்களை பாஸ்போர்ட் அளவில் எளிய முறையில் வெளியிட்ட முரசொலி, பதிமூன்றாவது இதழின் முகப்பை அண்ணாவின் சித்திரத்தோடு கவர்ச்சியாக வெளியிட்டது. "தளபதி" என்று, அன்று அழைக்கப்பட்ட அண்ணாவுக்கு அரசியலில் சிக்கலான நேரம் அது. பாயும் குதிரையின் மேலேறி திராவிடர் கழகக் கொடி பறக்கும் கோட்டையை விட்டுப் போருக்குப் புறப்படும் தானைத்தலைவராக அண்ணா இப்படத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளார். பதிமூன்றாவது இதழுக்குப் பின்னர் வெளிவந்த மூன்று இதழ்கள் இதே படத்தைத் தாங்கி வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. இந்தச் சித்திரத்தை வரைந்தவர் எஸ். வீரையா.

படம் -3

- முரசொலி
பொங்கல் மலர் 1955

"திராவிட சோசலிச குடியரசு" உறுதியாக அமையுமென ஆத்மார்த்மாக நம்பிய காலமது; திராவிடநாடு விடுதலை அடைந்த நாள் அன்று, இந்திய பிரதமர் நேரு வாழ்த்துவார் என்றும், குண்டாந்தடியால் அடிபடும் தி.மு.கழகத்தினர் திராவிடநாட்டுக்கொடியேற்றி மரியாதை பெறுவர் என்றும், விகடனும் கல்கியும் பிரிவினை மலர்களை வெளியிடும் என்றும் நம்பினர்; அதிலும் உச்சமாக "திராவிடநாடு கற்பனையே" என்று விமர்சனம் செய்த ப.ஜீவானந்தம் அவர்கள் பின்னாளில் திராவிடநாட்டின் தூதராக மாஸ்கோவில் பணியாற்றுவது போன்ற சித்திரம், கலைந்துபோன கனவொன்றின் பதிவு.


திராவிட
நாடெல்லாம்
வெறும் கற்பனை
திராவிட நாட்டு
தூதுவராலயம்
..மாஸ்கோ..
..ஜீவா..
கம்பர்
..விழா....
ஆல் இந்தியா ரேடியோ...
இப்போது கம்பர் விழா
நிகழ்ச்சிகள்
ஒலிபரப்பப்படும்.
குறள் நெறி
...விழா...
...இப்போது
குறள் நெறி விழா
நிகழ்ச்சிகள்
ஒலிபரப்பப்படும்
மக்கள் துரோகிகள்...
செய்து
இப்படித்தான் நடக்கும்...

படம் -4

- முரசொலி
13.7.1956

முரசொலியில் இடம்பெறும் கேலிச்சித்திரங்களுக்குப் பெரும்பாலும் சித்திரவிளக்கம் தரப்படுவதில்லை. விதிவிலக்காக இப்படத்திற்கு மட்டும் கீழ்க்கண்ட விளக்கம் தரப்பட்டுள்ளது. "தி.மு.கழகம் தேர்தலில் ஈடுபடுவதாக திருச்சி மாநில மாநாட்டில் தீர்மானித்ததும் -மூடிக்கிடந்த காமராசரின் திருவாய் திறந்து கொண்டது. 'தேர்தலில் நிற்பதற்கு பலமில்லை. அதனால்தான் பெரியார் கெட்டிக்காரத்தனமாக தேர்தல் விவகாரங்களிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். அவர் போக்கு எனக்கு நிரம்பப் பிடிக்கிறது. அவர் வாழ்க! தி.மு. கழகம் ஒழிக! திராவிடநாடு கேட்பது முட்டாள்தனம். "யூனியனிலிருந்து பிரிவது பைத்தியக்காரத்தனம்' என்பன போன்ற கருத்துரைகளை அவர் அனுதினமும் அள்ளிக்கொட்டி வருகின்றார்.

நம்மிடத்திலே பலமில்லையாம் நாடாளும் அமைச்சர் கணக்குப் போட்டுக் கூறுகின்றார் அனுதாப உணர்ச்சியோடு! முதலாளிகளின் துணையையும், முன்னோரின் தியாகங்களையும் பலமாகக் கொண்டு தன்னம்பிக்கையற்றுத் தடுமாறும் காமராசர் நம்மைப் பலமற்றவர்கள் என மொழிவது, முடவன் -முறுக்கேறிய உடற்கட்டுடைய வாலிபனைப் பழித்தது போலத்தானிருக்கிறது! நமது பெரியாரோ நம்மிடம் பணமில்லையென்கிறார் தேர்தலில் நிற்பதற்கு! விட்டு வந்த ஐந்து லட்சத்தை கேட்கவா போகிறோம் - அதனால் அந்த தேவையில்லை அவருக்கு! பலமில்லை-பணமில்லை- ஒத்துக் கொள்கின்றோம் வாதத்திற்காக! அதே சமயம் இலட்சியத்தை நிறைவேற்றிட எடுத்திடும் முயற்சிகளில் ஒன்றாம் தேர்தலில் ஈடுபடுவதற்கு எம் உள்ளத்தில் எள்ளத்தனையும் பயமில்லை யென்பதை அறிவித்து விட்டோம். அதைத்தான் இந்தச் சித்திரம் விளக்குகின்றது".

படம் -5

முரசொலி
21.9.1956

திராவிடர் கழகத்திலிருந்து விலகி தனி இயக்கம் கண்டபோதும், தலைவர் பதவியை காலியாக வைத்து பொதுச்செயலாளராகவே இருந்தார் அண்ணா; அப்பதவி என்றுமே அய்யாவுக்கே உரியது என்றார். தி.மு.கழகத்தின் மீது கடும் தாக்குதல்களைப் பெரியார் முன்வைத்தபோது, அண்ணாவும் அவருடைய தம்பியரும் அவரைப் பெரிய அளவில் விமர்சித்ததில்லை. ஏனையோர் பல்வேறு பொருட்களைப் பிறந்தநாள் பரிசாக அளிக்க, அண்ணா திராவிடநாடு விடுதலை சாசனத்தைப் பரிசளிக்கின்றார். 1957 முதல் 1967 வரை பெரியார் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக இருந்தாலும், 1967இல் தி.மு.க. வெற்றிபெற்ற பின், அண்ணா, கலைஞர், நெடுஞ்செழியனோடு ஆளுநரைச் சந்தித்து ஆட்சி உரிமையைக் கோரிய கையோடு எவருக்கும் கூறாமல் திருச்சி சென்று பெரியாரின் வாழ்த்தைப் பெற்றார் என்பது வரலாறு. அப்போது “ஒரு மணமகளைப் போன்று நாணமுற்றேன்” என்றார் பெரியார்.

படம் - 6

இந்த "சக்தி" நமக்கு உண்டு

- முரசொலி
15.2.1957

1957ஆம் ஆண்டு, மார்ச் மாதம் சென்னை சட்டமன்றத்திற்கும் நாடாளு மன்றத்திற்கும் பொதுத்தேர்தல் நடந்தது. 124 சட்டமன்றத் தொகுதிகளிலும், 11 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க. போட்டியிட்டது. அண்ணா, காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டார். அன்றைய முதல்வர் காமராசருடன் இணைந்து பெரியார், அண்ணாவைத் தோற்கடிக்க முழுமூச்சாக உழைத்தார். இறுதியில் அண்ணா காஞ்சிபுரத்தில் வென்றார். 15 சட்டமன்றத் தொகுதிகளையும் 2 நாடாளுமன்றத் தொகுதிகளையும் தி.மு.க. கைப்பற்றியது. தேர்தல் நடைபெறுவதற்கு முன்பே பெரியாரின் எதிர்ப்பு அண்ணாவுக்கு வெற்றியைத் தரும் என்று கூறுகின்றது முரசொலி.

படம் -7

தாண்டிவிட்டோம்

- முரசொலி
22.3.1957

1957 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் பணபலமிக்க திராவிடர் கழகமும், காங்கிரசும் தி.மு.க.வுக்கு எதிராக இணைந்து பிரச்சாரம் செய்தாலும், தி.மு.க. குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றது.

படம் -8

\- முரசொலி
10.5.1957

ஜின்னாவின் பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை காங்கிரஸ் எதிர்த்தது அன்று ; ஆனால், இன்றோ பாகிஸ்தான் மலர்ந்து அதன் தந்தையாகி விட்டார் ஜின்னா. அதுபோன்று திராவிடநாட்டுப் பிரிவினையைக் காங்கிரஸ் எதிர்க்கின்றது இன்று; நாளை திராவிடநாடு பிரிந்து அதன் தந்தையாக அறிஞர் அண்ணா விளங்குவார் என்னும் கனவை விளக்கும் சித்திரம் இது.

படம் -9

பூச்சாண்டி காட்டுகிறார்கள்

- முரசொலி
2.8.1957

"சமீபத்தில் திரு ராஜாராம் (நாயுடு) தி.மு.கழகத்தைக் காரசாரமாக தாக்கிப் பேசினார்" என்னும் சித்திரவிளக்கம் சிதைந்தநிலையில் படத்தின் கீழ் காணப்படுகின்றது. நாத்திகர்கள், தீரா...விடர், சிறுவர்கள், அரசியல் தெரியாதவர்கள், வகுப்புவாதிகள், சினிமாகாரர்கள் என்றெல்லாம் தி.மு.கழகத்தினரை அந்நாளைய காங்கிரசார் விமர்சிப்பது வாடிக்கை.

படம்-10

- முரசொலி
14.2.1958

இந்திய விடுதலைப் போராட்டத்தின் போது காந்தி, நேரு, பகத்சிங், ஆகியோரை வெள்ளையர்கள் துரோகிகள் என்றனர். இந்தியா விடுதலை அடைந்தவுடன் துரோகிகளாக சித்தரிக்கப்பட்டவர்கள் தியாகிகளாக மாறிவிட்டனர். இதுபோன்று, காங்கிரசார் அண்ணாவை இன்று தேசதுரோகியாக சித்தரிக்கின்றனர்; நாளை "திராவிடநாடு" கிடைத்து விட்டால் அண்ணா தேசப்பிதாவாக மாறிவிடுவார் என்று கூறுகின்றது முரசொலி.

படம்-11



“ நாங்கள் சினிமாவுக்கு வசனம் எழுதுவது வீணகப் போகாது !” என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைவர் மு. கருணாநிதி கூறினர்.

—என்பதாகக் கீழே எழுதி மேலேகண்ட கேலிச் சித்திரத்தையும் “தினத்தந்தி” என்ற ஏடு வெளியிட்டிருக்கிறது. சித்திரத்தில் ஒரு உருவத்தில்தான் பெயர் எழுதியிருந்தது. பின்னல் நிற்கும் உருவத்திற்குப் பெயர் எழுத சித்திரக்காரர்' மறந்து விட்டார். அதை நாம் பூர்த்தி-செய்திருக்கிறோம்; அவ்வளவுதான்! திருத்தத்திற்கு அந்த ஏடு நன்றி

- முரசொலி
14.8.1959

தினத்தந்தி நாளிதழில் வெளியான கருத்துப்படத்தைத் திருத்தி மீள்பதிப்பு செய்துள்ளது முரசொலி. தினத்தந்தி அதிபரான சி.பா. ஆதித்தனார் “நாம் தமிழர் இயக்கம்” என்னும் இயக்கத்தை நடத்தி வந்தார். இவ்வியக்கம் தி.மு.கழகத்தினரைக் கடுமையாக விமர்சித்த இயக்கமாகும். 1967இல் தி.மு.க. ஆட்சியைப் பிடித்த பின்பு சி.பா. ஆதித்தனார் அண்ணாவின் அமைச்சரவையில் அமைச்சர் ஆனார். நாம் தமிழர் இயக்கமும் தி.மு.கவோடு ஒன்றிவிட்டது.

படம்-12

- முரசொலி
21.8.1959

படம்-13



- மாலைமணி
20.9.1959

அண்ணாவுக்கு நாடாளத் தெரியாது என்று அக்கால காங்கிரசார் மேடைகளில் முழங்கினர். 1959 ஆம் ஆண்டு அரசாங்க கணக்குத் தணிக்கை அறிக்கையை மேற்கோள்காட்டி காங்கிரஸ் அரசின் நிர்வாகத் திறனைக் கிண்டலடிக்கிறது மாலை மணி.

படம்-14

-மாலைமணி
15.11.1959

"வடநாட்டினரின் அதிகாரமென்னும் விஷப்பற்களைப் பிடுங்க எல்லா கட்சியினருக்கும் அறிஞர் அண்ணா அழைப்பு விடுத்திருக்கிறார். ஆச்சாரியாரும் வடநாட்டினரை தீவிரமாக எதிர்த்து வருவது தெரிந்ததே"!. என்னும் சித்திரவிளக்கம் படத்தின் கீழ் இடம் பெற்றுள்ளது. காங்கிரசை தி.மு.க.வும், சுதந்திரா கட்சியும் இணைந்து எதிர்த்து வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

படம்-15

தமிழர்களும், தெலுங்கர்களும் சகோதரர்கள்போல் வாழவேண்டும்! " என்று
தெனாலியில் (ஆந்திரா) கனம் காமராசர் பேசினார்.

- முரசொலி
25.12.1959

படம்-16

'காளை' வீழ்ந்ததென்று கனவு கண்டேன்



"ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தால் அடுத்த தேர்தலில் காங்கிரசை ஒரு கை பார்க்க முடியுமென்று அறிஞர் அண்ணா கூறினார். 1962இல் காங்கிரஸ் காளை வீழ்ந்ததென்று......" (சித்திரவிளக்கம் சிதைந்துள்ளது). என்னும் சித்திரவிளக்கம் படத்தின் கீழ் காணப்படுகின்றது.

1957ஆம் ஆண்டு இரண்டு நாடாளுமன்றத் தொகுதிகளையும் பதினைந்து சட்டமன்றத் தொகுதிகளையும் வென்ற தி.மு.க.1959இல் நடந்த சென்னை மாநகராட்சி தேர்தலில் தொன்னூற்றைந்து இடங்களில் போட்டியிட்டு நாற்பத்தைந்து இடங்களில் வென்றது. நூறு இடங்களில் போட்டியிட்ட காங்கிரஸ் முப்பத்தேழு இடங்களை மட்டுமே கைப்பற்றியது. தி.மு.க.வைச் சார்ந்த அ.பொ.அரசு சென்னை மேயரானார். இந்த வெற்றி அண்ணாவே எதிர்பாராதது. 1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஐந்து இலட்ச ரூபாய் நிதி இருந்தால் காங்கிரசை வென்று விடலாம் என்ற நம்பிக்கையில் இருந்தார் அண்ணா. அண்ணாவின் கணிப்பு 1967இல் பலித்தது.

படம்-17

- தென்றல்
15.10.1960

"1962 ஆம் ஆண்டு வரப்போகிற தேர்தலுக்கு இப்போதே கட்சிகள் ஆயத்தம் ஆகின்றன. பெரும்பாலான எதிர்க்கட்சிகள் தி.மு.கவின் தலைமையை நாடுகின்றன" என்னும் சித்திரவிளக்கம் படத்தின் கீழ் காணப்படுகின்றது. காங்கிரஸ் கட்சியின் அணியில் நேருவும் பணமூட்டைகளும் இருப்பதாகவும், அண்ணாவின் அணியில் இராஜாஜி, பின்தங்கிய வகுப்பினர்கள், சோசலிஸ்டுகள் இருப்பதாகக் காட்டப்பட்டுள்ளது. 1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்டுகள் தி.மு.க. கூட்டணியில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படம் -18



- இனமுழக்கம்
பொங்கல் மலர் 1960

மக்களிடம் காங்கிரசின் செல்வாக்கு சரிந்ததை விளக்கும் சித்திரம் இது.

படம் - 19

- தி.மெயில்
2.1.1961

1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தி.மு.க., சுதந்திரா, கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் இணைந்து கூட்டணி அமைப்பதற்கான சூழல் நிலவியது. அவ்வாறு அக்கட்சிகள் கூட்டணி அமைத்தால் அது பொருந்தாத கூட்டணியாக இருக்கும் என்று மெயில் வெளியிட்ட கேலிச்சித்திரம்.

படம் -20



- தி மெயில்
23.1.1961

காங்கிரசை வீழ்த்துவதே தி.மு.க.வுக்கும் சுதந்திரா கட்சிக்கும் பொதுநோக்கம் என்றார் இராஜாஜி. 1962 பொதுத்தேர்தலுக்கு ஆயத்தமாகாமல் வலிமையின்றி இருக்கும் தி.மு.க.வை இராஜாஜி பின்னிருந்து இயக்குகின்றார். வலிமையான காங்கிரசுடன் தி.மு.க. போட்டியிட்டால் தி.மு.க. உறுதியாக தோற்றுவிடும் என்கின்றது மெயில்.

படம் -21



UNDER THE SPREADING BANYAN TREE

- தி மெயில்
15.2.1961

காங்கிரஸ் என்னும் வலிமைமிக்க கட்சியை தி.மு.க., சுதந்திரா, கம்யூனிஸ்ட் ஆகிய கட்சியினர் 1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வீழ்த்த முயலுகின்றார்களாம், ஆனால், பெரியார் காங்கிரஸ் கட்சி வீழாதவாறு தாங்கிப் பிடிகின்றாராம்.

படம்-22



- சுதேசமித்திரன்
20.3.1961

தி.மு.க. திராவிடநாடு பிரிவினைக் கொள்கையைக் கொண்டிருப்பதால் 1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகள் தி.மு.க. கூட்டணியில் இடம் பெறவில்லை.

படம்-23

தி.மு.க. படகு



- நவசக்தி
10.8.1961

தி.மு.கழகத்தில் பணம், பதவிகளுக்காக உட்கட்சி மோதல்கள் நடப்பதாகவும், அதனால் தி.மு.க. என்னும் படகு கவிழ்ந்து அதில் பயணம் செய்தவர்கள் அழியப் போவதாகவும் ஆருடம் கூறுகின்றது நவசக்தி. ஆனால், வரலாறு நவசக்தியின் ஆருடத்தைப் பொய்யாக்கி விட்டது.

படம் -24

அண்ணாத்துரை அரசியல் துறவு

- நவசக்தி
11.8.1961

தி.மு.கழகத்திலிருந்து சம்பத் விலகியதால் அண்ணா அரசியல் துறவறம் மேற்கொள்ளப் போவதாகவும் அப்போது கழகப்பொருளாளராக இருந்த கலைஞர் மு. கருணாநிதி அதைத் தடுக்க முயலுவதாகவும் கூறுகின்றது நவசக்தி.

படம்-25

பொருத்தமில்லாத கூட்டு

- நவசக்தி
12.8.1961

1962 பொதுத்தேர்தலுக்கு முன் தி.மு.கழகமும், சுதந்திரா கட்சியும் கூட்டணி அமைக்க முயற்சி செய்துவந்த சூழலில், அக்கூட்டணியை அமையவிடாது தடுக்க நவசக்தி வரைந்த குசும்பு சித்திரம் இது.

படம் -26

- தி மெயில்
1.19.1961

சீக்கியர் உரிமைக்காக உண்ணாநிலைப் போராட்டம் நடத்திய மாஸ்டர் தாராசிங் சீக்கியருக்காக பிரிட்டன் ஐ.நா. மன்றத்தில் பேசவேண்டும் என்னும் நிபந்தனையுடன் போராட்டத்தை விலக்கிக் கொண்டார். உண்ணாநிலைப் போராட்டங்கள் இதுபோன்ற சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றால் அண்ணா, சுதந்திர திராவிடநாடு கேட்டும் இராஜாஜி, காமராஜர் இல்லாத சென்னை மாகாணம் கேட்டும் உண்ணாநிலைப் போராட்டங்களை நடத்துவார்கள்; பலரும் இதுபோன்ற போராட்டங்களில் இறங்கி விடுவார்கள் என்கின்றது மெயில்.

படம்-27

நகராத வண்டியில் ஆச்சாரியார் பவனி



- நவசக்தி
9.9.1961

வடநாட்டு பணக்காரர்கள் ஆதரவில் இயங்கும் சுதந்திரா கட்சியும் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்கும் தி.மு.க.வும் கொள்கை முரண்பாட்டுடன் கூட்டணி வைக்கின்றன. பதவி மோகத்தின் அடிப்படையில் வைக்கப்படும் இக்கூட்டணி எவ்வாறு வெற்றிபெறும் என்று கேட்கின்றது நவசக்தி. 1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியை தி.மு.க. பெற்றது என்பது வரலாறு.

படம்-28

தி.மு.க. பொம்மை குதிரை

- நவசக்தி
17.9.1961

ஈ.வே.கி.சம்பத் தி.மு.க.வை விட்டு விலகிவிட்டதால் அதன் பலம் குறைந்து விட்டது; அண்ணாவின் பொம்மை குதிரை, காமராசர் ஏறியுள்ள வலுமிக்க நிஜக்குதிரையை கனவில்கூட வெல்லமுடியாது என்று கூறுகின்றது நவசக்தி.

படம்-29

கனவுக்கன்னி

- நவசக்தி
25.9.1961

நவசக்தி நாளிதழின் கேலிச்சித்திர ஓவியர் இதயனின் கேலிச்சித்திரங்கள், அன்றைய காங்கிரசார் தி.மு.கழகத்தினர் மீது சுமற்றிவந்த இழிசொற்களின் வெளிப்பாடு. திராவிடநாட்டைக் கனவுக்கன்னியாகவும், சொப்பன அவஸ்தையில் தவிப்பராக அண்ணாவையும் நவசக்தி இங்கு சித்தரிக்கின்றது. இந்தக் காலக்கட்டத்தில் வரையப்பட்ட இதயனின் கேலிச்சித்திரங்கள் அனைத்தும் அண்ணாவை அவதூறு செய்பவையாக மட்டுமே உள்ளன. அரசியல் நாகரிகத்தின் அடையாளம் எனப்பட்ட காமராசரின் ஆசியோடு, பண்பாளர் டி.எஸ். சொக்கலிங்கம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட நவசக்தியின் நாகரிகம் இது.

படம் -30

பிச்சையெடுக்குமாம் பெருமாள்,
அதைப் பிடுங்குமாம் அனுமார்!

- நவசக்தி
22.10.1961

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட தி.மு.கழகத்திடம் நிதி கிடையாது; ஆனால், அவர்களுக்கு வடநாட்டு முதலாளிகளிடம் உதவிபெறும் சுதந்திரா கட்சி உதவி செய்யும் என்று கூறுகின்றது நவசக்தி.

படம் -31



- தி மெயில்
28.10.1961

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. காமராஜருக்கு எதிராக ஒரு பெண் தேர்தலில் போட்டியிடலாம் என ஊகித்துக் கூறுகின்றது மெயில். தி.மு.கழகத்தைப் பொறுத்தவரை அதன் சுயத்தில் சிறுத்த மமதைக்கும் விஸ்வரூபமான மனச்சாட்சிக்கும் போர் நடப்பதாகக் குறிக்கின்றது.

படம் -32

மிரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய்!

- நவசக்தி
31.10.1961

படம் -33

ஆச்சாரியர் ஆட்சிக்கு வந்தால்?

- நவசக்தி
4.11.1961

1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தி.மு.க., சுதந்திரா கூட்டணி வெற்றி பெற்றால் ஆட்சி நிர்வாகம் நடக்காது கூத்தடிப்புதான் நடக்கும் என்று கூறுகின்றது நவசக்தி. வசனவியாபாரிகள், கூத்தாடிகள் என்று அக்காலத்தில் கிண்டலடிக்கப்பட்ட தி.மு.க.வினர் இராஜாஜியையும் கூத்தாடியாக்கி விடுவார்களாம். அரசியல் களத்தில் அமைப்புரீதியான பலமே இல்லாத ஆச்சாரியாரின் சுதந்திரா கட்சி தொடர்ந்து முன்னிலைப்படுத்தப்படுவது கவனத்திற்குரியது. 1962, 1967 தேர்தல்களில் தி.மு.க.வின் ஆதரவில்தான் சுதந்திரா கட்சி ஒன்றிரண்டு இடங்களை வென்றது குறிப்பிடத்தக்கது. தங்கள் ஆட்சி போனாலும் ஆச்சாரியரின் ஆட்சிதான் நடக்க வேண்டும் என்னும் 'அவாள்' ஆசையின் வெளிப்பாடு இது.

படம் -34

அன்று

- மாலைமணி
5.11.1961

காங்கிரஸ் அரசின் அடக்குமுறைகளை எதிர்த்துப் போராடிய மாலைமணி நான்காம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை ஒட்டி வெளியிடப்பெற்ற சித்திரம் இது. "நேற்று லார்டு லின்லித்கோ உங்களை அடக்க உத்தரவிட்டான். இன்று நேரு எங்களை ஒடுக்க உத்தரவிடுகின்றார். இன்று அவனுடைய ஆட்சி இங்கில்லை; நாளை இவர்களுடைய ஆட்சி இங்கிருக்குமா?" என்று இந்தச் சித்திரம் வெளிவந்த மாலைமணி இதழின் கட்டுரையொன்று கேட்கின்றது.

படம் -34

இன்று

- மாலைமணி
5.11.1961

படம் - 35

வரும் பொதுத்தேர்தல்

- நவசக்தி
11.11.1961

திருவோடு ஏந்தி அண்ணாவும் இராஜாஜியும் ஓட்டுகேட்டுக் பிச்சை எடுத்தாலும் மக்கள் கோபுரமாக உயர்ந்துள்ள காங்கிரசுக்குத்தான் வாக்களிப்பார்கள் என்கின்றது நவசக்தி.

படம் -36

அண்ணாச்சாரியார் தேர்தல் முஸ்தீபு



- நவசக்தி
13.11.1961

சுதந்திரா கட்சியின் தலைவர் இராஜாஜி, அண்ணாவுக்கு எவ்வளவுதான் ஊக்கமளித்தாலும், வலுமிக்க காங்கிரசுடன் வலுவற்ற தி.மு.க. எவ்வாறு போட்டியிட்டு வெற்றிபெற முடியும் என்கின்றது நவசக்தி. 1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன் வரையப்பட்ட கேலிச்சித்திரம் இது. 1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தி.மு.க. குறிப்பிடத்தக்க வெற்றிபெற்றது என்பது வரலாறு.

படம் -37

கோட்டைக்கா? கோடம்பாக்கத்துக்கா?

- நவசக்தி
15.11.1961

படம் - 38

நவசக்தி
20.11.1961

தி.மு.கழகத்திலிருந்து விட்டு சம்பத் விலகிய நேரத்தில் வரையப்பட்ட கேலிச்சித்திரம் இது. காங்கிரஸ் கட்சியினர் அண்ணாவை எப்போதும் பெண்பித்தராகவே பிரச்சாரம் செய்து வந்தனர். அறையில் மாட்டப்பட்டுள்ள பெண் படத்தையும், தலையணையில் வரையப்பட்டுள்ள பெண் ஓவியத்தையும் காண்க. இந்தளவு தரங்குறைந்த பிரச்சாரத்தை காங்கிரஸ் தலைவர்கள் மீது தி.மு.க.வினர் எப்போதும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படம்-39

ஆச்சாரியர், தி.மு.க., கம்யூனிஸ்ட்



- நவசக்தி
24.11.1961

1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன்னிருந்த கூட்டணி சூழல் பற்றிய கேலிச்சித்திரம்.

படம் -40

பூனைக்கு மணி கட்டுவது யார்?

- மாலைமணி
26.11.1961

"அண்ணாதுரையைத் தோற்கடிப்போம் என்று கோட்டைப் பதுமைகள் முழங்கி வருகின்றன" என்னும் சித்திர விளக்கம் படத்தின் கீழ் சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. 1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் அண்ணா காஞ்சிபுரம் சட்டசபை தொகுதியில் நின்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட காங்கிரசின் சார்பாக எவரும் முன் வரவில்லை. இக்கருத்தை விளக்குகின்றது இந்தக் கேலிச்சித்திரம். இறுதியாக பேருந்து முதலாளி நடேசன் என்பவர் அண்ணாவை எதிர்த்துப் போட்டியிடுகின்றார். அண்ணா நிச்சயம் வென்று விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் தோல்வியடைந்து விடுகின்றார்.

படம் - 41

பின்னாலிருந்து ஊக்கம்

சுதேசமித்திரன்
30.11.1961

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு அரசியல் கட்சிகள் ஆயத்தமாகி வருகின்றது. சுதந்திரா கட்சி, தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துள்ளது. காங்கிரஸ் கட்சிக்கும் பெரியார் ஆதரவு தருகின்றார். திராவிட இயக்கத்தின் தலைவர்களைத் தூண்டிவிட்டு இருவரும் மோதிக்கொள்ள காமராசரும், இராஜாஜியும் ஊக்கம் அளிக்கின்றனர். பெரியார் வலுமிக்கவராகுவம், அவருக்குப் பயந்து கொண்டு நிற்பவராக அண்ணாவும் சித்தரிக்கப்பட்டுள்ளார். காங்கிரஸ் ஆதரவு என்பது சுதேசமித்திரனின் அரசியல் நிலைப்பாடு.

படம் - 42



"நான் நினைத்தால் ரயில் ஓடாது. தந்திக்கம்பி இருக்காது" என்று தி. மு. க. மூலவர் திரு. அண்ணாதுரை சமீபத்தில் ஒரு கூட்டத்தில் கூறினார்.

நவசக்தி
7.12.1961

படம் -43

நவசக்தி
11.12.1961

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தி.மு.க., சுதந்திராகட்சி கூட்டணி வெற்றி பெற்றால் சட்டசபையை தி.மு.கழகத்தினர் பொழுதுபோக்கு அரங்காக மாற்றி விடுவர் என்று கூறுகின்றது நவசக்தி. தி.மு.கழகம் மக்கள் செல்வாக்கைப் பெற்று வலுப்பெற்றுவரும் காலம் இது. ஆனால், தி.மு.கழகத்தை அங்கீகரிக்க மனம் வராத நவசக்தி, மக்கள் செல்வாக்கோ, அமைப்பு பலமோ இல்லாத இராஜாஜியை முன்னிலைப்படுத்துவது உற்றுநோக்கத் தக்கது.

படம் -44

- நவசக்தி
14.12.1961

திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டுவிட்டு தேர்தல் அரசியலில் தீவிரம் காட்டிய தி.மு.கழகத்தினரைக் கிண்டலடிக்கிறது நவசக்தியின் கேலிச்சித்திரம். "இதயன்" வரைந்த கேலிச்சித்திரங்களிலே உச்சபட்ச விரசமானது இந்தச் சித்திரம். அண்ணாவின் இடையில் சொருகப்பட்டிருக்கும் பெண்களின் படங்கள் இதற்குச் சான்று. இச்சமயத்தில் நவசக்தியின் ஆசிரியராக இருந்தவர் டி.எஸ். சொக்கலிங்கம்; தினமணி, நவசக்தி முதலிய இதழ்களில் பணியாற்றி, பண்பாளர் என அடையாளப்படுத்தப்பட்ட "நனிநாகரீகர்" திருவாளர் டி.எஸ். சொக்கலிங்கத்தின் ஆழ்ந்த அரசியல் சிந்தனையின் வெளிப்பாடு என்று, இந்தக் கேலிச்சித்திரத்தைக் கருதலாம். இதே தரத்தில் அமைந்த எதிர்நிலைக் கேலிச்சித்திரங்களை தி.மு.க. ஏடுகளில் காணமுடியவில்லை என்பது பதிவுபெற வேண்டிய ஒன்று.

படம்-45



கிழக்கே கடல் அலைமோதுகிறது. மேற்கே மலைவாயில் தி. மு. க. சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருப்பதை மறந்து ஆச்சாரியார் காலை நேர சந்தியா வந்தனத்தை மாலையில் ஜபித்துக்கொண்டிருக்கிறார்.

- நவசக்தி
16.12.1961

1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. சுதந்திரா கட்சியின் இராஜாஜி, அலைகடல் போன்று வலுமிக்க காங்கிரஸ் கட்சிக்கு எதிராக, பலமிழந்த தி.மு.கவுடன் கூட்டணி வைப்பதாகக் கூறுகின்றது நவசக்தி.

படம் -46

நுறைக் குமிழிகள்



- சுதேசமித்திரன்
20.12.1961

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை நுரைக்குமிழிகள் எனக் கிண்டலடிக்கின்றது சுதேசமித்திரன்.

படம்-47



- நவசக்தி
26.12.1961

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தந்தைப் பெரியாரும், தமிழ்த்தேசிய கட்சியின் தலைவர் சம்பத்தும் காங்கிரசுக்கு ஆதரவாக இருந்தனர். சம்பத், தி.மு.கவிலிருந்து விலகிவிட்டதால் தி.மு.க. பலமிழந்து மருத்துவமனையில் இருப்பதாகச் சித்திரம் வரைந்துள்ளது நவசக்தி. அண்ணா பெண்கள் படங்களை விரித்துப் படுத்திருப்பதாகவும், இராஜாஜி பணக்கட்டுகளின் மீதும் படுத்திருப்பதாகவும் வரைந்து, தன் பண்பாட்டைக் காட்டுகின்றது நவசக்தி.

படம் - 48

- நவசக்தி
28.12.1961

படம் - 49

தி.மு.க.—கம்யூனிஸ்ட் கட்சி தேர்தல் உடன்பாடு பேச்சு முறிந்தது. ஆனல், சு. கட்சியும் பார்வர்டு பிளாக் கட்சியும் தி.மு.க.வுடன் உறவு கொள்ள முயற்சிக்கின்றன. கம்யூனிஸ்ட் கட்சியின் பிரிவினல் தி.மு.க.வுக்கு பெரும் வருத்தம்.

- நவசக்தி
30.12.1961

1962ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கான கூட்டணி முயற்சிகள் பற்றிய சித்திரம் இது. இத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி, தி.மு.க கூட்டணியில் இடம் பெறவில்லை.

படம் -50

- மாலைமணி
21.1.1962

9.4.1961 அன்று தி.மு.கழகத்திலிருந்து சம்பத் விலகினார். பின்பு“குட்டி காங்கிரஸ்” என்று அழைக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கட்சியைத் தொடங்கி, தி.மு.க. எதிர்ப்பில் தீவிரமாக ஈடுபட்டார். “சிங்கத்தின் குகைக்குள்ளேயே சென்று அதனை அடக்குவேன்” என்று முழங்கிய சம்பத், 1962 பொதுத்தேர்தலில் பரிதாபமாகத் தோல்வியுற்றார். அவரது கட்சியினரும் தோல்வியடைந்தனர். பின்னர் காங்கிரசில் சம்பத் ஐக்கியமானார்.

படம் - 51

1961 திசம்பர் 16,17 ஆகிய நாள்களில், கோவையில் நடந்த தி.மு.க. தேர்தல் மாநாட்டில் அண்ணா உரையாற்றும் போது, "காட்ட வேண்டியதைக் காட்டுங்கள் பெற வேண்டியதைப் பெறுங்கள்" என்றார். அண்ணாவின் இத்தொடர் ஆபாசமானது என்று காங்கிரஸ் கட்சியினரும் திராவிடர் கழகத்தினரும் குற்றம்சாட்டினர். அச்சமயம் நடந்த திராவிடர் கழக மாநாட்டில் "ஒரு பெண் ஆடை அவிழ்ந்த நிலையில் நடனமாடுவது போலவும், அண்ணா, அதைச் சுட்டிக்காட்டுவது போலவும் பெரிதாகச் சித்திரம் வரைந்து வண்டியில் வைத்து ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இந்நிலையில் அண்ணா அந்தச் சொற்றொடரை எப்பொருளில் பயன்படுத்தினார் என்பதற்கு மாலைமணி சித்திரம் வரைந்து விளக்கம் தருகின்றது.

- மாலைமணி
28.1.1962

படம்-52



- மாலைமணி
11.2.1962

படம்- 53

வெயில் கொடுமையில் சித்தப்பிரமை



- சுதேசமித்திரன்
10.4.1962

ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட கேலிச்சித்திரம் இது. கடும்வெயிலில் அரசியல்வாதிகளுக்குச் சித்தபிரமை ஏற்பட்டு, இவ்வாறெல்லாம் நடந்தால் எவ்வாறு இருக்கும் என்று சுதேசமித்திரன் கற்பனை செய்துள்ளது.

படம் - 54

அண்ணாதுரையை கவர்ந்துள்ள பிரச்சனைகள்

- சுதேசமித்திரன்
21.4.1962

படம் - 55

- சுதேசமித்திரன்
3.5.1962

"திரு. அண்ணாத்துரை டில்லியில் சலசலப்பை உண்டு பண்ணி விட்டார்" என்னும் சித்திரவிளக்கம் படத்தின் கீழ் காணப்படுகின்றது. 1962 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியில் தோல்வியுற்ற அண்ணா, நாடாளுமன்றத்தின் மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாடாளுமன்றத்தில் அண்ணாவின் திராவிடநாடு கோரிக்கை ஒலிக்கத் தொடங்கியதைச் சித்தரிக்கும் சுதேசமித்திரனின் கேலிச்சித்திரம் இது.

படம் - 56

- சுதேசமித்திரன்
8.5.1962

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தி.மு.க. குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றிருந்தது. காமராசர் கடுமையாக தி.மு.க.வை எதிர்க்கத் தொடங்கினார். ஆனால், தி.மு.க.வின் கொள்கைகளுக்குத் தந்தையான பெரியாருடன் இணக்கமாக இருந்தார் பெரியாரும் தொடர்ந்து காங்கிரசுக்கு ஆதரவு அளித்து வந்தார் இந்த முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுகின்றது சுதேசமித்திரன்.

படம் - 57

- சுதேசமித்திரன்
24.5.1962

"இதென்னய்யா, சங்கடம், ஏன் என்னைப் பின் தொடருகிறீர்"? என்னும் சித்திரவிளக்கம் படத்தின் கீழ் காணப்படுகின்றது. வலிமையற்ற அண்ணா, அதிகாரபலமும் வலிமையும்மிக்க காமராசரிடம் இவ்வாறு கேட்கின்றாராம். 1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்ற, தி.மு.க.வின் வெற்றியைப் பொறுக்க முடியாமல், கீழே விழுந்தாலும் காங்கிரசின் மீசையில் மண் ஒட்டவில்லை என்கின்றது சுதேசமித்திரன்.

படம் - 58

கவனத்தில் இருக்கிறது

- சுதேசமித்திரன்
14.6.1962

பிரிவினைப் பிரச்சாரம் செய்வதைத் தடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்கும் அரசியல் அமைப்பின் பதினாராவது திருத்தச் சட்டம் வரப்போவதைக் கூறும் கேலிச்சித்திரம். திராவிடநாடு கோரும் தி.மு.கழகத்தை ஒடுக்க காங்கிரஸ் கட்சிக்கு அதிகாரம் கிடைத்துவிட்டதாகக் கூறுகின்றது சுதேசமித்திரன்.

படம்-59

- சுதேசமித்திரன்
20.6.1962

“திராவிடத்தைச் சார்ந்தது போன்ற வில்லு எகிப்தில் கண்டு எடுக்கப்பட்டனவென செய்தி கிடைத்திருக்கிறது. இதன் பயனாக எகிப்து திராவிடஸ்தானத்தைச் சேர்ந்தது என திரு. அண்ணாத்துரை கூறியுள்ளார்” என்னும் சித்திரவிளக்கம் படத்தின் கீழ் காணப்படுகின்றது. தி.மு.க.வின் திராவிடநாடு கோரிக்கையைக் கிண்டலடிக்கின்றது சுதேசமித்திரன்.

படம் - 60

- மாலைமணி
30.9.1962

1962 ஆம் ஆண்டு விலைவாசி உயர்வை எதிர்த்து தி.மு.க. போராட்டங்களை நடத்தியது. அண்ணா ஜீலை 19ஆம் நாள் வேலூரில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன் மறியலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டார். பத்து வாரம் கடுங்காவல் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. வேலூர் சிறையில், அடைக்கப்பட்ட அண்ணாவுக்கு கைதி குல்லாவும் பைஜாமாவும் தரப்பட்டது. இராட்டையில் நூல் நூற்கும் பணி அவருக்கு வழங்கப்பட்டது. அக்காட்சியைக் காட்டும் மாலைமணியின் சித்திரம் இது. இந்திய விடுதலைக்காக செக்கிழுத்த வ.உ.சியுடன், திராவிடநாட்டு விடுதலைவீரரான சிறையில் நூல்நூற்கும் அண்ணா இங்கு ஒப்பிடப்படுகின்றார். இச்சித்திரத்தில் அண்ணாவுக்கு குல்லாய் அணிவிக்கப்படவில்லை. அதுபோன்று அண்ணா சிறையில் பைஜாமா அணிந்திருந்தார்; அரைக்கால் சட்டை அன்று.

படம் - 61

- சுதேசமித்திரன்
16.11.1962

இந்திய, சீன நட்புறவு சீர்குலைவு அடைந்திருந்த நேரத்தில் அண்ணா, நேருவுக்கு தன் ஆதரவை அளிப்பதாக அறிவித்தார். அதைத் தன்னுடைய கோணத்தில் கேலிச்சித்திரமாக்கி உள்ளது சுதேசமித்திரன்.

படம் - 62



- அறப்போர்
பொங்கல் மலர் 1962

படம் - 63



'அண்ணா பிறந்திராவிட்டால்' என்னும் சித்திரத்தொகுப்பு தமிழ்ச் சமூகத்துக்கு அண்ணா ஆற்றிய தொண்டுகளைப் பட்டியலிடுகின்றது. அண்ணா இல்லையேல் காங்கிரசில் இன்று சிலர் பெற்றிருக்கும் பதவிகள்கூட அவர்களுக்குக் கிடைத்திருக்காது என்னும் உண்மையை உரத்துச் சொல்கின்றது. மிட்டாமிராசுகளின் கட்சியாக இருந்த காங்கிரசுக்கு மாற்றாக அடித்தளமக்களின் பங்கேற்புடன் திமுக மலர்ந்தது என்கின்றது இந்தச் சித்திரத்தொகுப்பு.


தென்னகத்தின் சார்பில்
அதிக மந்திரிகள் ஏற்பட்டி
ருக்க மாட்டார்கள்
காங்கிரஸ்
காங்கிரசிற்கு மூக்கணாங்-
கயிறு போட நாதியிருக்காது.
RAJAYA SABHA
திராவிடத்தின் குரலை வெளி
நாட்டார் அறிந்திருக்க முடியாது.
நமக்கெல்லாம் தென்னகத்தில்
பிறந்த தலைமை கிடைத்திருக் -
-காது,
பெருந்தனக்காரர்களுக்குரிய
அரசியல் மக்கள் மன்றத்திற்கு
வந்திருக்காது.
கொலைகாரப் புரட்சிக்கும் பிற்போ
க்கு இருளுக்குமிடையே நடுவழி
காட்டும் ஒளிவிளக்கு கிடைத்திருக்
காது.

கைத்தறி
வாங்கலையோ...
கைத்தறி!
தென்னகத்தின் மிகப்பெரிய
தொழிலான கைத்தறி கல்லறை
போயிருக்கும்.
தமிழக அரசாங்கமே ஊட்டியி-
லிருந்து ஆளும் கருப்புத்துரை
சாம்ராஜ்யமாயிருககும்
சட்டமன்றத்தில் தமிழ்மணம்
கமழ்ந்திருக்காது.
நேரு போன்றவர்கள் தென்னாட்டாரை
நான்சென்ஸ் பட்டத்திற்குரியவராக்
கியிருப்பார்கள்.
மக்களிடையே சாதிப் பிரிவும்
மதப்பிரிவும் தலைவிரித்து
ஆடியிருக்கும்.
ஒவ்வொரு துறையிலும் சிறந்து
விளங்கும் தம்பிமார் படை வாய்த்
கிடைததிருக்காது



- முரசொலி
அண்ணா 54வது பிறந்தநாள் சிறப்பிதழ் 1962


தி.மு
கழகத்தின்
தேர்தல்
அறிக்கை

படம் - 64

1962 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை 16.12.1961 அன்று கோவையில் கூடிய தி.மு.கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு, 17.12.1961 அன்று கோவையில் நடைபெற்ற தி.மு.கழகத் தேர்தல் சிறப்பு மாநாட்டில் வெளியிடப்பட்டது. 1962 ஆம் ஆண்டு முரசொலி வெளியிட்ட பொங்கல் மலரில் இந்தத் தேர்தல் அறிக்கை சித்திரத்தொகுப்பாக வெளியிடப்பெற்றது. இந்தியாவிலேயே முதன்முறையாக தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கைதான் சித்திரத்தொகுப்பாக வெளிவந்துள்ளது. அதை வெளியிட்ட பெருமை முரசொலிக்கு உரியது. முரசொலியில் வெளிவந்த இந்தத் தேர்தல் அறிக்கை சித்திரத்தொகுப்பை இராயபுரத்தில் அமைந்த தி.மு.க. தலைமை நிலையம் சிறுபிரசுரமாக வெளியிட்டது. அரசியல் களத்தில், தேர்தல் அறிக்கையை முன்வைத்து இன்றளவும் செயல்படும் இயக்கமாக தி.மு.க. திகழ்கின்றது. அன்றைய தேர்தல் அறிக்கையின் பெரும்பான்மையான திட்டங்கள் கழக ஆட்சி மலர்ந்ததும் நிறைவேற்றப்பட்டன.

தி.மு.க.வைக்காட்டி மாநில மந்திரிகள்
வடக்கேயிருந்து உரிமைபெற்றனர்.
தி.மு.க
ஜனநாயகவாதிகள் நம்
பணிக்குப்பாராட்டு.
தி.மு.க
காங்கிரஸ் ஏதேச்சாதிகாரத்தைத்
தடுத்தோம்.
தி.மு.க.
அநீதிகளைக்
கண்டித்திருக்
கிறோம்.
தி.மு.க
காங்கிரஸ்
மக்களுக்காக போராடி
இருக்கிறது.
விலை
ஏற்றம்
உணவுவிலை
ஏற்றத்தைத்
தடுக்க
போராடியிருக்
கிறது

வேலையில்லாதோர்
திண்டாட்டம்பற்றி
எடுத்துரைத்திருக்
கிறது.
INDIA
பணவீக்கத்தை தடுக்க
வேண்டுமென வற்புறுத்தியுள்ளது.
ஏழை விவசாயிக்கு
வரியை குறை என
எடுத்து கூறியுள்ளது.
வரி
உணவுப் பொருள் வரியைக்
குறைக்கும்படி போராடியுள்ளது.
குவிதல் அதிகாரம்
தவறு என்ற கருத்து
பரவியது.
குறையுள்ள நில உச்ச வரம்பு
சட்டத்திற்கெதிராக அணி


உழவர்களுக்குவசதி
கிடைக்க வழியேற்பட
போராடியுள்ளது.
உரம்
பணம்
விதை
கைத்தறியாளருக்கு அதிகச்
சலுகைதரக் கோரிக்கை.
தொழிலாளர் போராட்டங்களுக்கு
துணை நின்றோம்.
மீனவ மக்களுக்கு மீன் பிடி
கருவிகள் தர வற்புறுத்தினோம்.
தாழ்த்தப்பட்டோ
ருக்கு உதவுக.
மரமேறும் தொழிலாள-
ருக்கு நல்ல வேலை தருக.

சீர்திருத்தத் திருமணச் சட்டம் இயற்றுக.
அரசாங்க ஊழியர் நிலை உயர்த்துக.
FILE
ஆரம்ப ஆசிரியர் நிலையுயர....
சிறுவர்களுக்கு பள்ளியில் பகலுணவு, சீருடை சரிவரத் தருக.
CINEMA
பஸ்களை, சினிமாக் கொட்டகையை தேசியமாக்குக.
தமிழ் முழுமையான ஆட்சிமொழியாக ஆக்குதற்குப் போராடுவோம்.
தமிழ்

திரு
திருமதி
திரு, திருமதி என்ற தமிழ் சொற்களை பயன்படுத்தப் பாடுபட்டுள்ளது.
இந்தி
கட்டாய இந்தித் திணிப்பிற்த எதிர்ப்பு.
தேவநாகரித் திணிப்பிற்கு எதிர்ப்பு.
கவர்னர் பதவிக்கு எதிர்ப்பு.
உதகை சட்ட மன்ற வீண் செலவிற்கு எதிர்ப்பு
சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றி வாயம் காட்டியது.


சென்னை மாநகராட்சிக்கு ரோடு, குடிநீர் வசதிபோன்றவற்றிற்கு உதவிட வேண்டிற்று.
நடைபாதை வாசிகளுக்கு உதவிட வற்புறுத்தினோம்.
குடிசை வாழ்வோருக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்தோம்.
கிராமங்களில் சாலை, குடிதண்ணீர், கல்வி வசதி பெருகிட வற்புறுத்தினோ
ஊராட்சி மன்றம்
ஊராட்சி மன்றங்களின் அதிகார உயர்வுக்குப் போராடினோம்.
புதிய ரயில் பாதைகளுக்கு வற்புறுத்தினோம்.


ஆயிரம் கோடி வேண்டும்!
ஆயிரம் கோடி
ஆயிரம் கோடி திட்டத்திற்கு வற்புறுத்தினோம்
இலங்கைத் திராவிடர் இழிநிலை துடைக்கப் பாடுபட்டோம்
இத்திட்டங்களை-கருத்துகளை காங்கிரசாட்சி ஏற்காததால், நாட்டில் ஊழல்கள் பெருகிற்று.
தாயகம் திரும்பியவருக்கு வாழ்க்கை வசதி
முதலாளி
உழுத்தர் கொழுத்தனர் உழைப்பாளர் நலிந்தனர்.
இதை தடுக்க சட்ட மன்றம் செல்லும் தி.மு.கவை அழிக்க முதலாளிகள் காங்கிரசைத் தூண்டுகின்றனர்.
இந்தி நுழைவைத் தடுக்கும் தி.மு.கவை அழிக்க மத்திய அரசு காங்கிரசிற்கு ஆணையிடுகிறது.

இந்த நிலைமாற்றிட தி.மு.கழகம்

அண்டை மாநிலங்களின் உதவி
சூரிய வெப்பத்தை மின்சாரமாக்கும் திட்டம்.
கடல்நீரை குடிநீராக்கும் திட்டம்
கடலோர வாணிபப் பெருக்க
பக்கிங்காம் கால்வாயை வேதாரண்யம் கால்வா-யுடன் இணைத்தல்.
மீன்பிடித் தொழிலை முறையுடன் பெருக்குதல்
இறைச்சித் தொழிலை லாபமாக்குதல்.
உரத் தொழிற்சாலைகளை நிறுவுதல்

கோழி வளர்ப்பை முறையுள்-
-ளதாக்குதல்.
தேங்காய் நார் மூலம்
செயற்கை ரப்பர்.
முந்திரி ஆராய்ச்சி.
பழங்களை ஏற்றுமதி
செய்தல்.
கரும்புச்சக்கை கிடைக்குமி-
டத்தில் காகித ஆலை.
தாவர எண்ணெய்
தொழிற்சாலை
மக்னசைட், மாங்கனீஸ், ஜிப்சம்
அலுமினிய செய்பொருள்கள்

வரிப்பளு
வரிப்பளு குறையும்
BANK
பாங்குகள் தேசியமயம்
பொதுத்துறை
தனியார் துறைநிபுணர்கள்
பொதுத்துறைக்கு வருவர்.
அரசாங்க பஸ் தொழிலை
விரிவாக்குதல்
தொழிலாளருக்கு
சட்டங்கள்
கரைபோட்ட
வேட்டியும், சேலை
யும் கைத்தறித்த
கைத்தறி பற்றிய வெள
நாட்டு ஒப்பந்தங்கள்


முஸ்லிம், கிருஸ்த்தவர்
குறைகளைப்போக்கும்.
தரிசு நிலத்தை நிலமில்லாத
உழவருக்கு வழங்குதல்
17லட்சம்
35லட்சம்
50பேர்
100பேர்
கிராமச் சீர்திருத்தத்திற்கு
பட்டாளம் பயன்படும்
விகிதாச்சார பிரதிநிதித்
துவம் வரும்.
குறிப்பிட்ட பிரச்சினைமீது
வாக்கெடுப்பு நடத்தி சட்டமாக்
குதல்.
'லேண்ட் ஆர்மி' கிராம
பணிகளை புரியும்

ரதிநிதிகளைத் திரும்ப
ழைத்துக் கொள்ளும்
ரிமை
வட்டத்திற்கொரு
மருத்துவ வான்
கட்டாயக்
கல்வி.
கலைத் துறை மேம்பாட்-
டிற்கு வழி
தமிழகத்திற்கு மற்றொரு
பல்கலைக் கழகம்
வெளிநாட்டாரை வரவழைத்து
தொழில் நுட்ப அறிவு.
திராவிட நாகரீகத்தை
ஆராய தனிக்குழு.


குறள் நெறி
உலகில்பரவிட
ஒரு நிறுவனம்
எல்லாநகரங்களிலும்
பாதாள சாக்கடைத்
திட்டம்
MFS
எல்லா ஊர்களிலும்
தீயணைப்பு
இந்தி
இந்தியை தடுத்து நிறுத்தும்
சீர் திருத்த திருமணங்கள்
செல்லும்படியாக்கும்
உரிமைகள் காக்கப்படும்
FILE
கூட்டுறவுத் துறை செம்மையாக்
கப்படும்

- முரசொலி
பொங்கல் மலர் 1962

படம் - 65

எந்தக்குழந்தை எழில் குழந்தை?

சென்னையில் குழந்தை கள் காட்சியொன்று சில தினங்களுக்கு முன் நடந் தது.

- சுதேசமித்திரன்
6.2.1963

படம் - 66



- தி மெயில்
22.3.1963

நாங்குநேரி இடைத்தேர்தல் கூட்டணியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட்டுகள் காங்கிரசுக்கு ஆதரவு தருகின்றனர். சென்னை மாநகராட்சி தேர்தலில் ஒரு வார்டில்கூட வெல்ல முடியாத சுதந்திரா கட்சிதான் தி.மு.க. கூட்டணிக்குத் தலைமை வகிப்பதாக ஊடகங்கள் சித்தரிக்கின்றன. 1967 பொதுத்தேர்தலில் தி.மு.க. வெல்லும்வரை, இராஜாஜியை ஊடகங்களில் அண்ணாவை விட முதன்மையானவராகச் சித்தரிப்பது தொடர்கின்றது.

படம் - 67

- தி மெயில்
21.4.1963

ஆட்சிமொழிப் பிரச்சனையில் அன்றைய ஆளும்வர்க்கமும் "மெயில்" போன்ற ஆங்கில ஊடகங்களும் கொண்டிருந்த நிலைப்பாட்டின் வெளிப்பாடு இது. தி.மு.க.வின் பதினான்கு தேசிய மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஆக்க வேண்டும் என்னும் கோரிக்கையைச் சிறுபிள்ளைத்தனம் என்று கூறுகின்றது மெயில். இதன் தொடர்ச்சியாக இந்திஆட்சிமொழி ஆக்கப்பட்டவுடன் தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு வலுப்பெற்று போராட்டத்தில் முடிந்தது. அப்போராட்டம் தமிழக ஆட்சியையே புரட்டிப்போட்டது குறிப்பிடத்தக்கது.

படம் - 68

- சுதேசமித்திரன்
11.5.1963

1963 இல் நடைபெற்ற நாங்குநேரி இடைத்தேர்தலில் காங்கிரஸ் தனித்து நின்றாலும் வெற்றிபெறும் வாய்ப்பு காங்கிரசுக்கே உள்ளது என்று கூறுகின்றது சுதேசமித்திரன். அத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற்றது.

படம்-69

- தி மெயில்
4.6.1963

1963இல் இராஜாஜி இந்தித்திணிப்பைக் கடுமையாக எதிர்த்தார். இராஜாஜியின் இந்தி எதிர்ப்பு என்பது காங்கிரஸ் காமராசர் எதிர்ப்பின் தொடர்ச்சிதான். ஆனால் 'மெயில்' அண்ணாவின் இந்தி எதிர்ப்புணர்வைப் பிரதானப்படுத்தாமல் இராஜாஜியின் எதிர்ப்புணர்வுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது நோக்கத்தக்கது.

படம் - 70



சுதேசமித்திரன்
11.6.1963

"இராஜாஜி : என் தலைமையைப் பின்பற்றுங்கள்.
அண்ணாத்துரை : அதைத்தான் நானும் சொல்கின்றேன்; என் தலைமையைப் பின்பற்றுங்கள்." என்னும் சித்திரவிளக்கம் படத்தின் கீழ் காணப்படுகின்றது. 1963இல் தி.மு.கவுடன் நல்லுறவு வைத்திருந்த இராஜாஜி இந்தித்திணிப்பிற்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்தார். இந்திஎதிர்ப்புக்கு யார் தலைமை ஏற்பது என்னும் போட்டி நிலவுவதாகக் கூறுகின்றது சுதேசமித்திரன்.

படம் - 71

- அறப்போர்
5.7.1963

காங்கிரஸ் கட்சிக்குப் பணபலம், அதிகாரபலம், பெரியார், சம்பத் முதலியோரின் ஆதரவு இருந்தாலும், அண்ணா மக்கள்சக்தியின் துணையால் தொடர்ந்து காங்கிரசை அடித்து வீழ்த்துவார் என்று விளக்குகின்றது அறப்போர்.

படம் - 72



- தி மெயில்
27.7.1963

அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகளின் அணுஆயுத ஒப்பந்தம் இந்தியாவுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது பாகிஸ்தானுக்கும், சீனாவுக்கும் அந்த ஒப்பந்தம் அதிர்ச்சியூட்டுகின்றது. அமெரிக்க இந்திய நட்புறவால் அகில இந்திய வானொலிக்கு 1000 கி.வாட்ஸ் ஒளிபரப்பு சாதனம் கிடைத்துள்ளது. இவ்வளவு பின்னடைவுகளுக்கும் நடுவே மேடுபள்ளங்களைச் சீர்செய்யும் இந்தி ஆட்சிமொழி என்னும் ரோடுரோலர் முன்பு இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்னும் பாறாங்கல்லை உருட்டுகின்றது தி.மு.கழகம். "காந்தியவழியில் அறவழிப் போராட்டத்தை நடத்துகின்றோம" என்கின்றார் அண்ணா. அண்ணா தொடர்ந்து காந்திய நெறிகளை ஏற்பவராகத் தன்னை முன்வைத்தது கவனத்திற்குரியது. பின்னாளில் "தென்னாட்டுக் காந்தி" எனப்பட்டார் அண்ணா.

படம்-73

- தி மெயில்
1.8.1963

பக்தவத்சலத்தின் ஸ்ரீ பெரும்புதூர் தேர்தல் வெற்றிக்கு எதிரான தி.மு.க. வேட்பாளரின் மனு டிரிபியூனல் நீதிபதியால் நிராகரிக்கப்பட்டது.

படம் - 74



- தி மெயில்
10.8.1963

பதினான்கு அங்கீகரிக்கப்பட்ட மொழிகளும் தேசியமொழிகளாக, ஆட்சிமொழிகளாக ஆக வேண்டும் என்ற தி.மு.க. நிலைப்பாடு பற்றிய கேலிச்சித்திரம். மொழிகளின் சுமை அண்ணாவை திணறடிக்கின்றதாம்.

படம் - 75

வழி மறைத்திருக்குதே

சுதேசமித்திரன்
10.9.1963

அண்ணா, இராஜாஜி கூட்டணிக்கு எதிர்நிலையில் சீறிப்பாயும் காளையாக காமராசர் காங்கிரசின் தேர்தல் சின்னம் "இரட்டை காளை" என்பது மனங்கொள்ளத்தக்கது இன்று நினைவிலிருந்தே மறைந்துவிட்ட சின்னம் காமராசர் தலைமையிலான சிண்டிகேட் என்ற குழுவினருக்கும், தலைமையிலிருந்து "இண்டிகேட் ஆன குழுவிற்கும் நடந்த மோதலில்(காங்கிரஸ் பிளவுபட்டபோது)முடங்கிப்போன சின்னம் இதுதான்.

படம் - 76



- தி மெயில்
8.10.1963

"ஒரு வேளை எதிர்க்கட்சிகள் ஆட்சியைப் பிடித்தாலும் ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே ஆட்சியில் நீடிக்கமுடியும் அதன்பின் ஐம்பதாண்டுகளுக்கு காங்கிரஸ் ஆட்சியே நடக்கும்" என்று ஆருடம் கூறுகின்றார் காமராசர். ஆனால் வரலாறு ஆருடத்தைப் பொய்யாக்கி விட்டது. நாற்பதாண்டுகளுக்கும் மேலாக திராவிடக் கட்சிகளின் ஆட்சியே தமிழகத்தில் நடந்து வருகின்றது. சித்திரமாக உறைந்துபோன "வாக்கு" இன்றும் பலிதமாகவில்லை. ஆனாலும் "காமராசர் ஆட்சி" என்ற கனவு மட்டும் தொடர்கின்றது.

படம்-77



- சுதேசமித்திரன்
24.10.1963

அரசியல் சட்டத்தின் பதினாறாவது திருத்த மசோதா நிறைவேறிய பின், அண்ணா திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டார் என்கின்றது சுதேசமித்திரன். மொழிவாரி மாநிலங்கள் உருவானபோதே “திராவிடம்” என்ற சொல் “தமிழ்நாடு” என்னும் பொருள் கொண்டுவிட்டது. நிலஎல்லைச் சுருக்கம் மட்டுமின்றி திராவிடத்தின் பிதாமகரான பெரியார், அதற்கு ஆதரவற்ற நிலையை முன்வைத்தபோது, காலம் கருதி எடுக்கப்பட்ட முடிவுதான் இது. சட்டத்திருத்தம் அதற்கான சந்தர்ப்பம் மட்டுமே.

படம்-78



- நவசக்தி
25.10.1963

திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைக் தி.மு.க. கைவிட்டவுடன் பலமிழந்து விட்டதாகவும் மக்களிடம் செல்வாக்கு இழந்துபோன தி.மு.க. இந்தியை எதிர்த்து எவ்வாறு போராடும் என வினா எழுப்புகின்றது நவசக்தி. காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான நவசக்தி, தி.மு.க.வின் மீது இருந்த அதீத வெறுப்பை இவ்வாறு உணர்த்தியிருக்க வேண்டாம்.

படம் - 79



- சுதேசமித்திரன்
25.10.1963

இந்திய அரசியல் சட்டத்தின் பதினாறாவது திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறிய நேரம். அண்ணா "திராவிடநாடு" கோரிக்கையைக் கைவிட்டு விட்டார். அத்துடன் தி.மு.க. அழிந்துவிடுமென்று காங்கிரசும், தமிழ்த்தேசிய கட்சியின் சம்பத்தும் நினைத்தனர். ஆனால், இராஜாஜி மட்டும் தி.மு.க. கூட்டணியில் இருந்தார்.

படம் - 80

இறக்கமும் இரக்கமும்

- சுதேசமித்திரன்
31.10.1963

திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்ட பின், தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க அரசியல் கட்சிகள் போட்டியிடுவதைக் குறிக்கும் கேலிச்சித்திரம் இது.

படம் - 81

- தி மெயில்
6.11.1963

சுதந்திரா கட்சியுடன் கூட்டணியில் இருந்தாலும், தி.மு.க. இடதுசாரி கட்சியாகத்தான் செயல்படும் என்று அண்ணா கூறியதை ஆதாரமாக வைத்துக்கொண்டு, இராஜாஜியை திராவிடநாடு பிரிவினைக் கோரிக்கைக்கு, அவரது விருப்பமின்றி அண்ணா இணங்க வைத்து விடுவார் என்கின்றது மெயில்.

படம் - 82

- முரசொலி
பொங்கல் மலர் 1963

மக்களுக்கு ஆபத்து நேரும்போது, தீயணைக்கும் படை விரைந்துவந்து உதவுவது போல தமிழ் மக்களுக்கு பிரச்சனைகள் நேரும்போது, அண்ணாவும் அவருடைய தம்பியரும் விரைந்துவந்து உதவுவார்கள் என்னும் கருத்துப் புலப்பட வரையப்பட்ட சித்திரத்தொகுப்பு இது. இங்கு தி.மு.கழகம் தீயணைக்கும் படையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அண்ணா தளபதியாகவும் அவருடைய தம்பிகள் சிப்பாய்களாகவும் அணிவகுத்து நிற்கின்றனர். இதைத் தொடர்ந்து திமுக முன்னெடுத்த சமூகப் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் பட்டியலிடுகிறது இந்த சித்திரத்தொகுப்பு.


1950 அக்டோபர் 23
எழுத்துரிமை, பேச்சுரிமைக்கு ஆபத்துவந்தபோது..
கூட்டத்தில் தடையை மீறினோம்!
சிறை சென்றோம்
உரிமை பெற்றோம்
கைத்தறியாளரின் கண்ணீர் துடைத்தோம்
1953 ஜனவரி 4
கைத்தறியாளர் தொழிலின்றி கண்ணீர் விட்டபோது...
வீதி யெல்லாம் கைத்தறி ஆடை விற்று உதவினோம்.
சித்தூர், திருத்தணி தமிழ்
1953 ஜூலை 3
மக்கள் கொடுமையுற்றபோது...
சித்தூர், திருத்தணி மக்கள் கொடுமையுற்ற-போது....
கொடுமை
கொடுமை எதிர்க்கும் போரில் தி.மு.க.வும் கலந்துகொண்டது.
2


1953
ஜூலை
15
மும்முனைப் போராட்டம்
ரயில் நிறுத்தப்போர்
தமிழருக்கு அவமானம் நேர்ந்தபோது...
தென்னகமெங்கும் ரயில்கள் நின்றன!
கல்லக்குடி போர்
கல்லக்குடியை டால்மியாபுரம் என்று வடநாட்டார் மாற்றிய-போது...
தமிழன்னை
டால்மியா புரம்
தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்து மானம் காத்தனர்.
டால்மியாபுரம்
புதுக்கல்வித் திட்ட எதிர்ப்புப் போர்
புதுக்கல்வி என்ற பெயரால் குலக்கல்வி திணிக்கப்-பட்டபோது...
முதலமைச்சர் வீட்டுமுன் மறியல்
குலக் கல்வி கைவிடப் பட்டது.
3

1954
ஆகஸ்ட்
11
திருவாங்கூர் தமிழருக்கு கொடுமை வந்துற்றபோது...
நாஞ்சில்நாடு தமிழகத்துடன் சேர முயன்றதால் கொடுமை வந்தபோது...
தி.மு.க.வும் போரில் ஈடுபட்டது
நங்கவரம் உழவர் போராட்டம்
1957
ஆகஸ்ட்
23
மிராசுதார் கொடுமை
நங்கவரத்தில் உழவர் துன்புற்றபோது...
அறப்போர் நடத்தி வெற்றி கண்டது கழகம்
1958
ஜனவரி
6
கருப்புக்கொடி போராட்டம்
மீண்டும் நேரு தமிழர்களை அவமதித்த போது
ஓடு வெளியே!
நேருவுக்கு கருப்புக்கொடி காட்டி, களபலி தந்தது கழகம்
4


தமிழ்நாடு பெயர் போராட்டம்
1959
ஜனவரி
20
தமிழ்நாடு என்று பெயரிட
மறுத்தது அரசு....
இது நம்ப
மெட்ராஸ்!
தமிழன்னை
நாடெங்கும் கடையடைப்பு,
ஊர்வலம் நடத்தினோம்
அரசு பாதி வழி
இறங்கி வந்தது!
உன் பெயர்
தமிழ் நாடு
தான்!
பேட்டவாய்த்தலை தொழிலாளர் போராட்டம்...
1960
மார்ச்
11
நிர்வாகம்
கரும்பாலைத் தொழிலாளர் முதலாளி-
-களால் கொடுமையுற்றபோது...
போராட்டத்தில் தி.மு.கவும் கலந்தது.
நிர்வாகம் பணிந்தது.
1960
ஆகஸ்ட்
30
இந்தி எதிர்ப்புப் போர்
இந்தி
இந்தி மீண்டும் நுழைய
முயன்றபோது....
கழகம் மாநாடு
நடத்தி எச்சரிக்கை
விட்டது.
இந்தியை
திணிக்க
மாட்டோம்
5
நேரு உறுதிமொழி தந்தார்

இலங்கைத் தமிழர் ஊர்வலம்
1961
ஜூலை
18
இலங்கையில் தமிழர்
கொடுமையுற்றபோது...
மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தி
னேம்
உழவர் பேரணி
1961
செப்டம்பர்
28
நிலசீர்திருத்த சட்டத்தில்
உழவருக்கு தீங்கிருந்த-
-போது...
நிலச்சீர்திருத்த சட்டம்
உழவர்பேரணி நடத்தினேம்
1962
ஜூலை
19
விலைவாசி உயர்வு கண்டன மறியல்
விலைவாசி விஷம்போல்
ஏறியபோது...
விலை
சர்க்கார் அதைத்தடுத்து நிறுத்த
தயங்கியபோது...
மக்கள்
அரசாங்கம்
6



- முரசொலி
பொங்கல் மலர் 1963

படம் - 83

நினைத்ததும் நடந்ததும்!
கழக வளர்ச்சி நாவேந்து பேச்சாளர்களோடு நின்றுவிடும் என்று நினைத்தனர்!
கழகக் கூட்டத்தில் கலவரம் விளைவித்த னர்; கல் வீசினர்!
படித்தவர்களோ டும், நகர மக்களோடும் நின்றுவிடும்; கிராமங்க ளுக்குப் பரவாது என்று மனப்பால் குடித்தனர்!
அங்கெல்லாம் பரவியதும்...
கழக முன்ன ணியினர் மீது மாசு கற்பிக்க வசை புராணம் பாடினர்

பேச்சு கேட்கக்
கூட்டம் வரும்;
ஓட்டுப் போட
ஆள் வராது
என்று நினைத்தனர்
15 பேர்
வந்ததும்
௧௫-தானே!
அடுத்த தேர்தலில்
0-தான் என்று
பகற்கனவு கண்டு
குடும்பத்திலே
கலகம் மூட்ட,
சதிவேலை செய்து
ஜடாசை
ஏவினர்

- முரசொலி
பொங்கல் மலர் 1964

படம் - 84

திராவிட இன,மொழி, பண்பாடு காத்துப் பேணி வளர்த்திட
நகராட்சி-என்கிறநிலை மாற்றி திராவிட மாநிலங்கள், கூடுதல் அதிகாரம் பெற்றிட
அதிகாரம்
அதிகாரம்
எது கொள்கையில்லாக் கட்சி?
திராவிட மாநிலங்கள் விரும்பினால் தமக்குள் ஒரு கூட்டமைப்பு ஏற்படுத்த
நேரடியாகவும், மறைமுகமாக வும் வரும் இந்தி ஆதிக்கத்தைத் தடுக்க அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைத் திருத்திட
இந்தி


கொழுத்த வரிகள்
டில்லிக்கு என்றிருப்பதை
மாற்றி மாநிலங்களுக்கு
ஆக்கிட;
வடநாடு தொழிற்பேட்டை;
தென்னாடு வாணிபச்சந்தை
என்பதை மாற்றி தென்-
னகத்தைத் தொழில்
மயமாக்கிட;
பணக்காரர் மேலும்
பணக்காரராகவும்,
ஏழை மேலும் ஏழையாவ
-தையும் தடுத்து உண்
-மையான சமதர்மம்
நிலைநாட்டிட;

- முரசொலி
பொங்கல் மலர் 1964

படம் - 85



- தி மெயில்
26.2.1964

தி.மு.க.வின் தேர்தல் அரசியலில் மற்றொரு மைல்கல், சென்னை மாநகராட்சி தேர்தலில் தி.மு.க., முஸ்லீம் லீக் கட்சியுடன் இணைந்து மாநகராட்சியைக் கைப்பற்றியது. ஆனால், தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருந்த சுதந்திரா கட்சி ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. உள்ளாட்சி தேர்தலில் சிறுசிறு வெற்றிகளைக் காங்கிரஸ் பெற்றிருந்தாலும் சென்னை மாநகராட்சி என்னும் பெருமீனை காங்கிரஸ் தவறவிட்டு விட்டது. சென்னை மாநகராட்சியில் ஒரு இடம் கூட பெறாத இராஜாஜி, தி.மு.க.வின் வெற்றியைத் தன் வெற்றியாகக் கருதிப் பெருமிதம் கொள்கின்றார்.

படம் - 86

- தி மெயில்
29.2.1964

சென்னை மாநகராட்சிக்கு நடந்த தேர்தலில் தி.மு.க. பெரும்பான்மையாக வெற்றி பெற்றது. ஆனால் தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருந்த சுதந்திரா கட்சி தோல்வியடைந்தது. இராஜாஜியின் உழைப்பின் விளைவை அண்ணா களிப்புடன் உண்பதாகச் சித்திரம் தீட்டியுள்ளது மெயில். "சாம்பாரில் உப்பு கலந்திருப்பதை எவ்வாறு காண முடியாதோ, அவ்வாறே தி.மு.க.வின் வெற்றியில் சுதந்திரா கட்சியின் உழைப்பு கலந்துள்ளது அதைக் கண்களால் காணமுடியாது" என்று இராஜாஜி தன் தோல்விக்குச் சமாதானம் கூறினார்.

படம் - 87



- தி மெயில்
14.3.1964

"இந்தியைப் பரப்புவதில் தென்னிந்தியாவிலேயே சென்னை மாகாணம்தான் முன்னணியில் இருக்கின்றது" என்று தில்லியில் நடந்த முதலமைச்சர் மாநாட்டில் அன்றைய முதல்வர் பக்தவத்சலம் குறிப்பிட்டார். முதல்வரின் அந்த உரை எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றியது போல தி.மு.க.வினரின் உணர்வுகளைத் தூண்டி விட்டது.

படம் - 88



- தி மெயில்
8.7.1964

வகுப்புவாதக் கட்சிகளையும், பிரிவினைக் கட்சிகளையும் தடைசெய்ய பரிந்துரைத்த ஜெயின் கமிட்டி அறிக்கை பற்றிய கேலிச்சித்திரம். தங்களுக்கெதிரான முன்வைப்புகளை ஆழ்ந்து ஆராய்ச்சி செய்கின்றார்களாம் மதவாதிகளும் பிரிவினைவாதிகளும்.

படம் - 89



- தி மெயில்
17.12.1964

"உண்மை நிலையறிந்து மொழிப்பிரச்சனை தொடர்பான குறித்த முடிவுகளுக்கு வரவேண்டும் இந்திக்கு எதிரான ஒவ்வாமை உதவாது" என்றார் முதல்வர் பக்தவத்சலம். மொழி விஷயத்தில் காமராசர், சி. சுப்ரமணியன் முதலியோர் கூடத் தமிழுக்கு ஆதரவான நிலைப்பாடுகளை சில வேளைகளில் கொண்டிருந்தபோது, அதை முற்றிலுமாக குழப்பிய பெருமை பெருமானார் பக்தவச்சலம் அவர்களைச் சாரும்.

படம் - 90

காங்கிரசுக்கு எதிரான அரசியல் கொள்கைகளைக் கொண்ட தி.மு.க., அண்ணாவைக் காந்தியின் அரசியல்வாரிசாக முன்னிறுத்தும் முயற்சி வியப்புக்குரியது. ஒருவேளை அன்றைய காங்கிரஸ் கட்சி காந்தியவழியில் செல்லவில்லை என்னும் விமர்சனத்தின் வெளிப்பாடாக இருக்கக்கூடும் அண்ணாவின் எளிமை அவருக்கு அந்த அடையாளத்தை வழங்கியிருக்கலாம்.



- முரசொலி
அண்ணாமலர் 1964

படம் - 91

- தி மெயில்
13.1.1965

இந்திமொழி, ஆட்சிமொழியானதை எதிர்த்து, தி.மு.க. குடியரசுநாளைத் துக்கநாளாக அறிவித்தது. ஆட்சிமொழிப் பிரச்சனை உச்சகட்டத்தில் இருந்த வேளை அது. 1947இல் சுதந்திர தினத்தைத் துக்கநாளாக அறிவித்த தந்தைப் பெரியாருடன் முரண்பட்ட அண்ணா மொழிப்பிரச்சனையில் குடியரசு நாளை துக்கநாளாக அறிவித்தது நோக்கத்தக்கது.

படம் - 92

- தி மெயில்
23.1.1965

எதிர்ப்பைக் காட்டும் விதமாக அமைதியான முறையில் குடியரசுநாளைத் துக்க நாளாக அனுசரித்தாலும், அதை அரசு சகித்துக் கொள்ளாது என்றார் அன்றைய முதல்வர் பக்தவத்சலம். இக்கருத்தை விளக்கும் மெயிலின் கேலிச்சித்திரம்.

படம் - 93

வெற்றித் திருமகனே, வருக

ஒருமுறை சட்டமன்றத்தில் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைப் பார்த்து தலைமை நிலையச் செயலாளர் மதியழகன் அவர்கள், "எதிர்காலம் உம்மை தமிழ் துரோகி என்று கூறும்" என்று சொன்னார். கடந்த சில தினங்களில் நடந்த சம்பவங்களின் மூலம் முதலமைச்சர் அந்த வார்த்தைகளை நிரூபித்து விட்டார்.

- மாலைமணி
5.2.1965

26.1.1965 முதல் இந்தியை நாட்டின் ஒரே ஆட்சிமொழியாக ஆக்குவது என்று மத்திய அரசு முடிவு செய்தது. இதனால், குடியரசுநாளை துக்கநாளாக அறிவித்தார் அண்ணா. வீடுகளில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன. அண்ணா கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார். அச்சம்பவத்தை மையமாக வைத்து வரையப்பட்ட மாலைமணியின் சித்திரம் இது.

படம் - 94



- தி மெயில்
16.2.1965

மொழிப்பிரச்சனையில் தி.மு.க.வின் நிலைப்பாட்டை ஆதரித்த இராஜாஜி "எதிர்நிலைப்பாடு கொண்டவர்களை ஹெர்குலிஸ் போல என் கதாயுதத்தால் தாக்குவேன்" என்றார். இராஜாஜியின் கதாயுதம் தி.மு.க.தான் என்கின்றது மெயில்.

படம் - 95

- தி மெயில்
12.4.1965.

தர்மபுரி இடைத்தேர்தலில் காங்கிரஸ் வெற்றிப் பெற்றது. ஏற்கனவே திருவண்ணாமலை இடைத்தேர்தலில் தோற்றுப்போன காங்கிரஸ் கட்சிக்கு இது ஆறுதலாக அமைந்தது. மொழிப்பிரச்சனையில் மாநிலம் முழுவதும் தி.மு.க. ஆதரவுநிலை இருந்தபோதும் தி.மு.க.தர்மபுரியில் தோல்வியடைந்தது. தி.மு.க. வை ஆதரித்த இராஜாஜி, தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

படம் - 96

காலைவாரி விடும் மாநில அரசு

அன்னிய ஆக்ரமிப்பை எதிர்க்க அனைவரும் வாருங்கள் என்று மத்திய அமைச்சர்கள் அழைக்கின்றபோது, மாநில அரசு தி மு கழகத்தின்மீது பாதுகாப்புச் சட்டத்தைப் பிரயோகிக்கிறது.

- முரசொலி
30.4.1965

படம் - 97

தைரியமிருக்கிறதா?



- முரசொலி
23.6.1965

26.1.1965 முதல் இந்தியை நாட்டின் ஒரே ஆட்சிமொழியாக மத்திய அரசு அறிவித்தது. அதனால், தி.மு.க. அந்நாளைத் துக்கநாளாக அறிவித்தது. இதைத் தொடர்ந்து மாணவர்களின் போராட்டம் வெடித்தது. தி.மு.கழகத்தினரும், மாணவர்களும் துப்பாக்கிச்சூட்டுக்கும் சிறைவாசத்திற்கும் ஆட்பட்டனர். அதிகாரத்தில் இருந்த காங்கிரஸ் அரசின் கடும்ஒடுக்குமுறையைச் சித்தரிக்கின்றது முரசொலி.

படம் - 98

தியாகச் செம்மலுக்கு வரவேற்பு

தாய்த் தமிழ் காக்க அரசியல் சட்ட மொழிப் பிரிவைத் தீயிட்டுக் கொளுத்தி ஓராண்டு கடுங்காவல் தண்டனை அடைந்த முகவை மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு இன்று (30—6—65) காலை விடுதலையாவார்.

- முரசொலி
30.6.1965

1965ஆம் ஆண்டு இந்திஎதிர்ப்புப் போரின் போது, அண்ணா அரசியல் சட்டப்பிரிவை எரிக்கும் போராட்டத்தில் ஈடுபட்டு கைதாகி ஆறுமாதம் தண்டனை பெற்றார். பாதுகாப்புச் சட்டப்படி கைதான கலைஞர், பாளையங்கோட்டை சிறையில் தனி செல்லில் அடைக்கப்பட்டார். அரசியல் சட்டப்பிரிவை எரித்து ஓராண்டு கடுங்காவல் தண்டனை அடைந்த எஸ்.எஸ். தென்னரசு விடுதலை பெறும் காட்சி.

படம் - 99

திசை திருப்புகின்றார்



- முரசொலி
8.7.1965

இந்தி எதிர்ப்புப் போராட்டம் தீவிரமாக நடந்த காலம்' காமராசர் தலைமையிலான காங்கிரசுக்குத் தொடர்ந்து ஆதரவு அளித்த பெரியார், பக்தவத்சலம் ஆட்சி மீது அதிருப்தி அடைந்தார்.

படம் - 100

அண்ணா ஓர் சக்கரவர்த்தி

அறிஞர் அண்ணா அவர்கள், ஒரு சக்கரவர்த்தியின் சக்தியை பெற்றிருப்பவர் என்றும், எங்கெங்கு தமிழ் பேசப்படுகிறதோ அவைகளெல்லாம், அவர் ஆட்சிபுரியும் மண்டிலங்களாகும் என்றும் 'இல்லஸ்ட்ரேட்டட்வீக்லி' பத்திரிகை கட்டுரை ஒன்றில் எழுதப்பட்டிருக்கிறது.

- முரசொலி
17.7.1965

படம்-101

- தி மெயில்
1.2.1966

திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்ட தி.மு.கழகம் 'கொடிநாள்' கொண்டாடியது. இதைத் தேர்தல் வெற்றியைக் குறிவைத்து நடத்தும் செயல்திட்டமாகப் பார்க்கின்றது மெயில்.

படம் - 102



- முரசொலி
2.2.1966

1965ஆம் ஆண்டு இந்திஎதிர்ப்புப் போரைக் காரணம் காட்டி, காங்கிரஸ் கட்சி தி.மு.கழகத்தைக் கடுமையாக ஒடுக்கியது. இந்தியப் பாதுகாப்பு சட்டம் 30(1) பிரிவின்படியும், 41(5) பிரிவின்படியும் கலைஞரைக் கைதுசெய்து பாளையங்கோட்டை சிறையில் தனி செல்லில் அடைத்தது. முரசொலிமாறனும் அச்சட்டத்தின்படி கைது செய்யப்பட்டார். இந்தியப் பாதுகாப்பு சட்டத்தைக் காங்கிரஸ் அரசு துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தியது.

படம் - 103

- தி மெயில்
9.4.1966

மொழிப்பிரச்சனையைக் கையில் எடுத்துக்கொண்டு, தமிழ்வழிக் கல்வியை முன் வைப்பதாக தி.மு.க.வை விமர்சிக்கின்றது மெயில். “காங்கிரஸ் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரும் சக்தி தி.மு.க.வுக்கு மட்டுமே உண்டு” என்றார் அண்ணா.

படம் - 104



- முரசொலி
18.4.1966

1967 ஆம் ஆண்டு தேர்தலில் தி.மு.கழகம் ஆட்சியைப் பிடிக்கும் என்று நம்புகின்றது முரசொலி; அந்நம்பிக்கை பின்னாளில் நனவாயிற்று என்பது வரலாறு.

படம் - 105



காங்கிரசில் இளைஞர்கள் சேரவேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார் காமராசர்.

- முரசொலி
20.5.1966

1967 ஆம் ஆண்டு தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்றது. தி.மு.க.. சுதந்திரா, நாம் தமிழர் இயக்கம், தமிழரசு கழகம், கம்யூனிஸ்ட், பார்வார்டு பிளாக் முதலிய கட்சிகள் இணைந்து, காங்கிரசுக்கு எதிராக வலுவான கூட்டணி உருவாகிக் கொண்டிருந்த சூழலை முரசொலி சித்தரிக்கின்றது.

படம் - 106

- முரசொலி
23.6.1966

1965 ஆம் ஆண்டு இந்திஎதிர்ப்புப் போராட்டம் மாணவர் போராட்டமாக உருவெடுத்தது, அன்றைய முதலமைச்சர் எம்.பக்தவத்சலத்தை மாணவப் பிரதிநிதிகள் சந்திக்க முயன்றும் முடியவில்லை மாணவர்களின் போராட்டத்தை அவமதித்துப் பேட்டியளித்தார் முதலமைச்சர். மாணவர்களின் கிளர்ச்சியை அரசால் அடக்க முடியவில்லை தி.மு.க.வினர் மாணவர்களைத் தூண்டிவிடுவதாக காவல்துறை அமைச்சர் கக்கன் கூறினார். அதனால், தி.மு.க.வினர் மீதும் அடக்குமுறை பாய்ந்தது. அண்ணா, மாணவர்களை அமைதியாக இருக்குமாறு பலமுறை அறிக்கைகளை விட்டார். ஆனாலும் மாணவர்கள் போராட்டத்தை நிறுத்தவில்லை தொடர்ந்து அண்ணா வலியுறுத்திய பின்னரே போராட்டத்தைக் கைவிட்டனர் மாணவர்கள். உண்மை இவ்வாறிருக்க காவல்துறையின் அன்றைய அமைச்சர் கக்கனின் தவறான கூற்றைக் கண்டிக்கின்றது முரசொலி.

படம் - 107

- முரசொலி
10.10.1966

1967 ஆம் ஆண்டு தேர்தல் நெருங்கும் நேரம்; தோல்விபயத்தில் இருந்த காங்கிரசு வார்த்தைகளில் வேகம் காட்டியது.

படம் -

எவ்வளவுதான் காமராசர் பெரிய பதவி பெற்றாலும்—உலகம் சுற்றினாலும் தமிழக அரசியலில் தி மு.க. பெற்ற செல்வாக்கு காரணமாக — இங்கு வந்ததும் என்னைத் தான் சுற்றுகிறார் என தூத்துக்குடியில் பேசியபோது அண்ணா குறிப்பிட்டார்கள்.

- முரசொலி
30.10.1966

படம் - 109

தனக்குப்பின்னர் வருவோரை ரயிலில் ஏறவிடாது தடுக்கும் மூன்றும் வகுப்புப் பயணிகள் போல். எதிர்க்கட்சிகள் ஆட்சிக்கு வருவதை அனுமதியோம் எனக் காங்கிரசார் கூறுகின்றனர் என்று அறிஞர் அண்ணா கூறினர்.

- முரசொலி
7.12.1966

படம் -110

தலைமகனுக்கு புகழ் மகுடம்

- முரசொலி
24.2.1967

முதல்வர் அண்ணாவுக்கு தமிழன்னை முடிசூட்டுகின்றாள் 1967 ஆம் ஆண்டு தேர்தல் வெற்றியைக் கொண்டாடுகின்றது முரசொலி.

படம் - 111

சர்க்காரே சுழல்கிற விளக்காய் மாறி ஒளி வீசும்! சமூக விரோதிகள் எந்த இருட் குகையில் இருந்தாலும் வெளிக்குக் கொண்டுவருவோம்! —அண்ணா

- நம்நாடு
4.5.1967

படம் - 112



- முரசொலி
5.7.1967

அண்ணா தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின், தமிழக வளர்ச்சித்திட்டங்கள் பல, மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டன. சேலத்தில் இரும்புச் சுரங்கமும் உருக்காலையும் அமைப்பதற்கு காங்கிரஸ் அமைச்சரவையில் தொழில் அமைச்சராக இருந்த ஆர்.வெங்கட்ராமன் உள்ளிட்டோர் எடுத்துக்கூறியும் மத்திய அரசு அத்திட்டத்தைப் புறக்கணித்துவிட்டது. எனவே, மத்திய அரசுக்கு தமிழகத்தின் உணர்வுகளை உணர்த்தும் பொருட்டு 23.7.1967 அன்று தமிழகம் எங்கும் "சேலம் எழுச்சி நாள்" கொண்டாடப்பட வேண்டும் என்று அண்ணா அறிவித்தார்.

படம் - 113

- முரசொலி
12.7.1967

படம் - 114

எழுச்சி நாளன்று காங்கிரசார் வீட்டினுள் தூங்கவேண்டும் என்றார் காமராசர். —செய்தி

- முரசொலி
16.7.1967

படம் -115



- முரசொலி
20.7.1967

18.7.1967 அன்று "மெட்ராஸ் ஸ்டேட்" என்று அழைக்கப்பட்ட சென்னை மாகாணத்திற்குத் "தமிழ்நாடு" என்று அண்ணா பெயரிட்டார். "தமிழ்நாடு என்று தமிழில் அழைக்கப்பட்டாலும் வெளியில் மெட்ராஸ் ஸ்டேட் என்று இருக்கட்டும்" என்ற கருத்தை காங்கிரசில் ஒரு பிரிவினர் கொண்டிருந்தனர்.

படம் - 116



- முரசொலி
28.7.1967

தி.மு.கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள்முதலாக அண்ணா, காந்தியின் பிம்பமாகவே சித்தரிக்கப்பட்டார். “தென்னாட்டுக் காந்தி” என்னும் அடைமொழி அவருக்கு ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்தவுடன் காந்தியின் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவராகக் காட்டப்படுகின்றார்.

படம் - 117

ஊரைஅடித்து உலையில் போடுவோர்

- நவசக்தி
9.2.1968

இந்தித்திணிப்பை எதிர்த்துத் தமிழ்மொழிக்காகப் போராடியதால் தி.மு.க. பெற்ற வளர்ச்சியைப் பொறுக்க இயலாத நவசக்தி வரைந்த சித்திரம் இது. பல முனைகளிலிருந்தும் கிளர்ந்தெழுந்த மொழிப்போரின் அடிப்படை நியாயங்களைக் கூட உணரத்தவறிய தேசியவாதிகள், தி.மு.க. பெற்ற செல்வாக்கின் மீது பொறாமை கொண்டனர்.

படம் - 118

மொழிப் பிரச்னைபற்றி தலைவர் காமராஜுடன் பேசவிருப்பதாக முதல் மந்திரி அண்ணாதுரை அறிவித்திருக்கிறார்.

- நவசக்தி
24.2.1968

காமராசரை, முதலமைச்சர் அண்ணா 23.2.1968 அன்றே அவரது இல்லத்தில் சந்தித்து விட்டார். இந்தச் சித்திரம் மறுநாள் நவசக்தியில் வெளிவந்தது. அதாவது, 23.2.1968 அன்று காமராசரும் அண்ணாவும் சந்திப்பதாக செய்தி வெளியானவுடன் சித்திரம் வரையப்பட்டு விட்டது. தமிழகத்தில் இன்று அரிதாகிப் போன எதிரெதிர் கட்சிகளுக்கு இடையேயான “உரையாடல்” அன்று அரசியல் நாகரிகத்துடன் அண்ணா அவர்களால் செயல்படுத்தப்பட்டது.

படம் - 119



"முந்திய சர்க்கார் எதையும் செய்யவில்லை என்று நான் சொல்லவில்லை"—சட்டசபையில் முதன்மந்திரி அண்ணாதுரை.

- நவசக்தி
8.3.1968

படம் - 120



சென்னை, கோவைக்கு மட்டுமே படியரிசித் திட்டம்-கிராமவாசி களுக்கு?
—குமுறல்தான் கிடைத்த பலன்.

- நவசக்தி
12.3.1968

படியரிசி திட்டம் முதலில் சென்னைக்கும் கோவைக்கும் மட்டுமே அமுல்படுத்தப்பட்டது. அதற்குள் முந்திக்கொண்டு கிராமவாசிகளுக்கு அத்திட்டம் கிடையாதா என்று அரசியல் செய்கின்றது நவசக்தி.

படம் - 121

தமிழக அரசு சொல்லுவது வேறு, செய்வது வேறாக இருக்கிறது.

- நவசக்தி
13.3.1968

படம் - 122

- நவசக்தி
15.3.1968

அண்ணாவின் படிஅரிசி திட்டத்தைக் கிண்டலடிக்கின்றது இந்தக் கேலிச்சித்திரம். ஆனந்தவிகடன் வெளியிட்ட இந்தச் சித்திரத்தை மீள்பிரசுரம் செய்துள்ளது நவசக்தி.

படம் - 123

- நவசக்தி
18.3.1968

மொழிப்பிரச்சனையில் ஒருமித்த கருத்து ஏற்படுவதற்காக 23.2.1968 அன்று காமராசரை முதலமைச்சர் அண்ணா சந்தித்துப் பேசினார். மாணவர்கள் அப்பேச்சு தொடர்ந்து நடக்க வேண்டும் என்று விரும்புவதாகவும், இராஜாஜி அதற்குத் தடையாக இருப்பதாகவும் கூறுகின்றது இந்தக் கேலிச்சித்திரம். தி.மு.க. கூட்டணியில் சிண்டு முடியும் வேலையை நாசூக்காக மேற்கொள்கின்றது நவசக்தி.

படம் - 124

அண்ணாதுரை அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்.

- நவசக்தி
20.3.1968

படம் - 125

தி. மு. கழகத்தின் தலைமை நட்சத்திரமான அண்ணாதுரை வெளி நாட்டாரின்முன் ஆடுவதற்கு, ''சீவி முடித்து சிங்காரித்து''க்கொண்டு கிளம்பியிருக்கிறார்.

- நவசக்தி
16.4.1968

படம் - 126



- நவசக்தி
17.4.1968

மொழிக்கொள்கை, மத்திய நிதியத்திலிருந்து பெறும் பங்கீடு, மாநில சுயாட்சி என்பன போன்ற தி.மு.க. அரசின் முன்னெடுப்புகளை விமர்சித்து ஆனந்தவிகடன் வரைந்த கேலிச்சித்திரம் இது. பிரிவினையைக் கைவிட்டு, தேர்தலின் மூலம் ஆட்சியைப் பிடித்த பின்பும், தி.மு.க.வை இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானவர்களாகவே பார்க்கும் பார்ப்பனப் பார்வையின் வெளிப்பாடு இது. ஆனந்தவிகடன் வெளியிட்ட இந்தச் சித்திரத்தை மீள்பிரசுரம் செய்துள்ளது நவசக்தி.

படம் - 127

- நவசக்தி
18.4.1968

"நான் வரும்வரை ஒழுங்காக இருங்கள்!"

படம் - 128

- முரசொலி
5.5.1968

காங்கிரஸ் கட்சியை விமர்சித்த அண்ணா, காந்தியை விமர்சிக்கவில்லை. தி.மு.கழகத்தினர் அண்ணாவையே 'தென்னாட்டுக் காந்தி' என்றனர். காந்தியின் மறுபதிப்பாகவே அண்ணா விளங்குவதாக தி.மு.கழக ஏடுகள் அவரைச் சித்தரித்தன. காந்தி கண்ட கனவுகளை முதலமைச்சர் அண்ணா நிறைவேற்றுவதாகக் கூறும் சித்திரம் இது. "சுயராஜ்யா" இதழில் வெளியான இந்தச் சித்திரம் முரசொலியில் மீள்பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. "காந்தியச் சுடர் ஏற்கும் அண்ணன்" என்னும் தலைப்பு முரசொலியால் இடப்பட்டதாகும்.

படம் - 129



- நவசக்தி
1.6.1968

படம் - 130

குதிரையைத் தண்ணீர் இருக்குமிடத்துக்கு ஒருவரால் இழுத்துச் செல்ல முடியும். ஆனால் அதைத்தண்ணீர் குடிக்கவைக்க யாரால் முடியும்?

- நவசக்தி
17.6.1968

தி.மு.க ஆட்சிக்கு வந்தவுடன் அண்ணா, தமிழைப் பயிற்சிமொழி ஆக்கினார். அத்திட்டத்தை வலுவிலக்கச் செய்ய மாணவர்கள் தமிழ்ப் பயிற்றுமொழி ஆனதை விரும்பவில்லை என்று கூறுகின்றது. மொழிக்கொள்கையில் இன்றளவும் தெளிவு பெறாத தேசியநோயின் வெளிப்பாடு இந்தக் கேலிச்சித்திரம்.

படம் - 131



- நவசக்தி
27.6.1968

தி.மு.க. அரசு அமைந்தபின், தமிழகப் பொருளாதாரம் கருகிவிட்டதாக ஆட்சி பறிபோன அவஸ்தையில் கூறுகின்றது காங்கிரஸ் கட்சியின் நவசக்தி.

படம் - 132

ரயில் ஓட மேலும் ஒரு தடை

- நவசக்தி
18.7.1968

1968இல் கம்யூனிஸ்ட்டுகள் தி.மு.க. கூட்டணியில் இருந்தனர் அவர்கள் தமிழகத் தொழில் வளர்ச்சிக்கு எதிராக இருப்பார்கள் என்று கூட்டணியில் குழப்பத்தை விளைவிக்க முயலுகின்றது நவசக்தி.

படம் - 133

நவீன கடவுள்கள்?

- நவசக்தி
24.7.1968

முதலமைச்சர் அண்ணாவையும், அவருடைய அமைச்சர்களையும் கூட்டணி கட்சியினர் தொழுது வழிபடுவதாகக் கூறுகின்றது நவசக்தி. அண்ணா புற்றுநோயால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அவருடைய படத்திற்கு மாலையிட்டு தன் பண்பாட்டைப் பறைசாற்றுகின்றது காங்கிரஸ் கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான நவசக்தி. இந்தக் கேலிச்சித்திரம் வெளியான நாளிலிருந்து சரியாக ஐந்து மாதம் கழித்து அண்ணா மரணமடைந்தார். அப்போது, நவசக்தியின் கௌரவ ஆசிரியர் ஈ.வெ.கி. சம்பத்.

படம் - 134

தூண்டிலில் சிக்குமா மீன் ?

- நவசக்தி
25.7.1968

படம் - 135

- நவசக்தி
30.7.1968

1968இல் தி.மு.க.வுடன் கம்யூனிஸ்ட்டும், முஸ்லீம்லீக்கும் கூட்டணியில் இருந்தனர். கூட்டணியில் குழப்பம் இருப்பதாகக் குட்டையைக் குழப்பிவிடும் நவசக்தியின் கேலிச்சித்திரம்.

படம் - 136

மத்தளத்துக்கு இருபக்கமும் இடி

- நவசக்தி
7.8.1968

அண்ணா முதல்வர் ஆனவுடன் இந்திய அரசின் மதச்சார்பின்மையைக் காப்பதற்கு அரசு அலுவலகங்களில் உள்ள கடவுளர் படங்களை அகற்ற உத்தரவிட்டார். கூட்டணியில் இருந்த இராஜாஜி அந்த உத்தரவை எதிர்த்தார். ஆனால், பெரியாரோ அதனை ஆதரித்தார்.

படம் - 137

இந்த உத்தரவு சேர வேண்டிய இடம்--குப்பைத் தொட்டி தான்!

- நவசக்தி
14.8.1968

முதலமைச்சர் அண்ணா, அரசு அலுவலகங்களில் வைக்கப்பட்டிருந்த கடவுளர் படங்களை அகற்ற உத்தரவிட்ட ஆணைக்கு எதிராக, அரசு அலுவலர்களைத் தூண்டிவிட முயலுகின்றது நவசக்தி.

படம் - 138

- நவசக்தி
4.9.1968

மரியாதை நிமித்தமாக முதலமைச்சர் அண்ணா கூறிய அவையடக்கமானச் சொற்றொடர் ஒன்றை, அவருக்கும் தி.மு.க.வுக்கும் எதிராகத் திருப்பும் நவசக்தியின் காமாலைப் பார்வை இது. ஒளிவட்டத்துடன் விஸ்வரூபமான இராஜாஜியின் முன்பு சின்னஞ்சிறிய குள்ள அண்ணா நிற்பதாகக் காட்டுகின்றது இந்தக் கேலிச்சித்திரம். அதிகாரம் கை மாறிய பின்னும் தங்களுக்குத் தகுதியான, சமமான, நிகரான எதிராளியைக் கட்டமைக்க முயலுகின்றது காங்கிரஸ் கட்சி. அன்னை இந்திராவின் அருளால் பார்ப்பனக் கூட்டம் காங்கிரஸ் கூடாரத்தைக் காலிசெய்து தேசியவாத "இந்துத்துவ" பி.ஜே.பியைச் சென்றடைந்தது பிந்தைய வரலாறு.

படம் - 139

இரு மொழித் தீர்மானத்தை நிறைவேற்றியதன்மூலம் தமிழக அரசு தமிழகத்தில் இந்தியை ஒழித்துள்ளது. ஆனாலும் இங்குள்ள ஒரு சில காங்கிரஸ் 'இந்திப் பிரியர்களை'ப் பயன்படுத்தி மத்திய அரசு மீண்டும் தமிழகத்தில் இந்தியைத் திணித்திடத் தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

- முரசொலி
5.9.1968

அண்ணா முதல்வர் ஆனவுடன், தமிழக அரசு இருமொழிக் கொள்கையைக் கடைப்பிடிப்பதாக அறிவித்தார். இதனால், தமிழகத்தில் இந்தித் திணிப்பிற்கு முடிவு கட்டப்பட்டது.

படம் - 140

கிளியின் ஓலம்



- நவசக்தி
5.9.1968

அண்ணா முதலமைச்சர் ஆனவுடன் மத்திய, மாநில உறவுகள் பற்றிய விமர்சனங்களை முன் வைத்தார். அதை இவ்வாறு விமர்சிக்கின்றது நவசக்தி.

படம் - 141

கற்பனை உலகில்

- நவசக்தி
9.9.1968

தி.மு.க. ஆட்சியைப் பிடித்தாலும் சுதந்திரா, தி.மு.க.உறவு பலமிக்கதாகவே இருந்து வந்தது. ஒருவரை ஒருவர் சார்ந்து நின்று, எந்தத் தேர்தலிலும் காங்கிரசை வெற்றி பெற செய்துவிடக்கூடாது என்னும் கற்பனையுலகில் அண்ணாவும், இராஜாஜியும் இருக்கின்றனர். எனினும்,எதிர்காலத்தில் காங்கிரஸ் ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புகள் உண்டு என்று ஆரூடம் கூறுகின்றது நவசக்தி. 1967 பொதுத்தேர்தல் வெற்றியில் இராஜாஜியின் பங்களிப்பை முன்னிலைப்படுத்தி தி.மு.க.வைச் சிறுமைப்படுத்த முயலுகின்றது இந்தக் கேலிச்சித்திரம்.

படம் - 142



- நவசக்தி
15.12.1968

தி.மு.க. அரசின் திட்டங்களை மத்திய அரசு புறக்கணித்த நிலையில், மாநிலத்திற்குத் தேவையான நிதியைத் திரட்ட லாட்டரி சீட்டை அறிமுகப்படுத்தினார் அண்ணா. மாநிலங்கள் லாட்டரி சீட்டு நடத்தி நிதி திரட்டுவதற்கு அரசியல் சாசனம் அதிகாரம் அளிக்கவில்லை என்று இராஜாஜி அத்திட்டத்தைக் கண்டித்தார். ஆனந்தவிகடன் வெளியிட்ட இந்தக் கேலிச்சித்திரத்தை நவசக்தி மீள்பிரசுரம் செய்துள்ளது.



பிப்ரவரி 3, 1969
அண்ணா மறைந்தார்

படம் - 143

தாயின் கண்ணீர்

தமிழ்த்தாயின் தலைமகன் என்று போற்றப்பட்ட அண்ணாதுரை மறைந்தார்.

- மாலைமுரசு (கோவை பதிப்பு)
6.2.1969

படம் - 144

அமரர் ஆனார்

இது வரை நம்மிடையே வாழ்ந்த அண்ணா மறைந்து விட்டார்!

- மாலைமுரசு (கோவை பதிப்பு)
8.2.1969

காந்தி எவ்வாறு இந்திய விடுதலைப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தினாரோ அதுபோன்று திராவிடநாட்டு விடுதலைப் போராட்டத்தை அண்ணா தலைமையேற்று நடத்தியதால் தென்னாட்டுக் காந்தியாகவே, திராவிட இயக்க இதழ்களால் கருதப்பட்டார். இந்தத் தொன்மம் பின்னாளில் வளர்ந்து காந்தியின் அரசியல் வாரிசாக அண்ணாவை உருமாற்றியது.

படம் - 145

இதயத்தில் அண்ணா

அறிஞர் அண்ணா இந்த மண்ணில் இருந்து மறைந்து விட்டாலும் தமிழர்களின் மனதில் ருந்து மறைய வில்லை!

09.02.1969

- மாலைமுரசு (கோவை பதிப்பு)

சொற்கோவைகள், சித்திரங்களாக மாறும் என்பதற்கு எடுத்துக்காட்டு இந்தச் சித்திரம். "அண்ணா ஓர் இதயக்கனி" என்னும் சொற்கோவை தமிழர்களின் இதயங்களில் அண்ணா வாழ்வதாக மாற்றப்பட்டுள்ளது.

படம் - 146



- முரசொலி
பொங்கல் மலர் 1965

படம் - 147

தலைவர்கள் பார்வையில் அண்ணா!
அற்புதம் சூழ் மாலுமி அண்ணா
திரு.வி.க.
இவரே நாவலர்!
நாவலர் சோமசுந்தர பாரதியார்
தமிழ்க்குலம்
மிகச்சிறந்த அறிவாளி - மிகச்சிறந்த
பேச்சாளி! _ மகாகனம் சாஸ்திரியார்
மதி நலம் வாய்ந்த மருத்துவர்
- ரா.பி. சேதுப்பிள்ளை


இதோ ஒரு பெர்ணாட்ஷா
கல்கி
அண்ணாவின் தமிழைக் கற்கும்,
மாணவர்களில் ஒருவன் நான்!
—முன்னாள் சபாநாயகர் யு.கிருஷ்ணாராவ்
அண்ணா என்ற வார்த்தைக்கு ஒரு
மந்திர சக்தி உண்டு
—என்.எஸ்.கே
அண்ணாவை வாலிபர்கள் ம
வர்கள் விரும்பிச் சேர்ந்தன
—ஜீவானந்த


பக்தவத்சலம்
பார்வையில்...
(முன்பு)
அண்ணாவின்
புகழ்
அண்ணாவின் புகழ் அவரது
வயதுக்கு மேற்பட்டது!
ராசாசர் பார்வையில அண்ணா!
சமூகத் தொண்டர்
காயிதே மில்லத் பார்வையில்...
மக்கள் இதயத்தில் வீற்றிருப்ப
வர்
மபொ.சி. பார்வையில்...
தி.மு.க.
அரசியல் போட்டியில்
கழகத்திற்கு வெற்றித்
தந்தவர்

பெரியார் பார்வையில்...
என் பெட்டிச் சாவியைப் பெறத் தக்கவர்
இலங்கைப் பெரியார் பார்வையில்...
தமிழர் நல் வாழ்வு
தமிழரை தமிழராக்கிய வழிகாட்டி -செல்வநாயகம்
சிங்கப்பூர் பிரதமர் லிகுவான்யூ பார்வையில்...
திராவிடத் தலைவர்
ரங்கா பார்வையில்...
தமிழ்ச் சமுதாயம்
சமுதாயச் சிற்பி



- முரசொலி

அண்ணாமலர் 1966

படம் - 148



நீண்ட நெடுங் காலமாக கழகத்துக்குள் குழப்பம் விளைவித்து வந்த குழப்ப வாதிகள் 1961 ம் ஆண்டு தங்கள் சுய ரூபத்தைக் காட்டி கழக ஒற்றுமை யெனும் அருஞ் செல்வத்தை அழிக்கப் பார்த்தனர்.

பகிரங்கமாக அண்ணா அவர்கள் மீது பழியை வீசி தங்களுக்கு பலம் சேர்க்க முயன்றனர்.

ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் தமது பெருந்தன் மையால் அந்தப் பழியை யும் பாமாலையாக மாற்றிக் கொண்டார்.

தாங்கள் முயற்சி தோல் வடைந்ததைக் கண்ட குழப்ப வாதிகள் கழகத்தை விட்டு வெளியேறினர். சில காலம் தனிக்கட்சி நடத்தி னர். பின்னர் காங்கிரஸ் பாதாளத்தில் வீழ்ந்தனர். (தொடரும்)

- முரசொலி 10.4.1968

தமிழ் நாளிதழ்களில் சித்திரக் கதைகளைத் தொடராக வெளியிடும் மரபு முன்பு இருந்தது. தினமலர் வெளியிட்ட டார்ஜான், தினமணி வெளியிட்ட மந்திரவாதி மாண்ட்ரேக், தினந்தந்தியில் இன்றும் வெளிவந்து கொண்டிருக்கும் கன்னித்தீவு முதலிய சித்திரக்கதைத் தொடர்கள் புகழ் பெற்றவை. பகுத்தறிவற்ற கதைகளை சித்திரத்தொடராக வெளியிடும் இப்போக்கை முரசொலி மாற்றி அமைத்தது. தி.மு.கழகத்தின் வரலாற்றை சித்திரக்கதைத் தொடராக 1968இல் முரசொலி வெளியிட்டது. 1968 ஆம் ஆண்டு முரசொலி இதழ்கள் முழுமையாகக் கிட்டாததால் இத்தொடர் தொடங்கிய நாளையும், முடிவடைந்த நாளையும் அறிய முடியவில்லை.

தி.மு. கழக வரலாறு 41



1962 மார்ச் 4-ம் நாள் சென்னையில் கழக எம். எல். ஏ.க்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டது.

ஜீப் காரில் அண்ணன் வலம் வந்தார்.

தங்கள் தலைவனுக்கு மக்கள் பூமாரி பொழிந்தனர்.

(தொடரும்)

- முரசொலி
24.4.1968

தி.மு. கழக வரலாறு 44

1962 ல் டில்லி மாநிலங்களவைக்கு அண்ணா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சட்டமன்ற மேலவைக்கு புரட்சி நடிகர் எம் ஜி. ஆரும் முஸ்லிம் லீக் சார்பில் ஜானிபாட்சாவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

டில்லிப் பட்டினம் அண்ணாவை வியப்புடன் வரவேற்றது.

அண்ணா டில்லியில் முதல் முழக்கம் செய்தார்.

(தொடரும்)

- முரசொலி
29.4.1968

தி.மு. கழக வரலாறு 75

1962-ஆம் ஆண்டு வேலூர் சிறையிலிருந்து வெளிவந்த அண்ணா அவர்கள் — தியாகி கோ.சு. மணியின் கல்லறைக்கு மரியாதை செலுத்தினார்.

பின்னர், மணியின் இல்லம் சென்று ஆறுதல் கூறினார். தலைவனின் தன்மை கண்டு தொண்டர் உலகம் புளகாங்கிதம் அடைந்தது.



அறிஞர் அண்ணா அவர்கள் பின்னர் திருச்சி நோக்கிப் புறப்பட்டார்.



திருச்சியில் அக்டோபர் 26ம் நாள் மத்திய சிறைக்கு எதிராக மக்கள் கூட்டம் நிரம்பியிருந்தது. அன்றுதான் கலைஞர் விடுதலையாகும் நாள்!

(தொடரும்)

- முரசொலி
1.6.1968



தி. மு. கழகத்தைக் கொடுமைப் படுத்திய அரசு என்பதனை மறந்து மன்னித்து அண்ணா அவர்களும். கழக முன்னணியினரும் வானொலியில் பேசினர்.



தி. மு, கழகத்தோழர்கள் சீன—இந்தியப் போருக்கு நன்கொடை-ரத்ததானம் தந்தனர்.



டிசம்பர் இரண்டாம் தேதி எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் தி. மு. கழகத்தின் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. போர் நிதியாக 35 ஆயிரம் வசூலானது.

புரட்சி நடிகர் தனக்கு அளிக்கப் பட்ட தங்க வாளை போர் நிதிக்கு அண்ணாவிடம் தந்தார்.

(தொடரும்)

- முரசொலி
7.6.1968

தி.மு கழக வரலாறு 79

தி. மு. கழகம் போர் நிதியாக வசூல் செய்த பணத்தையும், நகைகளையும் முதலமைச்சர் காமராசரிடம் நாவலர் தந்தார்.



உள்நாட்டில் சீன ஆக்கிரமிப்பு தொடர்பாக சந்தேகத்துக்குரியவர்களைக் கைது செய்தது அரசு.

அதிலும்கூட காங்கிரசுக்கு வேண்டியவர் வேண்டாதவர் எனப் பார்த்துக் கைது செய்தது அரசு.

தி. மு. கழகமோ நாடெங்கும் போர்நிதி கூட்டம் நடத்தி அரசுக்கு ஆதரவாக இருந்தது. (தொடரும்)

- முரசொலி
8.6.1968

தி.மு கழக வரலாறு 81



பக்தவத்சலம் தவறான முறைகளைப் பயன்படுத்தி தேர்தலில் வெற்றி பெற்றார் என்று வழக்குத் தொடர்ந்தார் சி. வி. எம். அண்ணாமலை, இறுதியில் வழக்குத் தோற்றார்.

நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி டில்லி அரசு இந்தித் திணிப்பைத் தீவிரப் படுத்தியது.



அதை எதிர்த்து மாநிலங்கள் அவையில் அண்ணா குரல கொடுத்தார்.

இந்தித் திணிப்பை எதிர்த்து தமிழக மெங்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.
[தொடரும்]

- முரசொலி
10.6.1968

தி.மு. கழக வரலாறு 84



நேரு இந்தி வெறியர்கட்குப் பணிந்தது கண்டு தென்னகம் கொதித்தெழுந்தது.

சென்னையில் ஒரே மேடையில் அண்ணா ராஜாஜி காயிதேமில்லத் தோன்றி இந்தித் திணிப்பைக் கண்டித்தனர்.



ஆனால்பக்தவத்சலம் இந்தித் திணிப்பை ஆதரித்தார்.



டில்லியில் இந்திக்கு எதிராக அண்ணா போர்ப்பிரகடனம் செய்தார்.

(தொடரும்)

- முரசொலி
14.6.1968

தி.மு. கழக வரலாறு 85

1963-ல் இந்திக்கு எதிராகப் போராட்டம் நடத்த வேண்டாமென்று கெஞ்சிக் கேட்பதாக லால்பகதூர் டில்லியில் கூறினார்.



இப்பிரச்சினையில் யுத்தம் நடக்கத்தான் வேண்டுமென்று ராஜாஜி மதுரையில் கூறினார்.

இந்தியை ஆதரித்து 1963-மே 21-ம் தேதி காங்கிரஸ் கூட்டிய பொதுக் கூட்டத்தில் மக்கள் கலந்து கொள்ளவில்லை.



பங்களூரில் இந்தியை எதிர்க்கும் நிபுணர்கள் கூட்டம் நடந்தது. டில்லிக்கு கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. (தொடரும்)

- முரசொலி
15.6.1968

தி.மு.
கழக
வரலாறு
86

இந்திக்குள்ள எதிர்ப்பைப் புரிந்து கொண்டு காமராசர் 1963 மே மாதம் நடந்த கடற்கரைக் கூட்டத்தில் 'இந்தியில் அறிக்கை வந்தால் கிழித்தெறிவேன்' என்றார்.

டில்லி எஜமானர்கள்காமராசரைமிரட்டிக் கேட்டதும் 'நான் அப்படிச் சொல்லவில்லை' என்றார்.

1963 ஜூனில் தி, மு, கழகப் பொதுக் குழு கூடியது. கழகத்தை அழித்து இந்தியைத் திணிக்க டில்லி முனைவதைப் பற்றி ஆராய்ந்தது.

கழகம் இயங்கி இந்தியை எதிர்ப்பதா வேண்டாமா என்பதுபற்றி அண்ணாவிடம் தோழர்கள் கருத்தறிவித்தனர்.

(தொடரும்)

- முரசொலி
16.6.1968

தி.மு. கழக வரலாறு 87

1963 ஜூன் 10ம் தேதி சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் நடந்தகூட்டத்தில் அண்ணா இந்தி எதிர்ப்புப் போர் பற்றி அறிவித்தார்.

கலைஞர் கருணாநிதி தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு அமைக்கப்பட்டது.

தடைச் சட்டத்தால் தி. மு, கழகம் அழியாமல் இந்தியை எதிர்த்துப் போராடும் வகைகாண செழியன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

தி. மு. கழகத்தின் நேரடி நடவடிக்கையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சென்னை வந்தபோது நேரு கூறினார். (தொடரும்)

- முரசொலி
17.6.1968

திருவண்ணாமலையில் தேர்தல் போர் தொடங்கியது.

காங்கிரசுக்கு ஆதரவாக கம்யூனிஸ்டு கள், த. தே. க. மற்றும் எதிர்க்கட்சிகள் சேர்ந்துகொண்டன.

கழகத் தோழர்களைக் கைது செய்தது போலீஸ். கழகத் தொண்டர்கள் தாக்கப் பட்டு படுகாயம் அடைந்தனர்,

எனினும் இறுதியில் கழகச் சார்பில் ப. உ. சண்முகம் மகத்தான வெற்றி பெற்றார். (தொடரும்)

- முரசொலி
18.6.1968

தி.மு. கழக வரலாறு 89

திருவண்ணாமலையில் தி. மு. கழகம் அடைந்த வெற்றி கண்டு கலங்கியது காங்கிரஸ்.

காமராசர் முதலமைச்சர் பதவியிலிருந்து இறங்கி—கட்சிப்பணி புரியப் போவதாகக் கூறினர்.

அந்த முதலமைச்சர் பீடத்தில் பக்தவத்சலம் அமர்த்தப்பட்டார்,

1963 ஆகஸ்ட் 25-ம் தேதி தஞ்சையில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூடியது மாபெரும் ஊர்வலமும் நடை பெற்றது. (தொடரும்)

- முரசொலி
19.6.1968

தி.மு. கழக வரலாறு 91



டில்லி மாநிலங்களவையில், சென்னை அரசு என்றிருப்பதை மாற்றி 'தமிழ் நாடு' என்று பெயரிடக் கோரிவந்த தீர்மானத்தை அண்ணா ஆதரித்துப் பேசினார்,

அங்கிருந்த தமிழ் நாடு காங்கிரஸ் உறுப்பினர்கள் தமிழ் நாடு' எனப் பெயர் வைக்கக் கூடாது என்று வாதிட்டனர்,

இறுதியில் காங்கிரஸ் காரர்கள் அந்தத் தீர்மானத்தைத் தோற்கடித்தனர்.

சபையில் தீர்மானத்தைத் தோற்கடித்துவிட்டாலும் தமிழகத்தில் காங்கிரஸ் தலைநிமிர முடியாத நிலை ஏற்பட்டது,

[தொடரும்]

- முரசொலி
20.6.1968

தி.மு. கழக வரலாறு 92

1963 செப்டம்பர் 15-ம் நாள் நாடெங்கும் அண்ணா பிறந்தநாள் இந்தி எதிர்ப்பு நாளாகக் கொண்டாடப்பட்டது.

நெல்லை, மதுரை, முகவை முதலிய தென் மாநிலங்கள் பங்கு கொண்ட இந்தி எதிர்ப்பு மாநாடு நெல்லையில் செப்டம்பர் 22-ம் நாள் நடைபெற்றது.

அந்த மாநாட்டில் பேசிய அண்ணா அவர்கள் 'இந்திப் பிரச்னை தீர போராட்டம் தவிர வேறு வழி இல்லை' என்று முரசறைந்தார்.

தி.மு. கழகத்தின் இத்தகைய போர் முழக்கம் கண்டு நடுங்கிய காங்கிரஸ் தலைமை பீடம் சதியாலோசனை நடத்தியது. (தொடரும்)

- முரசொலி
22.06.1968

தி.மு. கழக வரலாறு 94

மாநாட்டை யொட்டி நடந்த பொதுக் குழுவில் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழுத்தலைவர் கருணாநிதி அண்ணாவிடம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மாநாட்டில் அண்ணா அவர்கள் நீடித்த போராட்டம் நடத்துவது பற்றிய திட்டத்தை வெளியிட்டார்.

1963-ம் வருடம் தொடங்கி 1965 வரை நடைபெறும் அந்தப் போராட்ட அறிவிப்பைக் கண்டு உள்ளூரப் பயந்த பக்தவத்சலம் 'நான் பயப்பட மாட்டேன்' என்றார்.



டில்லி ஆதிக்கத்திற் கெதிரான போராட்டமே இது—என்று அறிவித்தார் அண்ணா. (தொடரும்)

- முரசொலி
24.6.1968

ட்ராட்ஸ்கி மருது

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் ஓவியர் ட்ராட்ஸ்கி மருது தெளிந்த அரசியல், கலை பண்பாட்டுப் பின்னணி கொண்ட குடும்பத்தைச் சார்ந்தவர். வந்தவர். எழுபதுகள் முதல் பல கண்காட்சிகளில் இவருடைய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. ஓவியம் மட்டுமின்றி நவீன நாடகம், திரைப்படம், அனிமேஷன் முதலிய துறைகளிலும் தமிழ்நாட்டில் விரிவான பங்களிப்பைச் செய்தவர். நவீன ஓவிய வளர்ச்சியின் போக்கோடு வெகுசன ஊடகங்களிலும் தொடர்ந்து பரிட்சார்த்தமாகச் செயல்பட்டு வெகுசன மக்களிடம் நவீன ஓவியத்தைக் கொண்டுசென்றவர், தமிழ் அடையாளத்தையும் தொன்மங்களின் தன்மைகளையும் காண்பியல் மொழியில் மீண்டும் மறு அறிமுகம் செய்ய ஓவியர் ஆதிமூலத்துடன் தொடர்ந்து இயங்கியவர். கணினி அறிமுகமானவுடனே அதன் பயன்பாட்டை அறிந்து காண்பியக்கலை வெளிப்பாட்டிற்கு அதைத் தென்னிந்தியாவிலேயே முதன்முதலாகப் பயன்படுத்திய பெருமைக்குரியவர்.

திரைப்படங்கள் பலவற்றுக்கு ஆர்ட் டைரக்டராகவும் கணினி தந்திரக் காட்சிகளைக் கொண்ட திரைப்படங்களுக்கு ஸ்பெஷல் எபெக்ட் டைரக்டராகவும் பணியாற்றியுள்ளார். இளம் கலைஞர்களை அனிமேஷன் துறையில் ஊக்கப்படுத்தி வளர்த்தவர். குழந்தைகளுக்காக இவர் வரைந்த ஓவியங்கள் அடங்கிய, 'Line and circle', 'Look the moon' என்னும் புத்தகங்கள் 24 உலக மொழிகளில் வெளிவந்துள்ளன. உலகக் காண்பியல் தளத்திற்குள், தமிழ் அடையாளத்தை முதன்மையாகப் பதிவுசெய்தவர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. "கோடுகளும் வார்த்தைகளும்" என்னும் இவருடைய கட்டுரைத் தொகுப்பு சமீபத்தில் நூலாக வெளிவந்துள்ளது.

வீ.எம்.எஸ். சுபகுணராஜன்

மதுரையை மையமாகக் கொண்டு செயல்பட்ட கலை இலக்கிய, நாடக அமைப்புகளின் செயல்பாடுகளில் முனைப்புடன் செயல்பட்டவர். குறிப்பாக எண்பதுகளின் நடுவில் மதுரையில் அரங்கேறிய நாடக விழாக்களின் பின்புலமாகச் செயல்பட்டவர். நாடக, திரைப்பட நடிகர். இயக்குநர். 'திராவிடம்' குறித்த மீள்பார்வையை முன்மொழிந்து தொண்ணூறுகளின் நடுவில் மதுரையில் நடந்த 'திராவிடக் கருத்தியலும் அதன் பொருத்தப்பாடும்' என்னும் தலைப்பில் மூன்று நாள் கருத்தரங்கைப் கா.சிவத்தம்பி அவர்களின் தலைமையில் பேரா. அ. மார்க்ஸ், பேரா.தொ. பரமசிவம் ஆகியோரோடு இணைந்து நடத்தியவர். மத்திய அரசின் சுங்கம் மற்றும் கலால் வரித்துறையில் கண்காணிப்பாளராகப் பணிபுரிகின்றார்.

எம்.எஸ்.எஸ். பாண்டியன்

புதுதில்லி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் தற்கால இந்திய வரலாற்றுத்துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகின்றார். இதற்கு முன்பு சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்திலும், கல்கத்தாவில் இயங்கி வரும் சமூக அறிவியல் ஆராய்ச்சிக்கான மையத்திலும் பேராசிரியராகப் பணியாற்றினார்.
இவர் எழுதிய நூல்கள்
'Brahmin and Non-Brahmin; Genealogies of the Tamil Politcal Present' (New Delihi; Permanent Black, 2007/2008) ' The Image Trap; M.G. Ramachandran in Films and Politics (London and New Delhi; Sage Publications, 1992) and 'Political Economy of Agrarian Change; Nanchilnadu, C. 1880-1939 (London and New Delhi; Sage Publications, 1990)

★ ஆடிடும் முறை ★

தாயக் கட்டையை உருட்டுங்கள்-தாயம் விழுந்ததும் காயை முதல் கட்டத்தில் வையுங்கள். காயிக்கு, விழிப்பு என்று பெயர் சூட்டிக்கொள்ளுங்கள். பிறகு, கட்டையில் விழும் எண்ணிக்கைக்குத் தக்கபடி காயை நகர்த்துங்கள். 29, 30 31, 32, நாலு கட்டங்களில் மட்டும் ஒவ்வொன்றுக்கும் ஒரு தாயம் விழுந்தால் தான் காயை நகர்த்தலாம். இரண்டு பேராக ஆடும்போது பொழுது போக்காகவும் இருக்கும்—இன உணர்ச்சிப் பிரச்சாரமாகவும் இருக்கும். பெண்களிடம் எழுச்சிப் பிரச்சாரம் புரிய இதுவும் ஒரு வழியல்லவா! விளையாடும்போதே படங்களைப் பற்றிய விளக்கங்களையும் கூறுங்கள்.



கயல் கவின்

ISBN: 978-81-909922-4-4

Code No: KK1005 Price: Rs. 500